# ஸ்ரீ ராமானுஜன்

ஸம்புடம் ௰ மலர் ௬

ஜூன் - ஜூலை 1958

DIGITIZED

# ஸ்ரீராமாநுஜன் 114-115

ஆசிரியர்: காஞ்சி. P. B. அண்ணங்கராசாரியர்.

வருடச்சந்தா ரூ. 5.

OFFICE OF THE REGISTRAR OF
[illegible] NOV 1958
MADRAS



விளம்பி ஹூ ஆனி, ஆடிமீ 1958 ஜூன், ஜூலைமீ

# ஸ்ரீ ராமாநுஜன் 114-115.

சென்னை ஸத்க்ரந்தப்ரகாசந ஸபையின் மூலமாக
மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை

ஆசிரியர் : ஸ்ரீகாஞ்சீ. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

| ஸம்புடம் 10 | விளம்பி௵ ஆனி, ஆடி௴<br>1958௵ ஜூன், ஜூலை௴ | மலர் 6, 7 |
|---|---|---|


## திருவாய்மொழி நூற்றந்தாதி பாசுரம்-6.

---

பரிவதிலீசன்படியைப் பண்புடனேபேசி *
அரியனலனாராதனைக்கென்று *—உரிமையுடன்
ஓதியருள்மாறன் ஒழிவித்தானிவ்வுலகில் *
பேதையர்கள் தங்கள்பிறப்பு.

| | | | |
|---|---|---|---|
| பரிவது இல் ஈசன் படியை | ஹேயகுணமற்றவனான எம்பெருமானுடைய (ஆராதிப்பதற்கு எளியன் என்கிற) ப்ரகாரத்தை | உரிமையுடன் | ஔசித்யத்தோடு |
| பண்புடனே பேசி | அழகாக அருளிச்செய்து | ஓதி அருள் | அருளிச்செய்த |
| ஆராதனைக்கு அரியன் அலன் என்று | (அவன்) ஆராதிப்பதற்கு அருமையானவனல்லன் என்று (இவ் விஷயத்தை) | மாறன் | நம்மாழ்வார் |
| | | இவ்வுலகில் | இவ்வுலகத்திலுள்ள |
| | | பேதையர்கள் தங்கள் | பாமரர்களினுடைய |
| | | பிறப்பு | பிறவியை |
| | | ஒழிவித்தான் | தொலைத்திட்டார். |

* * *—அகில ஹேயப்ரத்யநீககல்யாணைகதானனான ஸர்வேச்வரன் அவாப்தஸமஸ்த காமனாகையாலே நாம் இட்டதுகொண்டு நிறையவேண்டியவனல்லனாதலால் அன்போடு நாம் இடுவது அணுவளவேயாயினும் அது தன்னையே கொண்டு பரம த்ருப்தியடைகிறா னென்பதைத் தெரிவிக்கின்ற முகத்தால் எம்பெருமானுடைய ஆராதநஸௌகர்யத்தை ஆழ்வார் * பரிவதிலீசன் பதிகத்திலருளிச்செய்து இத் திருவாய்மொழியை உபகரித்தருளின வதனால் நம்போன்ற அறிவிலிகளின் பிறவித்துன்பத்தையும் போக்கியருளினாராயிற்று.

ஒவ்வொரு திருவாய்மொழியிலும் எம்பெருமானுடைய ஒவ்வொரு திருக்குணத்தை அநுபவித்து வெளியிட்டுவருகிற முறைமையில், இத்திருவாய்மொழியில் 'ஆராதனைக்கெளியன்' என்கிற ஒரு திருக்குணத்தை வெளியிட்டருள்கிறார். இக்குணம் வடமொழியில் (ஸ்வாராத்யத்வம் 'ஸ்வாராதத்வம்' எனப்படும். [ஸ்வேந ஸுகராராதநாஹ: ஸ்வாராத்ய:; தஸ்ய பாவ: ஸ்வாராத்யத்வம். சிரமமின்றி எளிதாகவே ஆராதிக்க உரியனாயிருக்குந்தன்மை என்றவாறு.

இதர தெய்வங்களிற் காட்டில் எம்பெருமான் எத்தனையோவிதங்களால் நெடுவாசி பெற்றிருப்பதுபோலே இவ்வகையாலும் நெடுவாசிபெற்றிருப்பன். 'ஆடு பலிகொடு, கோழி பலிகொடு' என்று அருந்தேவைகளையிட்டு மஹா பரிச்ரம ஸாத்யங்களான ஆராதனைகளை அபேக்ஷித்திருக்கும் தேவதாந்தரங்கள். எம்பெருமான்படியோ அப்படியன்று; நாம்

20.8238



[illegible] கொண்டு த்ருப்தியுடைமை அவனது ஸ்வரூபம் என்பது சாஸ்த்ரங்களில் தேர்ந்த விஷயம். அதுவே இத் திருவாய்மொழிக்கு ப்ரமேயம்.

கீழ்த் திருவாய்மொழியிலே நைச்யத்தைச் சிந்தித்து அகன்ற ஆழ்வாரை எம்பெருமான் பொருந்தவிட்டுக்கொண்டது சீலகுணத்தாலெனப்பட்டது: அவன் சீலவானாயிருந்தாலும் அவனை ஆராதிக்கப் புகுமிடத்தில் குறைவில்லாமல் ஆராதித்துத் தீரவேண்டுமே; நாமோ க்ஷுத்ரர்களும் க்ஷுத்ரமான உபகரணங்களையுடையவர்களுமாயிராநின்றோம்; ஆன பின்பு எங்ஙனே அவனை ஆச்ரயித்து ஆராதித்துத் தலைக்கட்டுவது? என்கிற சங்கை அடுத்தபடியாக விளையக்கூடியதாதலால் அதனைப் பரிஹரித்துக்கொண்டு இந்தப் * பரிவதிலீசன் திருவாய்மொழி அவதரிக்கின்றதென்க.

எம்பெருமானுக்கு நாம் சில வஸ்துக்களை இடுவதானது அவனுக்கு ஏற்கெனவேயில்லாதவொரு பூர்த்தியை உண்டாக்குவதற்காகவா? நாம் ஸத்தை பெறுவதற்காகவா? என்று ஆராயவேண்டும்; அவனோ அவாப்தஸமஸ்தகாமன்; அன்னவன் நாமிட்டதுகொண்டு பூர்த்தியடைகிறானென்பது அஸம்பாவிதம். கடலிலே மேகம் வர்ஷிப்பது கடல் நிரப்புவதற்காகவன்றே; "வஷ்ஜ்வயி தெரியாவல ஸம்பந்தாத் ஸ்வாத்மலாப:=வர்ஷபிந்தோரிவாப்தௌ ஸம்பந்தாத் ஸ்வாத்மலாப:" என்று (ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில்) பட்டர் அருளிச்செய்தபடியே, தான் ஸத்தை பெறுதற்காகவே மேகம் கடலிலும் வர்ஷிக்கின்றதென்பது பரமார்த்தம். அதுபோலவே ஸ்வத: பரிபூர்ணனான பரமபுருஷன் திறத்திலே நாம் சில பொருள்களை ஸமர்ப்பிப்பது நமது ஸ்வரூபம் நிறம்பெறுதற்கேயன்றி, அவனை நிரப்புவதற்கன்று என்பது வெளிப்படை. ஆகவே, நாம் சிறந்த பெரும் பொருள்களைத்தேடி ஆராதிக்கவேண்டுமென்பதில்லை; இடுகிறபொருள் எதுவாயினும், இடுவது ப்ரேம பூர்வகமாகவேணுமென்பதொன்றிலேயே நியதியுள்ளது.

* மாறன் பணித்த தமிழ்மறைக்கு ஆறங்கங்கூற அவதரித்த திருமங்கையாழ்வாரும் "கள்ளார்துழாயும் கணவலரும் கூவிளையும், முள்ளார்முளரியும் ஆம்பலும் முன்கண்டக்கால், புள்ளாயோரேனமாய்ப் புக்கிடந்தான் பொன்னடிக்கென்று, உள்ளாதாருள்ளத்தை உள்ளமாக்கொள்ளோமே" என்றருளிச் செய்கிறார். திருத்துழாய் முதலிய எந்த வஸ்துவைக் கண்டாலும் 'இது எம்பெருமானுக்குச் சாத்தத்தக்கது' என்று அத்யவஸாயங்கொள்ளாதாருடைய நெஞ்சை நெஞ்சாகக் கொள்ளமாட்டோமென்றுரைக்கின்ற இப்பாட்டில், எம்பெருமானுக்கே உரித்தான திருத்துழாயோடு விஜாதிய வஸ்துக்களுங்கூட்டியெடுக்கப் பட்டிருப்பதால், எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்கவேணுமென்கிற சுத்தபாவமிருந்துவிட்டால் கொள்ளுகிற புஷ்பம் எதுவாயிருந்தாலும் குற்றமில்லை; 'செண்பகமல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சி' என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிற புஷ்பங்களாகவேயிருக்கவேணுமென்கிற நியதியில்லை; ஏதேனுமொரு பூவாயிருக்கலாமென்பதும் பக்திப்பெருங்காதலே முக்கியமானது என்பதும் தோற்றுவிக்கப்படும்.

ஸ்ரீஜகந்நாதத்திலெம்பெருமான் செண்பகப்பூவை உகந்து சாத்திக்கொள்வது வழக்கமாதலால் முற்காலத்தில் சில ராஜகுமாரர்கள் அப்பெருமானுக்குச் செண்பகப்பூ ஸம்பாதித்து ஸமர்ப்பிக்கவேணுமென்று கடைவீதியேறச் சென்றனர்; அங்குப் பூவெல்லாம் விற்றுப்போய் ஒரே ஒரு பூ மாத்திரம் மிகுந்திருந்தது. விலைக்கு வாங்கவந்த ராஜகுமாரர்கள் செல்வச் செருக்குடையவராதலால் ஒவ்வொருவரும் இப்பூவை நாமே பெற்றுப்போய்



ஸமர்ப்பிக்கவேணுமென்கிற ஆவல்கொண்டவராகி மேன்மேலும் விலையை ஏற்றிக்கொண்டேவந்தார்கள். கடைசியாக அளவற்ற விலைகொடுத்து ஒரு ராஜபுத்திரன் அதை வாங்கிப் பெருமாளுக்குச்சாத்த, அன்றிரா அவனுடைய கனவிலே எம்பெருமான் காட்சிதந்து 'நீ இட்ட பூ எனக்குக் கனத்துச் சுமக்கவொண்ணாததாயிருக்கிறது' என்றருளிச் செய்தான்—என்ற இதிஹாஸமும் அப்பாசுரத்தின் வியாக்கியானத்தில் பெரியவாச்சான் பிள்ளையாலருளிச் செய்யப்பட்டுள்ளது. இதனால், ஸ்நேஹ பூர்வமாகப் பூவிட்டால் அதுவே எம்பெருமானுக்கு அலப்யலாபமாயிருக்குமென்றதாகும். இது புஷ்பவிஷயமொன்றில் மாத்திரமன்று; நாம் பகவானுக்கு இடுவது எதுவானாலும் அஃதெல்லாவற்றிற்குமே இந்த நியாயம் ஒக்கும்.

கீதாசார்யனும், * பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி। ததஹம் பக்த்யுபஹ்ருதமச்நாமி ப்ரயதாத்மந:=பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி, ததஹம் பக்த்யுபஹ்ருதமச்நாமி ப்ரயதாத்மந: * என்றருளிச் செய்கிறான். இடுகிற பொருளில் வாசி பார்ப்பதில்லை, இடுகிறவன் நெஞ்சில் ஈரமுள்ளதா என்பதொன்றையே பார்ப்பேன் என்றன்றோ இதிற் சொல்லுவது. * அந்யத் பூர்ணாதபாம் கும்பாத் அந்யத் பாதாவநேஜநாத், அந்யத் குசலஸம்ப்ரச்நாத் ந சேச்சதி ஜநார்த்தந:=அந்யத் பூர்ணாதபாம் கும்பாத் அந்யத் பாதாவநேஜநாத், அந்யத் குசலஸம்ப்ரச்நாத் ந சேச்சதி ஜநார்த்தந: * என்றும் * யா: க்ரியா: ஸம்ப்ரயுக்தா: ஸ்யுரேகாந்தகதபுத்திபி:। தா: ஸர்வா: சிரஸா தேவ: ப்ரதிக்ருஹ்ணாதி வை ஸ்வயம்=யா: க்ரியா: ஸம்ப்ரயுக்தா: ஸ்யு: ஏகாந்தகதபுத்திபி:, தா: ஸர்வா: சிரஸா தேவ: ப்ரதிக்ருஹ்ணாதி வை ஸ்வயம். * என்றுள்ள ப்ரமாண சதங்களாலும் எம்பெருமான் ஆராதனைக் கெளியனென்பது விசதீகரிக்கப்பட்டுள்ளது. அந்தத் திருக்குணத்தையே முதற்பத்தின் ஆறுந்திருவாய்மொழியான * பரிவதிலீசனில் ஆழ்வார் அநுபவித்து வெளியிட்டருளினாராயிற்று. .... (*)

---

# திருவாய்மொழி நூற்றந்தாதி பாசுரம்—7.

---

பிறவியற்று நீள்விசும்பில் பேரின்ப முய்க்கும்
திறமளிக்குஞ் சீலத் திருமால்—அறவினியன்
பற்றுமவர்க் சென்று பகர்மாறன் பாதேமே
உற்றதுணை யென்றுளமே யோடு.

| | | | |
|---|---|---|---|
| உள்ளமே | நெஞ்சே! | அற இனியன் என்று | மிகவும் போக்யனாயிருப்பனென்று |
| பிறவி அற்று | ஜன்மஸம்பந்தமற்று | பகர் | அருளிச்செய்த |
| நீள்விசும்பில் | பரமாகாசமென்கிற பரமபதத்தில் | மாறன் | நம்மாழ்வாருடைய |
| பேர் இன்பம் உய்க்கும் திறம் | பரமாநந்த மநுபவிக்குந் திறத்தை | பாதமே | திருவடிகளே |
| அளிக்கும் சீலம் | அநுக்ரஹிக்கவல்ல ஸ்வபாவமுடைய | உற்ற துணை என்று | (நமக்கு) ப்ராப்தமான துணையென்றுகொண்டு |
| திருமால் | எம்பெருமான் | ஓடு | விரைந்துசென்று பணி. |
| பற்றுமவர்க்கு | தன்னைப்பற்றி பணியுமவர்கட்கு | | |

ஸம்ஸாரஸம்பந்தத்தையறுத்துத் திருநாட்டில் நித்யாநந்தமநுபவிக்கப் பெறுவதான பேற்றையளிக்கவல்ல எம்பெருமானுடைய ஆச்ரயணமானது சுவையற்றதாக இராமல் மிகவும் இனிதாகவேயிருக்குமென்று ஆச்ரயணத்தின் போக்யதையை யருளிச்செய்த ஆழ்வாருடைய திருவடிகளே நமக்குத் தஞ்சமென்றதாயிற்று. ... .... (*)

கீழ்த் திருவாய்மொழியில் எம்பெருமான் ஆராதனைக்கு அரியனல்லன். மிகவும் எளியன் என்பதை அருளிச்செய்தார். ஆராதனம் எளிதாயிருந்தாலும் ஆச்ரயணம் இனிதாயிருந்தாலன்றோ நெஞ்சு பொருந்தும்; உலகில் பலபேர்கள் நாம் இட்டதுகொண்டு பரம த்ருப்தியடையுமவர்களாய் ஆராதனைக்கு எளியராயிருக்கக்கூடும்; இருந்தாலும் அவர்களுடைய ஆச்ரயணம் நமக்கு இனிமைமிக்கதாயிருந்தாலன்றிப் பயனில்லையன்றோ: அப்படியே எம்பெருமானும் ஆராதிக்க எளியனானாலும் ஆச்ரயணத்தில் ஸாரஸ்யமுடையனாயிருக்க வேண்டுவதொன்று உண்டாதலால் அஃது அப்படியே யுண்டென்பதை * பிறவித் துயரற வென்னும் திருவாய்மொழியிலருளிச்செய்கிறார்.

"பகவத் ஸமாச்ரயணமாகிறதுதான் இதுக்கு இட்டுப் பிறவாத ஸர்வேச்வரனும் ஆசைப்படும்படி ஹோமரூபமாயிருப்பதொன்றிறே" என்பது நம்பிள்ளை யருளிச்செயல். தன்னுடைய வைலக்ஷண்யத்தை எம்பெருமான் தானும் பார்த்துத் தனக்குத்தானே அடிமை செய்துகொள்ள விரும்பும்படியாயிருக்குமென்று ஒரு அதிசயோக்தியாக இது அருளிச்செய்தபடி. 'இப்படியும் இருக்குமா? எம்பெருமான் அவ்வளவு உன்மத்தனா?' என்று சிலர் நினைத்துவிடக்கூடும்; 'எம்பெருமானுடைய இனிமை ஒப்புயர்வற்றது' என்று காட்டுவதில் மாத்திரம் இந்த ஸ்ரீஸூக்தி நோக்குடையதென்று கொள்க.

இதற்கு ஸம்வாதமாக பட்டருடைய ஒரு ஸ்ரீஸூக்தியைக் காட்டுகிறோம், காண்மின்;—பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவ பூர்வசதகத்தில், "ஸ்வ ஏஷ தாக்ஷ்யேண வஹநாத் ஹிவதி ஸ்யதே நாதநா வாஸுதேவோ ஸ்ரீஸம்ஹிதா ஆத்மா நயந ஸாக்ஷாக்ருதம் ஸேவ்யமாநாஜ தளவத் = அக்ரே தார்க்ஷ்யேண பச்சாத் அஹிபதி சயநே நாத்மநா பார்ச்வயோச் ச ஸ்ரீபூமிப்யாம் அத்ருப்த்யா நயந சுளகைஸ் ஸேவ்யமாநாம்ருதௌகம்." என்றருளிச் செய்தார்; உத்ஸவமூர்த்தியாகிய நம்பெருமாளை மூலமூர்த்தியாகிய பெரிய பெருமாள் பின்புறத்திலும், பெரிய திருவடி முன்புறத்திலும், திருமடந்தை மண்மடந்தைகள் இரண்டருகுமிருந்துகொண்டு எவ்வளவு அநுபவித்தாலும் த்ருப்தி பிறப்பதேயில்லை யென்பது இதன் கருத்து. எம்பெருமானுடைய திவ்யமங்கள விக்ரஹாநுபவம் பிறர்க்கு எப்படி ஸ்ப்ருஹணீயமோ அப்படி ஸ்வாத்மாவுக்கும் ஸ்ப்ருஹணீயமாயிருக்குமென்பது விளங்க இதில் * அஹிபதி சயநே ஆத்மநா * எனப்பட்டது.

ஆக இதனால் எம்பெருமானுடைய படிகள் எம்பெருமான்றனக்கும் பரம போக்யமாயிருக்குமென்பது விளங்கும். இத்தகையதான போக்யதையே * பிறவித் துயரறவென்னும் திருவாய்மொழியில் ப்ரதிபாதிக்கப்படுகின்றதென்க. * தூயவமுதைப் பருகிப்பருகி * இத்யாதிகள் இத்திருவாய்மொழிக்கு உயிர்நிலையாயிருக்கும். .... ... (*)

---

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

# அத்புதோபந்யாஸமாலை.

(ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் எழுதிய உபந்யாஸத்தொகுதி)

ஒரு சிறு விண்ணப்பம்: எப்போதும் லோகாபிராமமான விஷயங்களையே எழுதி வெளியிட்டுக் கொண்டிருக்கவேணு மென்பது அடியேனுடைய அவா. ஒருவருடைய மனமும் கன்றுதபடி ஸர்வஸஹ்ருதய ஹ்ருதயஹாரியான விஷயங்களையே எழுதவேணு மென்கிற ஸங்கல்பத்திற்கு மாறாகச் சில ஸமயங்களில் சில மறுப்புரைகளும் அவர்ஜநீயமாக எழுத நேர்ந்துவிடுகிறது. அவை எழுதாவிடில் லோக க்ஷோபம் விளையுமாதலால் அவற்றை யெழுத வேண்டுவதும் ப்ராப்த கைங்கரியமாகிறது. அப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் இத்தகைய லோகாபிராம உபந்யாஸ விசேஷங்களை யெழுதி வெளியிட்டே மனச்சாந்தி பெற வேண்டியதாகிறது. இதற்கு முன்னே ஸ்ரீ தேசிக ஸஹஸ்ரநாம விமர்சம் எழுதி வெளியிட்டபோது உடனே மதுரோபந்யாஸமாலை யொன்று வெளியிட்டு மனச் சாந்தி பெற்றோம். ப்ரக்ருதம் த்ரவிடாத்ரேய தர்சநவிமர்ச மென்கிற மறுப்பு நூலொன்று எழுதி வெளியிட நேர்ந்த[illegible]தன்பதை உலகமுணரும். இது ஒரு அத்வைதி பண்டிதருடைய எல்லை கடந்த கோலாஹலங்களைக் கண்டு வருத்தக் கடலிலாழ்ந்த ஸ்ரீவைஷ்ணவர்களின் மகிழ்ச்சிக்காகவே எழுதப்பட்டதாயினும் கண்டன க்ரந்தமே யாதலால் மனச்சாந்திபெற நினைத்து இந்த அத்புதோபந்யாஸமாலையை யெழுதுகின்றேன். இது உபந்யாஸகர்களுக்குப் பரமோபகாரகமாயிருக்கும்.*

---

## 1. உகாரார்த்த ரஹஸ்ய விவரணம்.

நம் ஆசார்ய ஸார்வபௌமர்கள் திருமந்த்ரார்த்தம் நிர்வஹித்தருளுங்கால் அத்திருமந்த்ரத்தில், நமக்கும் எம்பெருமானுக்குமுள்ள நவவித ஸம்பந்தங்கள் தெரிவிக்கப்படுவதாக நிரூபித்தருள்வர்கள். *பிதா ச ரக்ஷகச் சேஷீ பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி:, ஸ்வாமீ ஆதாரோ மமாத்மா ச போக்தா ச ஆத்யமநூதித:* என்னுமிந்த ச்லோகத்தினால் அந்த நவவித ஸம்பந்தங்களும் உணரத் தக்கன. அதில் ப்ரணவத்தின் நடுவெழுத்தான உகாரத்தின் பொருளை விவரித்தருளுமிடத்து "ஸ்தாநப்ரமாணத்தாலே உகாரம் அவதாரணார்த்தம்" என்றார்கள். எம்பெருமானொருவன் தவிர மற்றொருவற்கும் அடிமைப்படா தொழிகையாகிற அநந்யார்ஹ சேஷத்வமே உகாரார்த்தமென்று தேறி நின்றது. இதுதன்னையே ஸ்ரீகுலசேகராழ்வார் தமது திருமொழியில் (5—2) * கண்டாரிகழ்வனவே காதலன் தான் செய்திடினும், கொண்டானை யல்லால் அறியாக் குலமகள் போல்* என்கிற பாசுரத்தினால் அது

ஸந்தித்தார். ஒருத்தி ஒருவனுக்கே உரியவளா யிருப்பது போல ஜீவன் பரமாத்மாவுக்கே உரியவனுயிருக்க வேண்டும்படியை உகாரம் உணர்த்துகின்றது. இதுவே யாயிற்று உகாரார்த்தம். இதனை அடிப்படையாகக் கொண்டு இவ்வுபந்யாஸம் நிகழ்கின்றது.

ஸம்ஸாரிசேதநன் ஸம்ஸாரபந்தத்தில் நின்றும் விடுபட்டுத் திருநாடு சென்று சேர்வதானது பரம புருஷனோடு பெறும் பரமபோக மஹோத்ஸவமென்று கொண்டு மகிழ்ந்திருக்கவேணுமே யொழிய, சிறிதும் வருந்தவேண்டியதில்லை யென்று தத்வ ஜ்ஞானிகள் தெளிந்திருப்பர்கள். உண்மையில் இது பாணிக்ரஹண பூர்வகபரமபோக மஹோத்ஸவந்தானென்பதை இங்கு விரிவாக நிரூபிக்கிறோம். பெண்மகளுக்கும் புருஷனுக்கும் விவாஹம் நடப்பது உலக வியற்கை. எம்பெருமான் பரமபுருஷனென்று பேர்பெற்றவனுகையாலே அவன் புருஷனென்பது நிர்விவாதம். இங்கே பெண்களாய்ப் பிறந்தவர்களுக்கு அப்பரமபுருஷனோடு விவாஹமும் போகமும் ப்ராப்தமாகலாம்; இங்கு ஆண்களாயுள்ளவர்களுக்குப் பரமபுருஷனோடு விவாஹமோ போகமோ ப்ராப்தமாவதற்குத் தகுதியில்லையே யென்று முன்னம் ஒரு சங்கை யுண்டாகக்கூடும். அது வேண்டா. ஆண்மை பெண்மையென்னும் வாசியானது அழியுந்தன்மையதான உடலிற் காணப்படுமதே யொழிய சாச்வதமான ஆத்மாவில் காணப்படுமதன்று. ஆத்மஸ்வரூபத்தை யுற்று நோக்கினுல் அதற்குப் பெண்மையே இயற்கையான வடிவென்று தேறலாம். எங்ஙனே யென்னில்; திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்தில் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் ஒன்பது வகையான உறவுகள் [நவவிதஸம்பந்தம்] உள்ளனவாக நிரூபிக்கப்படுவதில் பர்த்ருபார்யாபாவரூப ஸம்பந்தம் ப்ரணவத்தில் இடைச் சொலான உகாரத்தில் தேறுவதென்று சொன்னேம். அவதாரணார்த்தகமான உகாரத்தினுல் தேறுவது அநந்யார்ஹசேஷத்வம். அதாவது எம்பெருமானொருத்தனுக்கே உரிமைப் பட்டிருத்தல். இதுவாயிற்று ஸ்த்ரீதர்மம். ஆகவே ஜீவாத்மாவை ஒரு பெண் மகளாகவே நினைக்கவேணும். ஆழ்வார்கள் அடிக்கடி பெண் பாவனையோடு பாசுரம் பேசுவதும் இதுபற்றியே. ஆண்களாய்ப் பிறந்த ஆழ்வார்கள் எதற்காகப் பெண்மையை ஏறிட்டுக் கொள்ளுகிறார்களென்று சில அறிவிலிகள் நினைப்பதும் கேட்பதுமுண்டு; அது தவறு. ஆத்மாவுக்குப் பெண்மை வந்தேறியா யிருந்தாலன்றோ அதனை ஏறிட்டுக்கொள்ளுவதாக நினைக்கலாம். அது வந்தேறி யன்றிக்கே இயற்கை வடிவமாகவே யுள்ளதென்பதும் இந்த வியாஸத்தினுல் தெளியப் பெறலாகும்.

சரீரத்திற்குப் பிறப்பு உண்டே யொழிய ஆத்மாவுக்குப் பிறப்புமிறப்பு மில்லை யென்பது ஸாதாரணமான நூற்கொள்கை. *அஸந்நேவ ஸ பவதி* [தைத்திரீய உபநிஷத்] என்கிற ச்ருதிவாக்யத்தையும், *அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்* (திருச்சந்தவிருத்தம்-64) என்கிற திருமழிசைப்பிரான் பாசுரத்தையும் உற்றுநோக்குமிடத்து ஆத்மாவுக்கும் பிறப்பிறப்புகளுண்டென்று உணரலாம். ஆத்மா பிறக்கும்போது பெண்ணாகத் தான் பிறக்கின்றதென்று அறியக் கிடக்கின்றது. உடலைப் பிறப்பிக்க ஒரு தாயும் ஒரு தகப்பனும் ஏற்படுகிறார்கள். அப்படியே ஆத்மாவைப் பிறப்பிக்கவும் ஒரு தாயும் தகப்பனுமுளர். இதை மஹர்ஷிகளே சொல்லிவைத்தார்கள்—*சரீரமேவ மாதாபிதரௌ ஜநயத:, ஸ ஹி வித்யாதஸ் தம் ஜநயதி தத் ச்ரேஷ்டம் ஜந்ம* என்றார்கள். இதனுல் ஆத்மாவுக்கு ஆசார்யன் பிதாவென்றும் 'வித்யா' மாதாவென்றும் விளங்குகிற்று. வித்யா என்று சொல்லப்படுவது திருமந்த்ரமே யாகும். ஆசார்யன் திருமந்த்ரமுகேந ஸ்வரூபஜ்ஞானத்தை யுண்டாக்கினபோது இவ்வாத்மஸத்பாவமாகையாலே (ஸ்த்ரீலிங்கசப்தமான) வித்யையை மாதாவாகவும் ஆசார்யனைப் பிதாவாகவும் கொள்ளவடுக்கும். நம்மாழ்வார் ஆசார்யனை *தஞ்சமாகிய தந்தை* [திருவாய்



மொழி 3-6-9] என்கிற சொல்லால் குறிப்பிட்டனர். 1. தந்தை 2. ஆகிய தந்தை, 3 தஞ்சமாகிய தந்தை என்று மூவகைப் படுவர்கள் பிதாக்கள். 1. சரீரோத்பத்திக்கு மாத்திரம் ஹேதுவாயிருந்து *ஸ பித்ரா ச பரித்யக்த: *[ஸ்ரீ ராமா-ஸு॰ந்.] இத்யாதிப்படியே ஆபத் காலங்களிலே கைவிடுகின்ற பிதா வெறும் தந்தை. 2. உலகுக்கெல்லாம் தந்தை யென்று பேர்படைத்து ஆபத்துக்களிலும் ரக்ஷிக்குமவனான ஸர்வேச்வரன் 'ஆகிய தந்தை' எனத்தகுவன். 3. அவனுங்கூட *ஸம்ஸாரபந்தஸ்திதிமோக்ஷஹேது:* என்கிறபடியே ஸம்ஸாரமோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவாயிருப்பன்; அப்படியன்றியே ஸ்வரூபத்தை யுண்டாக்குமவனாய் ஒரு தசையிலும் கைவிடாதே ஹிதைஷியாய் உஜ்ஜீவனத்திலேயே ஊன்றிப் போருமவனுயிருந்து கொண்டு மோக்ஷைகஹேதுவாய் ஸர்வாத்மநா சரண்யனுயிருக்கு மாசார்யன் 'தஞ்சமாகிய தந்தை' எனத்தகுவன். ஆக, ஜீவாத்மாவாகிற பெண்குழந்தைக்கு வித்யை தாயென்றும், ஆசார்யன் தந்தை யென்றும் தேறிற்று.

இப்படி வித்யை என்கிற தாயினிடத்தில் ஆசார்யனுகிற தந்தையினுல் பெறுவிக்கப்பட்ட ஆத்மக் குழந்தையானது வளர்ந்துவருகிற விதம் இனிச் சொல்லப்பட வேண்டும். உலகில் குழந்தையை வளர்ப்பவர்கள் தேனும் பாலுமமுதுமான போக்ய வஸ்துக்களையிட்டு வளர்ப்பர்கள். இங்கும் அவ்வண்ணமாகவே *எனக்கென்றும் தேனும் பாலுமமுதுமாய திருமால் திருநாமம்* (பெரிய திருமொழி 6-10-6) என்றும், *எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே திருமாலிருஞ்சோலைக் கோனே* என்றும் சொல்லுகிறபடியே தேனும் பாலுமமுதும் போலே பரம போக்யமான பகவந்நாமங்களையும் பகவத் விஷயத்தையுமிட்டு ஆசார்ய பிதாவால் இக்குழந்தை வளர்க்கப்படுகிறது. *ஒரு மகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டுபோனான்* [பெரியாழ்வார் திருமொழி. 3-8-4] என்கிற பாசுரத்தையும் சேர்த்து நோக்கினுல் இக்குழந்தையானது அநந்யார்ஹ சேஷத்வாதிகளாலே ஸ்ரீமஹாலக்ஷ்மியோடொக்க வளர்க்கப்படுகிற தென்னுமிடமும் திருமாலாகிற நாயகனுல் கைக்கொள்ளப்படுகிற தென்னுமிடமும் தெரியவரும்.

இப்படி குழந்தை வளர்ந்துகொண்டே செல்கின்றது. விவாஹத்திற்கு ஏற்ற வயதும் வருகின்றது. உலகில் விவாஹத்தை நடத்த முற்படுமவர்கள் பல விஷயங்களைப் பார்க்கிறார்கள். * கந்யா வரயதே ரூபம் மாதா வித்தம் ச்ருதம் பிதா, பாந்தவா: குலமிச்சந்தி ம்ருஷ்டாந்நமிதரே ஜநா:* என்று சொல்லுகிற படியே, பெண்ணானவள் அழகைப்பார்ப்பள்; பெண்ணைப்பெற்றவள் ஐச்வர்யத்தை விரும்புவள்; பிதாவானவர் ஜ்ஞாநஸம்பத்தியை நோக்குவர்; உற்றாருறவினர் தாங்கள் கலந்து பரிமாறுகைக்குரிய குலத்தை யபேக்ஷிப்பர்கள்; மற்றைப்படி வழிப்போக்கர்களா யிருப்பவர்கள் வயிறார நல்லுணவு கிடைப்பதை நோக்கியிருப்பர்கள். அழகும் செல்வமும் அறிவும் குலமுமுணவுமெல்லாம் ஒருங்கே ஒன்று சேரப்பெற்ற வரன் உலகில் வாய்ப்பது அரிதே. ஏதோ ஒன்றிரண்டு நலம் ஒன்று சேரும். இவையெல்லாம் பரிபூர்த்தியாக ஒன்றுசேர்ந்த விடம் எம்பெருமானே யாம். அழகைப்பற்றிச் சொல்லில், * எழிலுடையவம்மனைமீர்! என்னரங்கத்தின்னமுதர் குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழிலெழுகமலப் பூவழகர் * [நாச்சியார் திருமொழி 11-2] என்னும்படி யிருப்பன். செல்வத்தைப்பற்றிச் சொல்லில் * பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும், அங்காதும் சோராமே ஆள்கின்ற வெம்பெருமான், செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார் * [ஷை 10-3.] என்னும்படியே உபயவிபூதிநாயகத்வமாகிற செல்வம் அநந்யஸாமாந்யமானது. கல்விச் செல்வத்தைப் பற்றிச் சொல்லில் * கலைகளும் வேதமும் நீதி நூலும் கற்பமும் சொற்பொருள்தானும் மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினாலருள் செய்தவராய், * இவர் வாயில் நல்வேத மோதும் வேதியர்

வானவராவர் தோழீ * (பெரியதிருமொழி 9-2-1) என்னும்படி யிருப்பவராகை
யாலே அதிலும் உயர்வறவுயர்ந்தவர். இனி குலத்தைப்பற்றிச் சொல்லிலோ
* குலந்தரும்.............நாராயணாவென்னும் நாமம் * (பெரியதிருமொழி 1-1-9)
என்று தன் பெயரைச் சொன்னவர்களுக்கெல்லாம் மாசில் குடிப்பிறப்பைத் தரு
மவன் ஸ்வயம் ஸத்குலப்ரஸூத னென்பது சொல்லவேணுமோ? இனி ம்ருஷ்
டான்னத்தில்தான் குறையுண்டோ? * கணைநாணிலோவாத் தொழில் சார்ங்கன்
தொல்சீரை நன்னெஞ்சே! ஓவாத வூணாக வுண் * [பெரியதிருவந்தாதி,] *உண்டு
களித்தேற்கு உம்பரென்குறை * (திருவாய்மொழி 10-8-7) என்னும்படியாக
கல்யாணகுண ம்ருஷ்டான்னம் அபரிமிதம். ஆகவிப்படி ஒன்றிலும் குறையில்
லாத வரன் ஸர்வேச்வரனேயாகையாலே அந்த வரனுக்கு வாழ்க்கைப்படுவதற்கா
கவே இந்த ஜீவாத்மக் குழந்தை வளர்க்கப்பட்டுவருகிறது. ஆனதுபற்றியே இக்
குழந்தையை நோக்கிச் சொல்லுமிடத்து * பின்னைகொல் நிலமாமகள்கொல்
திருமகள்கொல் பிறந்திட்டாள்! * [திருவாய்மொழி 6-5-10.] என்றும், * காவியங்
கண்ணி யெண்ணில் கடிமாமலர்ப் பாவை யொப்பாள் * (பெரியதிருமொழி 3-7-9)
என்றும் சொல்லப்படுகிறது.

ஜநகசக்ரவர்த்தியால் பெற்று வளர்க்கப்பட்டு வந்த ஸீதாபிராட்டியானவள்
* பதிஸம்யோகஸுலபம் வயோ த்ருஷ்ட்வா ச மே பிதா, சிந்தார்ணவகத: பாரம்
நாஸஸாத அப்லவோ யதா * (ஸ்ரீ ராமா. அயோ. 118-34.) என்று தானே தன்
வாயாற் சொல்லும்படியாக அவளுடைய பிதா அநுரூபவரன் காணாமையாலே
சிந்தைக்கடலில் ஆழ்ந்திருந்தா னென்று தெரியவருகின்றது. இந்த ஜீவாத்மக்
குழந்தையைப் பெற்ற ஆசார்ய பிதா அப்படி சிந்தைக்கடலில் ஆழவேண்டிய
அவசியமில்லை; தகுந்த வரனை முன்னாடியே தான் ஸங்கல்பித்திருக்கையாலே
அந்த வரன் இக்குழந்தைக்கும் ஸ்ப்ருஹணீயனாயிருக்கிறானா? என்பதொன்றே
பார்க்கவேண்டியதாயிற்று. குழந்தையைக் கேட்கிறார் பிதா—'அம்மா! உனக்கு
விவாஹத்திற்குரிய வயது வாய்த்து விட்டதே, இனி விவாஹம் நடக்கவேணுமே;
யாரை நீ மணந்துகொள்ள விரும்புகிறாய்?' என்று. அதற்குக் குழந்தை
சொல்லுகிற விடை யாதெனில்; * வானிடைவாழு மவ்வானவர்க்கு மறையவர்
வேள்வியில் வகுத்தவவி, கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து கடப்பதும் மோப்பதும்
செய்வதொப்ப, ஊனிடையாழி சங்குத்தமர்க்கென்று உன்னித்தெழுந்த வென்தட
முலைகள், மானிடவர்க்கென்று பேச்சுப் படில் வாழகில்லேன் * (நாச்சியார்திரு
மொழி 1-5.) என்றும், * அங்கைத்தலத்திடை யாழிகொண்டானவன் முகத்தன்றி
விழியேனென்று, செங்கச்சுக்கொண்டு கண்ணாடையார்த்துச் சிறுமானிடவரைக்
காணில் நாணுங் கொங்கைத்தலமிவை நோக்கிக் காணீர் கோவிந்தனுக்கல்லால்
வாயில் போகா (ஷை 12-4.) என்றும், * அன்றிப்பின் மற்றொருவற்கென்னைப்
பேசலொட்டேன் மாலிருஞ்சோலை யெம்மாயற்கல்லால், கொற்றவனுக்கிவளா
மென்றெண்ணிக் கொடுமின்கள் கொடீராகில் கோழம்பமே * (பெரியாழ்வார் திரு
மொழி 3-4-5.) என்றும் இங்ஙனேயாயிற்று விடை கூறுவது. இதுகேட்டுப் பிதா
வுக்குப் பரமஸந்தோஷம்; நம் எண்ணமே இக் குழந்தைக்கு முள்ளதாயிற்றே;
நாமொன்று நினைக்க இவள் வேறொன்று நினையாதபடி நாம் நினைத்த வரனையே
இவளும் வரிக்கும்படியாக நேர்ந்ததே யென்று பரமானந்தமடைந்து பின்னையும்
குழந்தையைக் கேட்கிறார்—குழந்தாய்! நீ பகவானை மணந்துகொள்வதாகச்
சொல்லுகிறாயே; அவர் மணந்துகொள்வாரா? ஸகல ஜகத்பிதாவான அவர்
ஒருவர்க்கும் பதியாகவோ பர்த்தாவாகவோ ஆகக்கூடியவரன்றே; அவரை நீ
விரும்பிப் பயனென்? என்கிறார். அதற்குக் குழந்தையின் விடை;—'பிதாவே!
ஏன் அப்படிச் சொல்லுகிறீர்? நீர் எனக்குக் கற்பித்த முதுமொழிகளில் * பதிம்
விச்வஸ்யாத்மேச்வரம் * (நாராயணாநுவாகம்) என்றும், *கௌஸல்யா லோகபர்த்தாரம்



ஸுஷுவே யம் மநஸ்விநீ * (ஸ்ரீ ராமா. ஸுந். 38-58.) என்றும், * பணவாளர
வணைப் பற்பல காலமும் பள்ளிகொள் மணவாளர் * (நாச்சியார் திருமொழி 10-6.)
என்றும் அந்தப் பரமபுருஷரை விச்வபதியென்றும் லோகபர்த்தா வென்றும்
மணவாளப்பிள்ளை யென்றும் தெரிவித்திருக்கவில்லையா? என்னைப்போல் எத்த
னையோ பேர்களுக்கு அவர் பதியாகவும், பர்த்தாவாகவும், மணவாளராகவும் வாழ்
கின்றவரல்லரோ? அவர் எனக்குப் பர்த்தாவாகத் தடையென்? என்றாள். அது
கேட்டு உள்கனிந்த தந்தை மீண்டும் சொல்லுகிறார்—'குழந்தாய்! பல கோடி நூறா
யிரம்பேர்களை மனைவிமாராகக் கொண்டிருக்கின்ற விச்வபதி லோகபர்த்தாவை நீ
மணந்துகொண் டாயாகில் பட்டமஹிஷிகளான முன்னைத் தேவிமார்கள் பலரிருக்க
உன்னை அவர் கண்ணெடுத்துப் பார்ப்பரோ? ஏகதாரவ்ரதனான வொரு வரனை
மணந்துகொண்டாலல்லவோ நெஞ்சு குளிர வாழலாம்; ஆலோசித்துப் பார்'
என்றார்; அதற்குக் குழந்தை கூறுகின்றது—'அப்பா! என்னை நீர் பரீக்ஷிக்கிறீர்
போலும்!, "அன்றீன்ற கன்றுக்குத் தாயிரங்கி முன்னணைக் கன்றையும் புல்லிட
வந்தவர்களையும் கொம்பிலும் குளம்பிலுமேற்குமாபோலே பெரியபிராட்டியாரை
யும் ஸூரிகளையும் விட்டு ஸ்நேஹித்துக்கொண்டு போரும்" (தத்வத்ரயம். 3-11.)
என்கிற அற்புதமான சூர்ணையை நீரே சந்தைசொல்லிக் கொடுத்துவைத்து இப்
போது இங்ஙனே சொல்லுகிறீரே; பசுவானது அன்று தான் ப்ரஸவித்த கன்
றுக்கு இரங்கி முன்பு தான் ஸ்நேஹித்துக் கொண்டுபோந்த முன்னணைக்கன்றை
முட்டித்தள்ளுவதும், தனக்கு போக்யமான புல்லையிடவந்தவர்களையுங்கூட கொம்
பிலே கோத்தெடுத்துக் குளம்பாலே மிதித்துத் தள்ளுவதும் செய்யுமாபோலே
பரிரம்பணாதிபோகங்களுக்கு ஏற்ற பெரியபிராட்டியாரையும், முன்பு ஸ்நேஹித்துக்
கொண்டுபோந்த நித்யஸூரிகளையும் தள்ளிவிட்டு, இன்று கைக்கொண்டவர்களை
ஸ்நேஹித்துக்கொண்டு போகிறவரன்றோ அவர், அப்படிப்பட்ட வத்ஸலரையன்றி
வேறொருவரை என் மனம் பற்றாது' என்று.

இது கேட்ட தஞ்சமாகிய தந்தை பரமகுதூஹலங்கொண்டு பாணிக்ரஹண
மங்களத்தை நிறைவேற்றத்தொடங்கினார். * பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகி
வந்து * (பெரியாழ்வார் 4-2-8.) என்கிறபடியே ஆசாரியர் பரமாத்மாவினுடைய
பிரதிநிதியாகையாலே "எட்டிழையாய் மூன்று சரடாயிருப்பதொரு மங்கலஸூத்ரம்
போலே திருமந்த்ரம்" (முமுக்ஷுப்படி—113.) என்று திருமங்கலியமாகிய திரு
மந்த்ரத்தை (அல்லது) திருமந்த்ரமாகிற திருமங்கலியத்தைக் குழந்தைக்குக் கண்
டஸ்தமாக்கினார். * பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா * என்று பாணிக்ரஹண ப்ரகர
ணம் வந்தவாறே * பறவை யேறு பரம்புருடா! நீயென்னைக் கைக்கொண்டபின் *
(பெரியாழ்வார் 5-4-2) என்னும்படியாகப் பெரியதிருவடியை மேற்கொண்டு பரம
புருஷன் வந்து கைக்கொண்டு பாணிக்ரஹணமங்கலத்தை நிறைவேற்றினானாயிற்று.

ஜீவாத்ம மணாட்டிக்குப் பாணிக்ரஹணமங்கலம் நிறைவேறிற்று. இக்கா
லத்து விவாஹமாக இருந்தால் உடனே புக்ககம் புக்கு பர்த்தாவோடே கூடிக்
களிக்க ப்ராப்தமாய்விடும். இது ப்ராசீந சாஸ்த்ரரீதியின்கட்டளையான விவாஹ
மாகையாலே பருவம் நிரம்பின பின்பே பர்த்தாவோடு சேரவேண்டுமாதலால் பரு
வம் நிரம்புங் காலத்தை யெதிர்பார்த்து மணமகள் பிறந்தகத்திலேயே வாழவேண்
டியதாகின்றது. அப்படி வாழுங்காலத்திலே குலமகள் நல்ல நாயகன் நமக்கு
வாய்த்ததும் அவனை இப்போதே யநுபவிக்க ப்ராப்தியில்லையே யென்று வருந்திக்
கிடப்பதும் பரபுருஷனைக்கண்ணெடுத்தும் பாராதே தன் கணவனுடைய பெருமை
களையே சிந்தித்துப் பேசிக்கொண்டிருப்பதும், கணவனிடத்து அன்புமிக்க உற
வினரிடத்து அன்பு பூண்டொழுகுவதும், அடிக்கடி கணவன் வந்து ஆசையைப்
பெருக்கப் பெறுவதும், தானும் இடையிடையே புக்ககம் சென்று வருவதும்,
கணவனோடு இடைவீடின்றிக் கூடிவாழுங்காலம் எப்போது வாய்க்குமோ வென்று

பாரித்துக் கொண்டிருப்பதும் அப்படிப்பட்ட நாள் குறுகக் குறுகக் குதூஹலம் விஞ்சி 'புக்ககம் போய்வருகிறேன்; பர்த்ருக்ருஹம் சென்று வருகிறேன்' என்று சிரபரிசய முள்ளவர்களிடத்தே சொல்லிக் கொள்வதுமாயிருப்பள். இந்த ஜீவாத்ம மணவாட்டியும் அங்ஙனே யாயிற்று இருப்பது. [இவட்குப் பிறந்தகம்—லீலா விபூதி; புக்ககம்—நித்ய விபூதி.] பிறந்தகத்தில் வாழுமளவும் இந்த ஜீவாத்மக் குழந்தையின் போதுபோக்கின் ப்ரகாரம் இனித் தெரிவிக்கப்படுகிறது.

கணவனைக் கிட்டிப் பரிமாறப் பெறுமைக்கு வருந்தியிருக்கும் குலமகள் போல, இவளும் * கண்ணபிரானை விண்ணோர் கருமாணிக்கத்தையமுதை நண்ணியும் நண்ணகில்லேன் நடுவேயோருடம்பிலிட்டு * (திருவாய் 5—1—5) என்று, சேர்ந்து பரிமாற வொண்ணாதபடி அநுபவவிரோதியான சரீரம் இடைச் சுவராயிருக்கிற படிக்கு வருந்தித் துடித்துக் கிடப்பள்.

குலமகள் தனக்கு வாய்த்த புருஷனையன்றி மற்றொருவனை நெஞ்சாலும் நினையாள். கண்ணெடுத்தும் பாராள். இவளும் * மறந்தும் புறந்தொழா மாந்தர் * (நான்முகன் திருவந்தாதி) என்னும்படிக்கு ப்ரதமோதாஹரணமாயிருந்துகொண்டு * மற்றோர் தெய்வம் தேறேனுன்னையல்லால் திருவிண்ணகரானே! * (பெரியதிரு. 6-3-7.) என்றும், * கல்லாதவரிலங்கை கட்டழித்த காகுத்தனல்லா லொரு தெய்வம் யானிலேன் * (நான்முகன்—53) என்றும், * தயரதற்கு மகன் தன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே * (திருவாய் 3-6-8.) என்றும் * உன்னித்து மற்றொரு தெய்வந் தொழாளவனை யல்லால் * (ஷை 4-6-10.) என்றும், சிலையினாலிலங்கை செற்றதேவனே தேவனாவான் * (திருமாலை-7.) என்றும், * அண்டர் கோனணியரங்கனென் னமுதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே. * (அமல-10) என்றும், * விழிக்கும் கண்ணிலேன் நின் கண் மற்றல்லால் வேறொருவரோ டென்மனம் பற்றாது * (பெரியாழ் 5-1-2) என்றுமிப்படிப்பட்ட பாசுரங்களினால் தேவதாந்தரங்களினிடத்தில் வைராக்யத்தைக் காட்டி நிற்பள்.

தனது கணவனுடைய பெருமைகளையே சிந்தித்தும் பேசியும் போதுபோக்கும் குலமகள் போல இவளும் * குரவையாய்ச்சியரோடு கோத்ததும் குன்றமொன்றேந்தியது முட்பட மற்றும் பலவும், * கேயத் தீங்குழலூதிற்றும் நிரை மேய்த்ததும் கெண்டை யொண்கண் வாசப் பூங்குழல் பின்னை தோள்கள் மணந்ததும் மற்றும் பலவும், பாரிடந்து பாரையுண்டு பாருமிழ்ந்து பாரளந்து பாரையாண்டது முதலியனவும் இரவு நன்பகலும் தவிர்கிலாது சிந்தித்தும் பேசியும் போக்குவள். கணவனிடத்து அன்பு மிக்க உறவினரிடத்தே அன்பு பூண்டொழுகும் குலமகள் போல இவளும் * மெய்யடியார்கள் தம் ஈட்டங்கண்டிடக் கூடுமேல் அதுகாணுங் கண்பயனாவதே * (பெருமாள் திரு-2-1.) என்றும். * நம்பனை நரசிங்கனை நவின்றேத்துவார்களைக் கண்டக்கால், எம்பிரான் தன சின்னங்கள் இவரிவரென்றாசைகள் தீர்வனே * (பெரியாழ். 4-4-9.) என்றும் பாகவத ப்ராவண்யாதிசயத்தைப் பேசியலற்றிக் கொண்டிருப்பள்.

குலமகளானவள் அடிக்கடி கணவன் தன்னிடம் வந்து காதலைப் பெருக்கப் பெறுவதுபோல இவளும் * தேவார் கோலத்தொடும் திருச்சக்கரம் சங்கினொடும் ஆவாவென்றருள் செய்து அடியேனொடுமானானே * (திருவாய் 5-1-9.) என்றும், * அந்தாமத்தன்பு செய்து என்னாவிசேரம்மானுக்கு * . (ஷை 2-5-1.) என்றும், * வைகுந்தா மணிவண்ணனே என்பொல்லாத் திருக்குறளாவென்னுள் மன்னி வைகும் வைகல்தோறு மமுதாயவானேறே * (ஷை 2-5-1.) என்றும் சொல்லும்படி அடிக்கடி எம்பெருமான் வந்து கலக்கப் பெறுவள்; * ஊரவர் கவ்வை யெருவிட்டு அன்னை சொல் நீர்படுத்து ஈரநெல்வித்தி முளைத்த நெஞ்சப் பெருஞ் செயுள், பேரமர் காதல் கடல் புரைய விளைவித்த காரமர் மேனி *



(ஷை 5-3-4.) என்னும்படி அவன் வரும்போதெல்லாம் வடிவழகைக்காட்டிக் காதலை வளர்க்கவும் பெறுவள். சில விசேஷ காலங்களில் இவள் புக்ககத்திற்குஞ் சென்று வருவது போல இவளும் * ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக் கண்டசதிர் கண்டு * (திருவாய். 4-9-10) என்னும்படி திருநாட்டுச் சதிரையும் காண்பள். கணவனோடு நித்யஸம்ச்லேஷம் வாய்ப்பது என்றைக்கோ வென்று அவள் பாரித்திருப்பதுபோல இவளும் * கூவிக்கொள்ளுங்கால மின்னங் குறுகாதோ? * (ஷை 6-9-9.) என்றும் * என்றேயென்னை உன்னேரார் கோலத்திருந்தடிக்கீழ் நின்றே யாட்செய்ய நீ கொண்டருள நினைப்பதுதான் * (ஷை 8-3-8) என்றும் பாரித்துக்கொண்டே யிருப்பள்.

குலமகள் கணவனோடு நிரந்தரமாகக் கூடப் பெறும் நாள் குறுகக் குறுகக் குதூஹலம் விஞ்சியிருக்குமாபோல, இவளும் * நாமுமக்கறியச் சொன்ன நாள்களும் நணியவான * என்னும்படி அந்நாள் ஸமீபித்தவாறே *நானேறப் பெறுகின்றேன் நரகத்தை நகு நெஞ்சே!* என்றும் *உற்றேனுகந்து பணிசெய்து உனபாதம் பெற்றேன்* என்றும் சொல்லிக் குதூஹலம் விஞ்சியிருப்பள். மணமகள் புக்ககத்திற்குப் புறப்படும் போது சிரபரிசயமுள்ளவர்களிடம் சென்று சொல்லிக்கொள்ளுமா போலே இவளும் [பெரிய திருமொழியில் 10—1.] *ஒருநல் சுற்றமென்னும் பதிகத்திலே *நெருநெல் கண்டது நீர்மலை, இன்று கண்ண மங்கையுட்காண்டுமே* வேங்கடத்துச்சியில் கண்டுபோய்—சென்று காண்டும் தண்காவிலே *ஆலியில் கண்டு மகிழ்ந்து போய்-காண்டும் நாங்கூரிலே* பேரில் வணங்கிப்போய் சென்று வெள்ளறைக்காண்டுமே* நறையூர்க் கண்டு—சென்று காண்டும் மெய்யத்துள்ளே *சேறையில் கண்டு போய்-யாம் குடந்தைச் சென்று காண்டுமே* அழுந்தையில் கண்டு போய்-சென்று காண்டும் வெஃகாவுளே *மாலிருஞ்சோலைத் தொழுது போய் விண்ணகர்க் காண்டுமே* கோட்டியூர்க் கண்டு போய்—சென்று காண்டும் நாவாயுளே* என்று சொன்ன கணக்கிலே பல திருப்பதி யெம்பெருமான்கள் பக்கலிலே அநுஜ்ஞை பெற்றுக்கொள்வள். பிறகு புக்ககம் செல்லப் புறப்படுகிறாள்.

குலமகள் பிறந்தகத்தில் வாழ்கிறபோது யார் யாருடன் அன்பு பூண்டொழுகிக் கலந்து பரிமாறினாளோ அவர்களையெல்லாம் விட்டு அகலுகிறாள் புக்ககம் போம் போது. *முற்றிலும் பைங்கிளியும் பந்து மூசலும் பேசுகின்ற சிற்றில் மென் பூவையும் விட்டகன்ற செழுங்கோதை* (பெரிய திருமொழி 3-7-8.) என்கிறபடியே அவளும் லீலா விபூதியிலுள்ள லீலாபரிகரங்களை யெல்லாம் விட்டுப் புறப்படுகிறாள். மணமகள் புறப்படும்போது மங்கள வாத்யகோஷம் மங்களாசாஸனம் முதலியன நடை பெறுமாபோலே இவளுக்கும் * சூழ் விசும் பணிமுகில் தூரியம் முழக்கின * (திருவாய் 10-9.) என்கிற பதிகத்திற்படியே ஸமுத்ர பேரீகீத காஹள சங்க ஆசீஸ்ஸ்துதி கோலாஹலங்கள் விளைகின்றன. வழியில் ஆங்காங்கு பந்துக்களிருந்தால் அவர்கள் சிறப்புகள் செய்யப் பெற்றுச் செல்லுவள் மணமகள்; அப்படியே இவளும் *முக்தோர்ச்சிர்தின பூர்வபக்ஷ ஷடுதங் மாஸாப்த வாதாம்சுமத் க்லௌ வித்யுத்வருணேந்த்ர தாத்ரு மஹித:* என்கிறபடியே அர்ச்சிராதி மார்க்கத்திலுள்ளாரால் சிறப்பிக்கப் படுகிறாள். மணமகள் கணவனுடைய ஊரெல்லையிலே சென்று சேர்ந்தவாறே ஓரிடத்தில் தங்கி அழுக்கறும்படி நீராடப் பெறுவள்; அப்படியே இவளும் *ஸீமாந்த ஸிந்த்வாப்லுத:* என்கிறபடியே விரஜாநதியிலே குடைந்து நீராடி அழுக்கு அறப்பெறுவள். பிறகு பர்த்தாவின் க்ருஹத்திலிருந்து மணமகளுக்குப் புஷ்பமாலைகள் ஸுகந்த சூர்ணங்கள் பட்டுப் புடவைகள் சிறந்த பூஷணங்கள் கொண்டுவந்து அலங்காரம் செய்யுமா போலே இவளுக்கும் *தம் பஞ்சசதாநி அப்ஸரஸாம் ப்ரதிதாவந்தி, சதம் மாலா ஹஸ்தாঃ சதமஞ்ஜநஹஸ்தா: சதம் சூர்ண ஹஸ்தாঃ; சதம் வாஸோஹஸ்தா: சதம் பூஷணஹஸ்தாঃ .......தம் ப்ரஹ்மாலங்காரேண அலங்குர் வந்தி* (சாந்தோக்யம்) என்கிறபடியே ஐந்நூறு அப்ஸரஸ்

ஸூக்கள் நூறு நூறுபேராய் ஐந்துவகுப்பாகப் புஷ்பமாலாதிகளான ஐவகைச் சிறப்புகளைக் கொணர்ந்து ப்ரஹ்மாலங்காரங்கள் செய்வர்களாயிற்று. பிறகு பர்த்தாவின் க்ருஹத்தில் நுழையுமளவில் லக்ஷ்மீ கல்யாணம் பாடி 'மங்களாசாஸனம் செய்வதும் மங்கள தீபாதிகளை ஏந்திக்கொண்டு எதிரே வருவதுமாக நிகழும்; இவளுக்கும் *மிக்க வோராயிரத்துள் இவை பத்தும் வல்லாரவரைத் தொக்குப் பல்லாண்டிசைத்துக் கவரி செய்வரேழையரே* (திருவாய் 7-6-11.) என்கிறபடியே அங்குள்ளார் திரள நின்று மங்களாசாஸனம் பண்ணி சாமரம் பணிமாறுவர்கள். *நிதியும் நற்சுண்ணமும் நிறைகுடவிளக்கமும், மதிமுக மடந்தைய ரேந்தினர் வந்தே* (ஷை 10—9—10) என்கிறபடியே மங்களாவஹமான பூர்ணகும்ப தீபாதிகளைத் தரித்துக்கொண்டு எதிர்கொண்டழைப்பு நேரும். இத்தகைய வைபவங்களுடனே மணமகள் பர்த்தாவின் மாளிகையிலே புகுந்து பர்த்தாவோடேயிருக்குமா போலே இவளும் *மன்னிய மாதவனோடு வைகுந்தம் புக்கிருப்பாரே* (நாச்சியார். 3—10.) என்கிறபடியே வைகுந்தம் புக்கிருந்து முழுவேழுலகுக்கும் நாயகனோடே கூடியிருப்பள்.

கீழ்ச்சொன்ன உபலாலனங்களோடே மணமகள் கணவனோடு கூடினபின்பு தம்பதிகளின் பரிமாற்றம் உலகமறியும். ஜீவாத்ம பரமாத்மாக்கள் பரஸ்பரம் கூடின பின்பு இவர்களுடைய பரிமாற்றம் சாஸ்த்ர வேத்யமாயிராநின்றது. பெண்பிள்ளை கணவனுடைய கட்டிலிலே ஏறுமாபோலே ஜீவாத்ம மாதர்க்கும் அங்கு பகவதநுபவத்திற்காகப் பர்யங்காரோஹணமுண்டு; அங்கு ஸர்வாச்சர்யமயமான திவ்ய பர்யங்கத்திலே *தமேவம்வித் பாதேந அத்யாரோஹதி* என்று பாதபீடத்திலே அடியிட்டேறுவதாக உபநிஷத்து ஓதுகிறது. மேல் நிகழுமநுபவத்தைப் பற்றிச் சில விஷயங்கள் தெரிவிக்கவேண்டியவையுண்டு. பரமாத்மாவை யநுபவிக்க ஜீவாத்மா செல்லுவதாகவும் ப்ரமாத்மாவை ஜீவாத்மா அநுபவிப்பதாகவும் ஆபாதப்ரதீதியிலே உலகம் நினைக்கிறது. அது தவறு. ஜீவாத்மாவைப் பெறுதற்காகப் பரமாத்மா செய்து போரும் க்ருஷிவிசேஷங்களை நன்கு உணர்ந்தவர்கள் ஜீவாத்ம லாபமே பரமாத்மாவுக்குக் கனத்த பேறு என்பதைத் திடமாகக் கொள்வர்கள். *ஸ மஹாத்மா ஸுதுர்லப:* என்று கீதாசார்யன் நிர்வேதத்தோடு சொல்லுவதை உற்று நோக்கினால் மஹாத்மாவான ஜீவாத்மாவைப் பெறுதற்கு அவன் பல பாடுகள் படுகிறானென்பது நன்கு விளங்கும். *ந ச பரமபுருஷஸ் ஸத்யஸங்கல்ப: அத்யர்த்தப்ரியம் ஜ்ஞாநிநம் லப்த்வா கதாசிதாவர்த்தயிஷ்யதி* என்று ஸ்ரீபாஷ்யத்தின் முடிவிலுள்ள ஸ்ரீஸூக்தியும் இவ்விஷயத்தை வற்புறுத்துகின்றது.

திருமந்த்ரத்திலுள்ள நம: பதமானது அசித்வத் பாரதந்த்ரியத்தைச் சொல்லுகிறதென்று முமுக்ஷுப்படியில் அருளிச்செய்த பிள்ளை லோகாசாரியர் (அங்கு. 92.) "அதாவது போகதசையில் ஈச்வரனழிக்கும்போது நோக்கவேணுமென்று அழியா தொழிகை" என்றொரு சூர்ணையருளிச் செய்கிறார். இதனால் நம: பதார்த்தம் பரமபதத்தில் மிகவும் ஞாபகத்திலிருக்கவேணுமென்று காட்டுகிறார். திருநாட்டில் போக்தாவான எம்பெருமான் ஜீவாத்மாவோடே கலந்து பரிமாறுமளவில் தன் வ்யாமோஹாதிசயத்தாலே தான் தாழநின்று பரிமாறுவனென்றும், அந்நிலையில் ஜீவாத்மாவின் சேஷத்வம் அழிந்துபோய்விடுமென்றும், அழிந்துபோகாதபடி அதைக் காப்பாற்றிக்கொள்ள வேணுமென்று ஜீவாத்மா நினைத்து அவனுடைய தலைதடுமாறான போகத்திற்கு இடையூறு செய்தானாகில் அது பாரதந்த்ரியத்திற்கு விருத்தமாகுமென்றும், அப்படியாகாமே பாரதந்த்ரியமே ஸ்வரூபமென்றும் அருளிச் செய்கிற விதனால், திருநாட்டில் எம்பெருமான் இத்தலையை யநுபவிக்கு மநுபவம் வாசாமகோசரமென்று விளங்காநின்றது. இவ்வநு



பவத்தினாலுண்டாகு மாநந்தமும் அவனுக்கேயாம். 'இத்தலையால் அவனுக்கு இவ்வளவு ஆனந்தமுண்டாகிறதே!' என்று அதை யநுஸந்திப்பதனாலுண்டாகு மானந்தமே இத்தலையைச் சேர்ந்ததாகும். இது தானும் சைதந்ய ப்ரயுக்தமாக வந்ததத்தனை.

ஆக, ஜீவாத்மக் குழந்தையின் உத்பத்தி தொடங்கி விவாஹம் நடுவாகப் பரமபோக பர்யந்தமாக நிரூபித்த விதனால் "*க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரியமிவாதிதிம்" என்றதன் கருத்து விசதீகரிக்கப்பட்டது தவிர, உகாரார்த்தமான அநந்யார்ஹத்வமும் மூதலிக்கப்பட்டதாயிற்று. ... ... *

---

## 2. இருமுப்பொழுதேத்தும் தொண்டர்.

பெருமாள் திருமொழியில் ஏழாம் பாட்டில் "இரு முப்பொழுதேத்தி யெல்லையில்லாத் தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்டர்" என்று குலசேகராழ்வாரருளிச் செய்திருப்பது பஞ்சகால பராயணர்களான பரமைகாந்திகளை; இப்பாட்டில் "இரு முப்பொழுது" என்றது பஞ்சகாலமென்றபடி; இரண்டும் மூன்றுங் கூடினால் ஐந்து; ஆகவே இருமுப்பொழுதேத்துமவர்கள் பஞ்சகால பராயணர்கள். இதனைச் சிறிது விவரிப்போம்.

ஞானத்திற் சிறந்தவர்களென்றும் அனுட்டானத்திற் சிறந்தவர்களென்றும ஞானானுட்டான மிரண்டிலும் சிறந்தவர்களென்றும் மஹான்கள் கொண்டாடப்படுகிறார்கள். ஞானத்தில் சிறந்தவர்கள் பலர் கிடைக்கக்கூடும். அனுட்டானத்திற் சிறந்தவர்கள் பெரும்பாலும் அருமைப்பட்டே யிருப்பார்கள். அநுஷ்டாதாக்களான மஹான்கள் பஞ்சகாலபராயணர்களென்று போற்றப்படுகின்றார்கள்.

ஒரு தினத்தின் பகற்பொழுதை ப்ராத: காலம், ஸங்கவகாலம். மத்யாஹ்ந காலம் அபராஹ்ந காலம், ஸாயாஹ்ந காலம் என்று ஐந்தாகப் பகுத்து, ஸூர்யோதயம் முதல் அவ்வாறு நாழிகை இவற்றிற்கு முறையே உரியவையென்று வரையறுத்து, அபிகமநம், உபாதாநம், இஜ்யா, ஸ்வாத்யாயம், யோகம் என்ற ஐந்து ஒழுக்கங்களையும் முறையே (ப்ராத: காலம் முதலிய) அந்த ஐந்து சிறுபொழுதிலும் அநுஷ்டிக்கும்படி பஞ்சராத்ரம் முதலிய ஆகமங்கள் கூறும். இரவில் ஆசரிக்க வேண்டுவதும் யோகாநுஷ்டாநமே.

இவற்றின் விரிவு வருமாறு;—முதல் ஆறு நாழிகையாகிய ப்ராத: காலத்திலே ஸ்நாநம் ஸந்த்யாவந்தநம் ஜபம் முதலிய காலைக்கடன்களைச் செய்து முடித்துத் தாம் ஆராதிக்கவேண்டிய எம்பெருமானுடைய ஸந்நிதியிற் சென்று ப்ரதக்ஷிண நமஸ்கார ஸ்தோத்ரம் முதலியவற்றால் எம்பெருமானை உகப்பிக்க வேண்டும். இஃது அபிகமந காலநியமம். அதற்கு அடுத்த ஸங்கவ காலத்திலே பகவதாராதனத்துக்கு வேண்டிய சுத்த தீர்த்தம், சந்தனம், புஷ்பம், தூபதீப த்ரவ்யங்கள் முதலியவற்றையும், திருமஞ்சனத்துக்கு வேண்டிய பால் தயிர் நெய் தேன் முதலியவற்றையும், எம்பெருமானுக்கு அமுது செய்விப்பதற்கு வேண்டிய அரிசி பருப்பு கறியமுது சர்க்கரை நெய் பழம் முதலிய போஜநோபகரணங்களையும் ஸம்பாதித்துத் தொகுத்து ஸித்தஞ் செய்யவேண்டும். இஃது உபாதாந கால நியமம். மூன்றாவதான மத்யாஹ்ந காலத்திலே மாத்யாஹ்நிகஸ்நாநமும் மாத்யாஹ்நிகச் சடங்குகளுஞ் செய்து விதிமுறை வழுவாது பகவானுக்குத் திருவாராதனம் பண்ணிப் பக்குவமான உணவுகளை அமுது செய்வித்து அங்ஙனம் நிவேதித்த உணவுகளை அதிதிகளோடும் பந்து மித்திரர்களோடும் புஜிக்கவேண்டும்; இஃது இஜ்யா கால நியமம். அதற்கு அடுத்ததான அபராஹ்ந காலத்திலே மோக்ஷ

மார்க்கத்திற்கு உரிய வேத வேதாந்த வேதாங்கங்களையும் இதிஹாஸ புராணங்
களையும் மற்றும் உரிய நூல்களையும் தாம் கற்றலும் பிறர்க்குக் கற்பித்தலும்
வேண்டும். இது ஸ்வாத்யாய கால நியமம். இனி, ஈற்றதான ஸாயங்காலத்திலே
மாலைக்கடனாகிய ஸந்த்யாவந்தனத்தைச் செய்யத் தொடங்கி ஸூர்யாஸ்தமன
மான பின்பு ஜபத்தைப் பூர்த்திசெய்து இரவு போஜநாநந்தரம் ஏகாந்தமாக
விருந்து ஐம்பொறிகளை யடக்கி ப்ராணாயாமஞ் செய்து மனத்தைப் பரமாத்மாவி
னிடத்தே நிலைநிறுத்தி பகவத் குணாநுஸந்தானத்தோடு பள்ளிகொள்ளவேண்டும்.
இது யோக கால நியமம். இவ்வாறு அநுஷ்டிக்கும் சிஷ்டர்கள் பஞ்சகால பரா
யணர் எனப்படுவர்கள்.

இப்படி அநுஷ்டானங்களைச் செய்து கொண்டே போதைப் போக்கினால்
ஞானத்தை அபிவிருத்தி செய்துகொள்ள மார்க்க மில்லாமற் போகும். ஜ்ஞாதாக்
களுக்கு ஸ்வயம் விமர்சிக்க வேண்டிய விஷயங்கள் பலவுண்டு ; பல துறைகளிலும்
எழுதவேண்டிய நூல்களும் பல பலவுண்டு; திருவடி வாரத்தில் காத்திருக்கின்ற
சிஷ்யர்களுக்குப் போதிக்க வேண்டியவைகளும் பலவுண்டு. பஞ்ச காலங்களில்
ஸ்வாத்யாய காலமென்று ஒதுக்கப்பட்ட ஓராறு நாழிகை யவகாசத்தில் என்னாகும்?
ஞான மில்லாதவர்கள் இப்படிப்பட்ட அநுஷ்டானங்களினால் போதுபோக்கலாமே
யொழிய வேத வேதாந்த வேதாங்கங்களில் விபுலமான ஞானம் படைத்தவர்கள்
இங்ஙனே பஞ்சகால பராயணர்களாக இருக்க முடியுமோ வென்று சிலர் சங்கிக்க
நேரும். அது வேண்டா ; ஒவ்வொரு காலத்திற்கும் ஏற்பட்ட அநுஷ்டானங்கள்
ஆறு நாழிகை யவகாசத்தையும் ஆக்ரமிக்கக் கூடியவையல்ல. இடையிடையே
ஞான விகாஸத்தைச் செய்து கொண்டு போக இடையூறொன்று மிராது. ... *

---

## 3. "சக்ரவர்த்தியைப்போலே இழக்கைக்குறுப்பு".

முமுக்ஷுப்படி சரமச்லோகப்ரகரணத்தில் "சக்ரவர்த்தியைப் போலே
இழக்கைக்குறுப்பு" என்றருளிச் செய்த பிள்ளைலோகாசார்யர் தசரத சக்ர
வர்த்தியை இழந்தவனாகக் கூறினர். அதனை விவரிக்கிறோம்.

ஸ்ரீ ராமாயண அயோத்யா காண்டத்தில் தசரதசக்ரவர்த்தியின் ஸத்ய
வாதித்வம் மிகவும் பொலிவு பெறுகின்றது. சக்ரவர்த்தி ஸத்யவாதியாகையாலே
கைகேயியின் வரப்ரார்த்தனையை மறுக்க மாட்டாமல் இராமபிரானைக் காட்டுக்குப்
போகவிட்டு ஸத்யவாதித்வப் பெரும் புகழைப் பெற்றனனென்று சொல்லப்படு
கின்றது. கைகேயியின் வர ப்ரார்த்தனையைப் பற்றின வரலாற்றை முன்னம்
விவரிப்போம். தண்டகாரணியத்தில் வைஜயந்தமென்ற பட்டணத்தில் வஸிப்ப
வனும், திமித்வஜனென்று மறுபெயருள்ளவனும் இந்திரனை வென்றவனுமான
சம்பராஸுரனை இந்திரனது வேண்டுகோளின்படி வெல்லுதற் பொருட்டுக்
கைகேயியுடன் சென்ற தசரத சக்ரவர்த்தி அவ்வசுரனை யெதிர்த்துச் செய்த
பெரும் போரில் அவனால் விரணப்பட்டு மூர்ச்சையடைந்த பொழுது, அச்சக்ர
வர்த்தியை அசுரர்கள் வதை செய்யாதபடி கைகேயி போர்க்களத்திலிருந்து
எடுத்துச் சென்று பாதுகாக்க மூர்ச்சை தெளிந்தவுடன் தசரதன் தனக்குக்
கைகேயி செய்த உயிருதவிக்காக மிக மகிழ்ந்து தான் அவட்கு அவள் வேண்டும்
இரண்டு வரங்கள் கொடுப்பதாக வாக்களிக்க, அவள் அவற்றை அப்போதே
பெற்றுக்கொள்ளாமல் பின்பு தனக்கு வேண்டும்பொழுது கேட்டுப் பெற்றுக்
கொள்வதாகச் சொல்லியிருந்தாள். ஸீதா கல்யாணத்தின் பிறகு வெகு காலங்
கழித்துத் தசரதர் இராமபிரானுக்கு யுவராஜ பட்டாபிஷேகஞ் செய்ய முயலு



கையில் மந்தரை சூழ்ச்சியால் மனங் கலக்கப்பட்ட அக்கைகேயி தசரதரை நோக்கி
முன்பு அவர் தனக்குக் கொடுத்திருந்த இரண்டு வரங்களுக்கும் பயனாகத் தன்
மகனான பரதனுக்குப் பட்டங்கட்டவும் கௌஸல்யை மகனான இராமனைப் பதி
னான்கு வருஷம் வனஞ் செலுத்தவும் வேண்டுமென்று சொல்லி வற்புறுத்த, அது
கேட்டு வருந்தின தசரதர் ஸத்ய வாதியாகையால் முன்பு அவட்கு வரங்கொடுத்
திருந்த சொல்லைத் தவறமாட்டாமல் இராமபிரானுடைய வனவாஸத்திற்கு இசைந்
தாரென்பது கதைப்போக்கு. இங்கு நாம் முக்கியமாக ஆராயவேண்டுவதொன்
றுண்டு. கைகேயிக்கு வரங்கொடுத்த காலம் மிகப் புராதனம். இன்ன வரமென்று
குறிப்பிடப்பட்டிருந்தது மில்லை. அது அப்படிநிற்க. ப்ரக்ருதத்திலோ வென்னில்
இராமபிரானுக்கு சக்ரவர்த்தி தானே ராஜ்ய ப்ரதாநம் பண்ணியாயிற்று.
அயோத்யா காண்டம் மூன்றாவது ஸர்க்கத்தில் (39.)

> "ஜ்யேஷ்டாயாமஸி மே பத்ந்யாம் ஸத்ருச்யாம் ஸத்ருசஸ் ஸுத:,
> உத்பந்நஸ் த்வம் குணச்ரேஷ்டோ மம ராமாத்மஜ: ப்ரிய:,
> த்வயா யத: ப்ரஜாச்சேமா: ஸ்வகுணைரநுரஞ்ஜிதா:,
> தஸ்மாத் த்வம் புஷ்யயோகேந யௌவராஜ்யமவாப்நுஹி."

என்னு மிந்த ச்லோகங்களானவை சக்ரவர்த்தியினால் இராமனுக்கு ராஜ்ய ப்ரதாநம்
செய்யப் பட்டமையை ஸுஸ்பஷ்டமாகக் கூறுகின்றன. இவ்வளவு மாத்திரமே
யன்று. மறுபடியும் ஸுமந்த்ரனை யனுப்பி இராமபிரானை வரவழைத்து,
சிறிதும் தாமதமின்றி வெகு விரைவாக ராஜ்யாபிஷேகம் செய்து கொள்ளுமாறு
வற்புறுத்தி யிருக்கும் விஷயம் அடுத்த நான்காவது ஸர்க்கத்தில் மிக விரிவாகக்
கூறப்பட்டிருக்கின்றது. இப்படி ஒரு முறைக்கு இரு முறையாக இராமனை வர
வழைத்து ராஜ்ய ப்ரதாநம் பண்ணியான பின்பு இதற்கு விரோதமில்லாதபடி
கைகேயியின் வரத்தை நிறைவேற்றவேணுமே யொழிய இதை உபமர்த்தித்து
வேறாக நடத்துவதற்கு ஔசித்யமுண்டா வென்று பார்க்கவேணும். கைகேயிக்கு
இரண்டுவரம் கொடுத்த காலத்திலேயே வரஸ்வரூபம் நிச்சயிக்கப்பட்டிருக்குமாகில்
அதற்கு ப்ராபல்யம் சொல்ல இடமுண்டாகும்; சம்பராஸுரயுத்த காலத்தில்
'கைகேயீ! உனக்கு வேண்டிய இரண்டு வரம் பெற்றுக்கொள்' என்று
சக்ரவர்த்தியால் சொல்லப்பட்டது. 'அயோத்யா ராஜ்யத்தை என் மகனுக்குக்
கொடுக்கவேணும்; கௌஸல்யா புத்திரனை வநவாஸி யாக்கவேணும்' என்று
அப்போதே கேட்கப்பட்டிருக்குமாகில் அந்த வரப்ரார்த்தனை ப்ராபல்யம் பெற்
றிருக்கும். அப்போது இராமனாவது பரதனாவது ஜனித்தே யிருக்க வில்லையாதலால்
அங்ஙனம் கோருவதற்கு அவகாசமே யில்லையாயிற்று. இராமனுக்கு யுவராஜ
பட்டாபிஷேகம் செய்யமுயலும் போதே செய்தி தெரிந்துகொண்டு என் மக
னுக்குத்தான் ராஜ்யம் கொடுக்க வேணுமென்று (கைகேயி) கேட்டிருந்தாளாகில்
அஃது ஒக்கும். இராமனுக்கு ராஜ்யம் கொடுத்துத் தீர்ந்தது; அவனும் ராஜ்யத்
தைப் பெறுவதற்குரிய சடங்குகளை யநுஷ்டித்தாயிற்று. இந்நிலையில் கைகேயி
வந்து என்றைக்கோ தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கு மிரண்டு வரங்களுக்குப்
பலனாக பரதாபிஷேகத்தையும் ராமவிவாஸநத்தையும் வேண்டினளாகில் இதை
நிறைவேற்ற வேண்டிய ஆவச்யகதை என்ன? அவளுடைய கோரிக்கையை ஒரு
பொருளாக மதியாமல் 'கைகேயீ! நீ கோபக்ருஹத்திலேயே விழுந்து கிட' என்று
சொல்லிவிட்டு எழுந்துபோய் ஸ்ரீ ராம பட்டாபிஷேக மஹோத்ஸவத்தைக்
குறையற நிறைவேற்றி வைத்தால் இதனால் சக்ரவர்த்தியின் ஸத்யவாதித்வத்திற்கு
ஏதேனும் பங்கம் விளையுமோ? ஒன்றும் விளையாது. 'பாதிராஜ்யம் இராமனாளட்டும்,
பாதிராஜ்யம் பரதனாளட்டும்' என்று சொல்லலாம். மற்றும் பலவகையாகச் சொல்ல
லாம். இராமனுக்குக் கொடுத்து முடிந்த ராஜ்யத்தை இல்லையாக்கி அவனைக்

காட்டுக்குப் போகச்செய்தது சக்ரவர்த்தியை அஸத்யவாதியாக்குமே யொழிய ஸத்யவாதியாக்குமோ? என்று சங்கிக்க ப்ராப்தமாகின்றது.

ஸ்ரீ ராமாயண மஹார்ணவத்தில் ஆழவிழிந்து அற்புதமான ஆராய்ச்சிகளைச் செய்து பரமார்த்தங்களை க்ரஹிக்கவல்ல மஹாமதிகள் இங்கு ஸம்ப்ரதிபந்நமான முறையிலே சங்காபரிஹாரம் செய்யக்கூடும். நமக்குத் தோன்றின வகையில் இங்குச் சில எழுதுகிறோம். "சக்ரவர்த்தியைப் போலே இழக்கைக்குறுப்பு" என்றருளிச் செய்தவிடத்து வியாக்கியானத்தில் மணவாளமாமுனிகள் "முன்பே வரப்ரதாநத்தைப் பண்ணிவைத்து இப்போதாக மறுக்க வொண்ணாதென்று ஆபாஸமான ஸத்ய தர்மத்தைப்பற்றி நின்று * ராமோ விக்ரஹவாந் தர்ம: * என்கிற பெருமாளோடே கூடிவாழ விருந்த பேற்றை யிழந்த சக்ரவர்த்தியைப் போலே" என்றருளிச் செய்துள்ளார். இங்கு ஆபாஸமான ஸத்ய தர்ம மென்றதற்கு இரண்டுவகையான தாத்பர்ய முண்டு. ஸத்யஞ் சொல்லுவதென்பது தர்மமேயானாலும் ஒரு தட்டில் எம்பெருமானை வைத்து மற்றொருதட்டில் ஸத்யத்தை வைத்துப் பார்க்கும்போது ஸத்யவசநமானது எம்பெருமானை யிழப்பதற்கு உறுப்பாமாகில் அது உண்மையான தர்மமன்று. ஆபாஸமான தர்மமே—என்பதாக ஒரு தாத்பர்யம் தசரதனுடைய ஸத்யவாதித்வம் வஸ்துஸ்திதியில் தர்மமன்று, தர்மாபாஸமே, அது அஸத்ய பர்யவஸிதமே யென்பதாக மற்றொரு தாத்பர்யம். "ஸர்வதர்மாந்" என்பதற்கு அர்த்தம் செய்தருளும்போது "இவற்றை தர்ம மென்கிறது ப்ரமித்தவர்ஜுநன் கருத்தாலே" என்று அருளிச்செய்த கணக்கிலே தசரதசக்ரவர்த்தியை ஸத்யவாதியென்கிறது ப்ரமித்த அவன் தன்னுடைய கருத்தாலே யென்னலாம்.

கீதா சாஸ்த்ரத்தை ப்ரகாசநம் செய்வதற்கு ஸமயம்பார்த்திருந்த ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா யுத்த ஸந்நத்தனாய்ப் போர்க்களத்தில் வந்து நின்ற அர்ஜுநனை ப்ரமிக்கச் செய்ததுபோல, தேவகார்ய நிர்வஹணார்த்தமாக வநப்ரஸ்தாந குதூஹலியாய் நின்ற ஸ்ரீ ராமபகவான் தன் திருவுள்ளம் நிறைவேறுதற்காகவே சக்ரவர்த்திக்கு அதர்மத்தில் தர்மபுத்தியையும், தர்மத்தில் அதர்ம புத்தியையும் உண்டு பண்ணினானென்று கொள்ளக் குறையில்லை.

"காசியிலே கொள்ளையடிக்கக் காஞ்சியிலே கன்னம் வைப்பது" என்றொரு விநோதப் பேச்சு வழங்குவதுண்டு. இந்த ரீதியில்தான் புராண கதைகள் அமைகின்றன. * வேண்டித் தேவரிரக்க வந்து பிறந்ததும் * என்கிறபடியே தேவர்களின் பிரார்த்தனையை ஒரு வியாஜமாகக் கொண்டு பரமபுருஷன் இந்நிலவுலகத்திலே வந்து திருவவதரிக்கத் திருவுள்ளம் பற்றுவதற்கு நெடுநாள் முன்னமே சில செய்திகளை நிகழச் செய்து வைக்கிறான். சம்பராஸுரயுத்தத்தில் தசரதனுக்குப் பராஜயம் விளைய ஹேதுவில்லை. அது விளையும் படிக்கும் அப்போது கைகேயி உதவி செய்யும்படிக்கும் அப்போது அவளுக்கு இரண்டு வரம் கொடுக்கும்படிக்கும் முன்னமே செய்து வைத்தது எம்பெருமான் செயலே. பரதாழ்வானை முன்னமே மாதுலக்ருஹத்துக்குப் புறப்பட்டுப் போகச் செய்ததும் அவன் செயலே. கைகேயி வரம் கேட்கும்போது பரதாழ்வான் அயோத்தியில் இருந்தானாகில் இராமனுக்கு வநவாஸம் ப்ராப்தமாக வழியிராதன்றோ. ஆகவே ஸத்ய ஸங்கல்பனான அவனுடைய ஸங்கல்ப மடியாக நிகழ்ந்தவற்றில் இன்றிருந்து நாம் ஆராய்ச்சி செய்வதற்கு என்ன இருக்கிறது. பாரமார்த்திக த்ருஷ்டியில் தசரதன் ஸத்யவாதியல்லனென்று கொள்வதில் குறையொன்றுமில்லை. ஆனதுபற்றியே அவனைப்பற்றி எம்பெருமானாருளிச் செய்த திவ்ய ஸூக்தியொன்று ப்ரஸித்தமாக வுள்ளது.—"தசரதனுக்கு நரகமே கிடீர் ப்ராப்தம்; பெருமாளுடைய ஆந்ருசம்ஸ்யத்தாலே அவன் ஸ்வர்க்கஸ்தனானான்" என்று.



# 4. பகவத் கடாக்ஷவீக்ஷண மஹிமை.

எம்பெருமானுடைய திவ்யாவயவங்களில் எந்த அவயவம் நமக்கு மிகவும் உத்தேச்யமானதென்று ஆராயுமிடத்து, திருவடியே தஞ்சமென்று முடிவுசெய்யக் கூடும். *அஞ்சேலென்று கைகவியாய்* என்று பிரார்த்திக்குமாறு அபய முத்திரையோடு கூடிய திருக்கையே தஞ்சமென்று கருதவுங்கூடும்.

* விபோர் நாபீபத்மோ விதிசிவநிதாநம் பகவத: ததந்யத் ப்ரூபங்கீபரவதிதி ஸித்தாந்தயதி ந: * என்று பட்டரருளிச்செய்வதற்கு மூலமான * முதலாந் திருவுருவம் மூன்றென்பர். ஒன்றே முதலாகும் மூன்றுக்குமென்பர் முதல்வா! நிகரிலகு காருருவா! நின்னகத்ததன்றே புகரிலகு தாமரையின் பூ.* (பெரியதிருவந்தாதி) என்ற நம்மாழ்வார் பாசுரத்தின்படி பரத்வநிர்ணயகமான திருநாபியே தஞ்சமென்று கருதவுங் கூடும். திருக்கண்ணோக்கமே மிக முக்கியமானதென்று நிர்ணயிப்பதில் ஔசித்யாதிசயமுண்டு. * ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத் மதுஸூதன:, ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேய: ஸ வை மோக்ஷார்த்தசிந்தக: * என்கிறபடியே நாம் பிறப்பதற்கு முன்னே கருக்குழியிலேயே நம்மைத் திருவுடையராக்குகின்ற தன்றோ திருக்கண்ணோக்கம்.

நம்மாழ்வார் திருவாய்மொழி தொடங்கும்போதே * துயரறு சுடரடி தொழுதெழுஎன் மனனே * என்று தம்முடைய திருவுள்ளத்திற்குத் தேவாதி தேவனது திருவடியையே தஞ்சமாகக் காட்டிக்கொடுத்திருந்தாலும், தமது முதற் பிரபந்தமான திருவிருத்தத்தில் * பெருங்கேழலார் தம் பெருங்கண்மலர்ப் புண்டரீகம், நம்மேலொருங்கே பிறழவைத்தார் இவ்வகாலம், ஒருவர் நம்போல் வருங்கேழ்பவருளரே * என்று அப்பெருமானுடைய திருக்கண்ணோக்கமே தமக்கு முந்துற முன்னம் ப்ராப்தமாயிற்றென்றும், அதுவே தம்முடைய சேமங்களுக்கெல்லாம் மூலகந்தமென்றும் அருளிச்செய்திருக்கக் காண்கிறோம். ஆண்டாளும் * திங்களு மாதித்தியனு மெழுந்தாற் போல், அங்கணிரண்டுங் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல், எங்கண்மேற் சாபமிழிந்து * என்றருளிச் செய்கிறாள்.

இதிஹாஸ புராணங்களிலும் சென்று பார்ப்போம்; * ச்ரமணீம் தர்மநிபுணாமபிகச்ச * என்று கபந்தன் சொன்ன வனந்தரம் * ஸோ஽ப்யகச்சந்மஹாதேஜா: சபரீம் * என்கிறபடியே பெருமாள் தாமே சென்று விஷயீகரித்த வேடுவிச்சியானவள் (சபரி), * சக்ஷுஷா தவ ஸௌம்யேந பூதாஸ்மி ரகுநந்தன * என்று, தேவரீருடைய அழகிய திருக்கண்பார்வையாலே என்னுடைய ப்ராப்தி ப்ரதிபந்தகங்களெல்லாம்போய்ப் பரிசுத்தையானேனென்று திருக்கண்ணோக்கின் பெருமையைத் தெரிவித்தாள்.

பாண்டவர்களுக்காகக் கண்ணபிரான் தூதெழுந்தருளின காலத்திலே, வெள்ளமானது பள்ளத்திலே தானேசென்று விழுமாபோலே * நிவாஸாய யயௌ வேச்ம விதுரஸ்ய மஹாத்மந: * என்று விதுரர் திருமாளிகையில் தானே சென்று புக்கு * விதுராந்நாநி புபுஜே சுசீநி குணவந்தி ச * என்று அவருடைய ஸ்பரிசமுள்ள தூயவமுதை விரும்பி யமுதுசெய்து பிறகு துர்யோதநாதிகளின் ஸதஸ்ஸிலே யெழுந்தருளினான்; அங்கே எதிரியான துர்யோதநன், ஞானத்தில் சிறந்த பீஷ்மாசார்யரையும் ஜாதியிற் சீரிய த்ரோணாசார்யரையும் செல்வத்தில் மிகுந்த தன்னையும் உபேக்ஷித்து விதுரரென்கிற வொரு சூத்ரருடைய அன்னத்தை புஜித்து வந்தானே யென்கிற சீற்றத்தினால் அதிக்ஷேபமாகச் சொல்லுகையில் * பீஷ்மத்ரோணாவதிக்ரம்ய மாம் சைவ மதுஸூதன, கிமர்த்தம் புண்டரீகாக்ஷ! புக்தம் வ்ருஷலபோஜனம் * என்கிறான். இது துரியோதனன் கண்ணனை அதிக்ஷேபிக்கிற ப்ரகரணமென்பதில் ஸந்தேஹமில்லை. அப்படி அதிக்ஷேபிக்கும்

போது 'மூர்க்க !, மூட !' என்றாப்போலே நிந்தோக்திகளை யிட்டுச் சொல்லவேண்டியிருக்க, 'புண்டரீகாக்ஷ !' என்று ஸம்போதித்திருக்கிறான் துர்யோதநன். இதை ரஸிகர்கள் ஆழ்ந்து விமர்சிக்கவேண்டும். புதிதாக விமர்சிக்க நமக்கு மதியேது? நமது பூர்வாசாரியர்கள் விமர்சித்துத் தெரிவித்தருளியிருக்கும் சீரிய பொருளையெடுத்துக் காட்டுகிறோம். சீறிச் சொல்லச் செய்தேயும் 'புண்டரீகாக்ஷ !' என்று ஸம்போதனமிட்ட துர்யோதனனுடைய கருத்து யாதெனில், 'கண்ணா ! உனது அழகிய திருக்கண்ணோக்கினாலே விதுரர் ஸகல துரிதங்களும் கழியப்பெற்றுப் பரம பரிசுத்தராய்விட்டார்; அதனால்தான் அவருடைய அன்னத்தை நீ ஆதரித்து உண்ண ப்ராப்தமாயிற்று' என்று தான் தெரிந்துகொண்ட ஸமாதானத்தையும் பரவசமாகவே வெளியிட்டானாயிற்று. இப்படிப்பட்ட பெருமைவாய்ந்தது எம்பெருமானுடைய திருக்கண்ணோக்கம்.

இது நிற்க, இந்த ச்லோகத்தின் சார்பாகத் தோன்றியதோர் விசாரத்தைச் சிறிது விமர்சிப்போம். *கிமர்த்தம் புண்டரீகாக்ஷ ! புக்தம் வ்ருஷல போஜநம்* என்று துரியோதனன் கேட்டதற்குக் கண்ணபிரான் என்ன மறுமொழி கூறவேண்டும், என்ன மறுமொழி கூறியிருக்கிறான் என்று பார்ப்போம். வ்ருஷலபோஜநம் கிமர்த்தம் புக்தம்? என்றது கண்ணபிரான் திருவுள்ளத்தைப் புண்படுத்தக்கூடிய வார்த்தையாகையால் அந்த வார்த்தை செவிப்பட்டவுடனே சீறிச்சிவந்த கண்ணுடனே 'பரமபாகவதோத்தமரான விதுரரை வ்ருஷலனென்கிறாயே பாவீ!' என்று கடிந்து கூறி 'அவர் சூத்ரரல்லர், ப்ராஹ்மணோத்தமர்களினும் மேம்பட்டவர்காண்' என்று மறுமொழி கூறியிருக்க வேண்டும். கண்ணபிரானோ அவ்விதமாக மறுமொழி கூறவில்லை. விதுரரைப்பற்றி ஒன்றுமே சொல்லாமல் *த்விஷதந்நம் ந போக்தவ்யம் த்விஷந்தம் நைவ போஜயேத், பாண்டவாந் த்விஷஸே ராஜந் மம ப்ராணா ஹி பாண்டவாः* என்று வேறுவிதமான உத்தரம் உரைத்திருப்பதாகக் காண்கிறது. சத்துருக்களிடம் சோறு உண்ணவுங் கூடாது, சத்துருக்களுக்குச் சோறிடவுங் கூடாது; துரியோதநா ! நீ எனக்கு உயிர்நிலையான பாண்டவர்களை த்வேஷிப்பவனாதலால் எனக்கு த்வேஷியாகிறாய்; ஆகவே நான் உன்னிடம் சோறு உண்ணாதது நன்றே—என்று இவ்விதமான விடைகூறியிருப்பதனால் விதுரரைப்பற்றித் துரியோதனன் சொன்ன தூஷணம் கண்ணபிரானுக்கு இஷ்டமே தவிர அநிஷ்டமன்று என்று சிலர் நினைக்க நேர்கின்றது. சிலர் என்ன வேணுமோ? ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ப்ரபாவவ்யவஸ்தாதிகாரத்தில் இங்ஙனே பேசுகின்றார்; அவ்விடத்துப் பங்க்திகள் காண்மின் ;—துர்யோதநன் *பீஷ்மத்ரோணா வதிக்ரம்ய........புக்தம் வ்ருஷல போஜநம்? * என்று கேட்க, * த்விஷதந்நம்...என்று உத்தர மருளிச்செய்கையாலே ஸ்ரீ விதுரருக்கு துர்யோதநன் சொன்ன ஜாதி விசேஷத்தை பகவான் இசைந்தானாயிற்று" என்று. ஆரியர்காள் ! ஆசார்ய ஸார்வபௌமர்கள் 'கிமர்த்தம் புண்டரீகாக்ஷ !' என்றதில் சுவைப்பொருள் கண்டார்கள்; ஸ்வாமி தேசிகன் *த்விஷதந்நமித்யாதியிலே சுவைப்பொருள் கண்டார். இவ்விடத்தில் ரஸிகர்கள் உய்த்துணர வேண்டிய விஷயம் யாதெனில்; உலகில் வாத ப்ரதிவாதங்களில் சதுரர்களானவர்கள் ப்ரதிவாதம் செய்யுமிடத்து ஒரு வாதத்திற்குப் பல பதில்கள் சொல்லக்கூடியதாயிருந்தாலும் அவற்றுள் எது மிக முக்கியமாகக் கருதப்படுகின்றதோ, அதனையே சொல்லி நிற்பர்கள். ப்ரக்ருதத்தில் விதுரருடைய உத்கர்ஷம் கண்ணபிரானுக்கு முக்கியமாக விவக்ஷிதமன்று;* ந சூத்ரா பகவத்பக்தா விப்ரா பாகவதா: ஸ்ம்ருதா:* *கிமப்யத்ராபிஜாயந்தே யோகிநஸ் ஸர்வயோநிஷு, ப்ரத்யக்ஷிதாத்மநாதாநாம் நைஷாம் சிந்த்யம் குலாதிகம்* இத்யாதிகளான பல ப்ரமாணங்களினால் ஸித்தமான விஷயத்தை இங்கு ஸாதிக்கவேண்டிய ஆவச்யகதை இல்லை. புண்டரீகாக்ஷ ! என்று ஸம்போதித்த துர்யோதநனுக்கு அது தெரிந்தேயிருக்கின்றது. தன்



உயிர்நிலையான பாகவதர்களுக்குத் தீங்கிழைக்குமவர்களைத் தான் தன்னுடைய த்ரோஹியாக நினைப்பனென்பதே இங்கு முக்கியமாக விவக்ஷிதமாதலால் அதுவே சொல்லப்பட்டது. இதனால் விதுரர்க்கு துரியோதனன் சொன்ன அவத்யத்தைக் கண்ணபிரான் இசைந்ததாகத் தேறாதென்பது பரமாசாரியர்களின் திருவுள்ளம்.

---

## 5. பகவத் ஸ்ரீராமாநுஜ சரித்திரத்தில் ஒரு விமர்சம்.

ஸ்ரீ ராமானுஜரின் வைபவத்தைப் பற்றிக் கூறும் குருபரம்பராப்ரபாவம் முதலிய பழைய சரித்திர நூல்களில் அடியில் கண்ட வரலாறுகள் கூறப்படுகின்றன: இந்த மஹாசாரியர் ஸ்ரீரங்கத்தில் தரிசன நிர்வாஹம் செய்துகொண்டு போந்த நாட்களில் அங்குக் கொடுங்கோன்மை புரிந்துவந்த சோழராஜன் ஒருகால் வைணவர்களுக்குச்செய்த ஹிம்ஸைகளைத் தாங்கமுடியாமல், அவர் மேல் நாட்டுக்கெழுந்தருளும்படியாயிற்று. அங்கு மைஸூர் ப்ராந்தத்தில் தொண்டனூர் என்னும் கிராமத்தில் சிலகாலம் அவர் தங்கியிருந்தார். அப்போது மைஸூரை ஆண்டுகொண்டிருந்த விடலதேவன் என்னும் க்ஷபண (ஜின) அரசனை வைணவ மதத்திற்குத் திருத்தி, அவனுக்கு விஷ்ணுவர்த்தனன் என்னும் புதிய பெயரையும் தந்து, தம்முடைய சிஷ்யர்களில் ஒருவராக ஆக்கிப் பணிகொண்டார். அச்சமயம் இராமானுஜர் ஒருகால் ஊர்த்வபுண்ட்ரம் சாத்திக் கொள்ளத் திருமண் அகப்படாமல் சோகித்திருந்தபோது திருநாராயணபுரத் தெம்பெருமான் ஸ்வப்னத்தில் ஸேவை தந்து தம்முடைய அர்ச்சா விக்ரஹம் பூமியின் கீழ்ப் புதைந்து கிடந்த விடத்தையும், அதற்குச் சமீபத்தில் திருமண் அபரிமிதமாக மறைந்து கிடந்த விடத்தையும் காட்டியருளினர். பிறகு 'ராமப்ரியர்' என்னும் தம்முடைய அழகிய உத்ஸவ மூர்த்தி வடநாட்டில் டெல்லியில் ஒரு துருஷ்கராஜனின் அரண்மனையில் அகப்பட்டுக் கொண்டிருந்ததையும் ஸ்வப்னமுகனே அறிவித்தார், உடனே இராமானுஜர் டெல்லிக்கு எழுந்தருளி, அங்கிருந்த துருஷ்க அரசனை யணுகி அந்த உத்ஸவ மூர்த்தியை மீளவும் திருநாராயணபுரத்துக்கு எழுந்தருப்பண்ணி க்ரமேண ப்ரதிஷ்டை செய்வித்தார், என்று. (இது சுருக்கமாக வரைந்தபடி.)

இது விஷயமாக, ஒரு வடநாட்டுப் பெரியார், "இராமானுஜர் காலத்தில் டெல்லிப் பிராந்தத்தில் துருஷ்க ராஜ்ஜியம் ஏற்பட்டிருந்ததில்லை; ஆகையால் இராமானுஜர் திருநாராயணபுரத்து உத்ஸவமூர்த்தியைத் துருஷ்க ராஜாவிடமிருந்து மீட்டுக்கொண்டு போவதற்காக டெல்லிக்கு எழுந்தருளினரென்று தென்தேசத்திய வைணவர்கள் தங்களது சரித நூல்களில் எழுதிவைத்திருப்பது மிகவும் ஆதாரமற்றது." என்று எழுதியுள்ளார். இதைப்பற்றி சரித்திர ரீதியாகச் சில விஷயங்களைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

வடஇந்தியாவின் சரிதம் சரியாக எழுதப்பட்டிருக்கும் எந்த புத்தகத்தை எடுத்துப் பார்த்தாலும் இராமானுஜர் காலத்தில் டெல்லி ப்ராந்தத்தில் துருஷ்க ஸாம்ராஜ்யம் ஏற்பட்டிருந்ததென்று ஸந்தேஹமற விளங்கும். இராமானுஜர் உயிர் வாழ்ந்திருந்த காலம் கி. பி. 1017—1137 வரையில். இதைப்பற்றி, இதுவரையில் எவர்க்கும் யாதொரு ஸந்தேகமும் ஏற்பட்டிருந்ததில்லை. கஜனி மஹமது (Mahmud of Gazni) துருக்கியிலிருந்து வட இந்தியாவில் படையெடுத்து வந்து பஞ்சாபில் ஜெயபாலன் என்னும் அரசனை வென்றது கி. பி. 1001-ம் வருஷத்தில். (Please see, for instance, "The Oxford History of India" by Vincent A. Smith, C. I. E. 1921 pages 190 to 192) அவன் யமுனை நதியைக் கடந்தது கி. பி. 1018-ம் வருஷம் டிசம்பர் மாதம் 2-ம் தேதியில். இவ்வருஷத்திலேயே மதுரையும் தாக்கப்

பட்டது. பஞ்சாப் முழுதும் பிடிபட்டது. கி. பி. 1019-ம் வருஷம் கனோஜ் (Kanauj) பிடிபட்டது. கி. பி. 1022-ல் லாஹூர் முழுவதிலும் துருஷ்க ராஜ்யம் ஏற்பட்டு விட்டது. (Pl. see P. 6. Ch, ii Lethbridge's History of India) கி. பி. 1024—25-ல் கத்தியவாரிலுள்ள பெயர் பெற்ற ஸோமநாத் கோயில் (Somnath Temple) தாக்கப்பட்டு கொள்ளையடிக்கப் பட்டிருக்கிறது. மஹாவீரனான கஜனி மஹமது (Gazna Mahmud) கி. பி. 1030ல் இறந்து விட்டாலும், அவனுக்குப் பிறகு அஹமது (Ahmad) வட இந்தியாவை ஆண்டான். கி. பி. 1098-ல் இரண்டாம் மஸூது (Masud the second) ஆண்டுகொண்டிருந்தான். கி. பி. 1100 வருஷம் வரையில் கஜனுவிட் துருஷ்க ராஜ்யம் வட இந்தியாவில் பலமாக விருந்திருக்கிறது. பிறகே இது க்ஷீணதசையை அடைந்திருக்கிறது.

இராமானுஜர் முதன் முதல் திருநாராயணபுரம் எழுந்தருளிய போது அவருக்கு வயது ஏறக்குறைய 89 என்று மைஸூரிலுள்ள கல்வெட்டுகளினால் ஏற்படுகிறது. அவர் டெல்லிக்குப் போனது கி. பி. 1097-க்கு மேல் 1100 க்குள்ளிருந்திருக்கவேண்டும். அப்போது கஸனுவிட் துருஷ்க ராஜ்ஜியம் டெல்லி ப்ராந்தத்தில் ஸந்தேகமற இருந்திருக்கிறது.

கனோஜ் (Kanauj) நகரை துருஷ்க அரசர்கள் வெகுகாலம் தங்களது முக்கிய தலைநகரமாக வைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் கஜனி மஹமது இறந்த பிறகு லாகூர், டெல்லி முதலிய நகரங்களும் முக்கிய ஸ்தலங்களாக விருந்திருக்கின்றன. திருநாராயணபுரத்து உத்ஸவ மூர்த்தி இராமானுஜர் எழுந்தருளிய போது கனோஜிலேயே இருந்து இருக்கலாம். அந்த நகரைத் தென்தேசத்தவர்கள் டெல்லியாக வழங்கி யிருக்கலாம். அல்லது லாகூரிலேயோ, டெல்லியிலேயோ அது இருந்திருக்கலாம். ஊரின் பெயர் முக்கியமல்ல; வட இந்தியாவில் ஒரு துருஷ்க அரசனின் வசத்திலிருந்ததே முக்கியம்.

அடுத்தபடியாக எழும் முக்கியமான கேள்வி என்னவென்றால், எப்படி மேல்கோட்டையிலிருந்து (திருநாராயணபுரத்திலிருந்து) இந்த விக்ரஹம் வடதேசத்திற்குச் சென்றது என்பதே. கி பி 1097-க்கு முன் துருஷ்க ஆதிக்யம் மைசூர் பிராந்தம் வரையில் சென்றிருந்ததா வென்கிற கேள்வி எழக்கூடும். ஒரே ஒரு சாக்ஷிதான் இவ்விஷயத்தில் நமக்கு உதவுகிறது. மைசூரில் தொண்டனூருக்கருகில் ஒரு கல்வெட்டு இருக்கிறதாம். இந்த கல்வெட்டிலிருந்து, கஜனிமஹமது ஸேனையைச் சேர்ந்த ஓர் தீவிர மஹமதிய வீரன் அது வரையில் படையெடுத்து வந்து அங்கு மாண்டு புதையுண்டிருக்கிறான் என்று ஏற்படுகிறதாம். (Vide P. 189 Foot-note in "The life of Ramanuja" by A. Govindacharya) கஜனி மஹமத்தின் அட்டூழியம் எவ்வளவு தூரம் ஊடுருவிச் சென்றிருக்கிறது என்பது இதனால் விளங்குகிறது. நமது குரு பரம்பராப்ரபாவாதிகளில் கூறப்பட்டிருக்கும் ஐதிஹ்யமும் ஸ்தாபிதமாகிறது. ... ... ... ... ... *

---

## 6. ஸ்ரீ ராமாயணஞதிகளில் பாடப்பிறழ்வுகள்.

ஸ்ரீ ராமாயணமும் மஹாபாரதமும் உலகம் முழுவதும் கையாண்டு வரும் மஹா க்ரந்தங்கள். இவற்றில் அபரிமிதமான மாறுபாடுகள் காணப்படுகின்றன. ஏற்கெனவேயிருந்த ச்லோகங்கள் எடுக்கப்பட்டும், பதங்களும் வாக்யங்களும் அக்ஷரங்களும் மாறுபடுத்தப்பட்டும், புதியச்லோகங்கள் சேர்க்கப்பட்டும்............இப்படியாகப் பல மாறுபாடுகள் காண்கின்றன. உதாரணமாக ஒன்றிரண்டுகாட்டுவோம்; ஸ்ரீராமாயணத்தில் பிராட்டிக்கும் இராவணனுக்கும் (பஞ்சவடியில் முதன்



முதலாக) ஸம்வாதம் நடக்கு மிடத்து பிராட்டி தன் வரலாறுகளைக் கூறிவரும் போது மிதிலையில் திருக்கல்யாணமான பிறகு திருவயோத்யையில் பன்னிரண்டாண்டுகள் பேரின்பமாக வஸித்துக் கொண்டிருந்ததைக் கூறும் ச்லோகம். * ஸமா த்வாதச தத்ராஹம் ராகவஸ்ய நிவேசநே * என்கிற ஆநுபூர்வியாக நம் பூர்வாசார்யர்களால் பலவிடங்களில் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. இதை பகவத்விஷயாதிகளிற் காணலாம். ஸ்ரீராமாயணப் பதிப்புகளிலோ வென்னில். இந்த ஆநுபூர்வியில்லாமல் * உஷித்வா த்வாதச ஸமா இக்ஷ்வாகூணாம் நிவேசநே * என்றிவ்விதமாகக் காண்கிறது. பூர்வாசாரியர்களின் காலத்திற்கு ஸந்நிஹிதரான ஸ்ரீ கோவிந்தராஜரும் பூருவர்கள் கொண்ட பாடத்தையிட்டு வியாக்கியானம் செய்யவில்லை. உஷித்வா இத்யாதியாக மேலே காட்டிய பாடமே அவருடைய வியாக்கியானத்திலு மேறியிருக்கிறது, * ராகவஸ்ய நிவேசநே * என்ற ஸ்தானத்தில் 'இக்ஷ்வாகூணாம் நிவேசநே' என்று வைத்து "வ்ரீடயா பர்த்ருநாம அக்ரஹணம்"—வெட்கத்தினால் பர்த்தாவின் பெயரைக் கூறவில்லை" என்று மெழுதியுள்ளார் கோவிந்தராஜர். இதற்கடுத்த முன் ச்லோகத்தில் "ஸீதா நாம்நாஸ்மி பத்ரம்தே ராமபார்யா த்விஜோத்தம!" என்று ஸ்பஷ்டமாக பர்த்தாவின் நாமக்ரஹணம் செய்யப்பட்டேயிருக்கிறது; கோவிந்தராஜர் அதைக் குறிக்கொள்ளாதவரல்லர்; "கஸ்யேத்யஸ்ய உத்தரமாஹ—ராமேதி." என்றும் வியாக்கியானமெழுதியுள்ளார். பர்த்தாவின் நாமத்தை அடிக்கடி சொல்லவேண்டிய அவச்யமு மில்லை. பூர்வாசாரியர்களின் பாடப்படி [* ராகவஸ்ய நிவேசநே * என்கிற பாடப்படி] பர்த்ரு நாமக்ரஹணமு மிருக்கிறது. வேறுவிதமான பாடம் கோவிந்தராஜர்க்கு எங்ஙனே ப்ராப்தமாயிற்றென்று தெரியவில்லை.

மற்றோரிடமுங் காண்மின்; பெருமாள் மதங்காச்ரமத்திற்கு எழுந்தருளினவளவில் சபரியின் வார்த்தையாக * சக்ஷுஷா தவ ஸௌம்யேந பூதாஸ்மி ரகுநந்தந, பாதமூலம் கமிஷ்யாமி யாநஹம் பர்யசாரிஷம் * (ஆரண்-74-13.) என்கிற ச்லோகத்தைப் பூர்வாசாரியர்கள் பல விடங்களில் உதாஹரித்துள்ளார்கள். இதில் உத்தரார்த்தத்தில் இன் சுவைமிக்க பொருளொன்று நிரம்பியுள்ளது. பரமபதம் சென்றவர்களை ஆசாரியன் திருவடி சேர்ந்ததாக வ்யவஹரிப்பது ஸம்ப்ரதாயம். அதற்கு இந்த சபரியின் வாக்கே மூலமென்று ஆசாரியர்கள் திருவுள்ளம் பற்றுகிறார்கள். * பாதமூலம் கமிஷ்யாமி யாநஹம் பர்யசாரிஷம் * என்று பாடமிருந்தால் தான் இவ் விசேஷார்த்தம் இடம் பெறும். இவ்வாச்ரமத்தில் எந்த பெரியோர்களுக்கு நான் பணிவிடை செய்து கொண்டிருந்தேனோ, அவர்கள் திருநாடு சேர்ந்திருக்கிறார்கள்; அவர்களது திருவடிவாரம் சென்று சேரப்போகிறேன் என்பதாக இதற்குப் பொருள். ஸ்ரீ ராமாயண கோசங்களில் இப்பாடம்காணவேயில்லை. * கமிஷ்யாம்யக்ஷயாந் லோகாந் த்வத்ப்ரஸாதாத் அரிந்தம. * என்றே பாடம் காண்கிறது. பூர்வார்த்தமும் * தவாஹம் சக்ஷுஷா ஸௌம்ய பூதா ஸௌம்யேந மாநத! * என்றும் மற்றும் பலவிதமாகவும் மாறுபட்டுக்காண்கிறது. அது கிடக்கட்டும். உத்தரார்த்தம் பூர்த்தியாகவே உருமாறிக் கிடக்கிறது. இங்கு கோவிந்தராஜருங்கூட பூர்வாசார்ய ஸம்மதமான * பாதமூலம் கமிஷ்யாமி யாநஹம் பர்யசாரிஷம் * என்கிற பாடத்தைக் கொண்டு வியாக்கியானம் செய்யவில்லை. * கமிஷ்யாம்யக்ஷயாந் லோகாந் த்வத்ப்ரஸாதாத் அரிந்தம * என்கிற பாடத்தையே கொண்டு வியாக்கியான மிட்டிருக்கிறார். இந்த ப்ரகரணத்தில் ஸ்ரீ ராமாயணத்தின் முன்பின் ஸந்தர்ப்பங்களை நன்கு விமர்சித்தால் நம் ஆசாரியர்கள் கொண்ட பாடமே பொருந்து மென்று எண்ணத்தகும். பெருமாள் சபரியைக் கண்டபோதே * கச்சித்தே குருசுச்ரூஷா ஸபலா சாருபாஷிணி * [ஆசார்ய ஸேவைபண்ணிப் பழுத்தவளென்று தெரியும்படி அழகாகப் பேசுகின்ற சபரியே! நீ செய்த ஆசார்ய சுச்ரூஷை யெல்லாம் ஸபலமாயிற்றா?] என்று கேட்கிறார். சபரியும் அதை அடியொற்றியே

விடைகூறுகின்றனர். அதற்கு ஆசாரியர்கள் ஆதரித்த பாடமே பொருந்தும். மாறுபாடான பாடங்கள் எப்போது புகுந்தன? எதற்காகப் புகுந்தன? எங்ஙனம் புகுந்தன? என்று கண்டறிய முடியாமலிருக்கிறது.

மஹாபாரதத்திலும் இங்ஙனே பலபலவுள்ளன. இந்த வியாஸத்திற்கு முன்னேயுள்ள 'பகவத்கடாக்ஷ வீக்ஷணமஹிமை' என்னும் வியாஸத்தில் ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகனுடைய ரஹஸ்யத்ரய ஸாரபங்க்தியை உதாஹரித்திருக்கிறோம்; அதாவது.

"துர்யோதநன் *பீஷ்ம த்ரோணாவதிக்ரம்ய மாஞ்சைவ மதுஸூதந, கிமர்த்தம் புண்டரீகாக்ஷ புக்தம் வ்ருஷலபோஜநம்?* என்று கேட்க, *த்விஷதந்நம் நபோக்தவ்யம் த்விஷந்தம் நைவபோஜயேத், பாண்டவாந் த்விஷஸே ராஜந் மம ப்ராணா ஹி பாண்டவா:* என்று உத்தரமருளிச் செய்கையாலே"

என்கிற பங்க்தி ப்ரபாவவ்யவஸ்தாதிகாரத்திலுள்ளது. நமக்குக் கிடைக்கிற மஹாபாரத ஸ்ரீ கோசமெதிலும் இதுபொருந்தும்படியான ஸந்நிவேசமில்லை. துர்யோதந ஸபையில் நின்றும் மீண்டெழுந்தருளின பிறகே விதுரர் திருமாளிகையில் அமுது செய்ததாக சரித்திரமுள்ளது. துர்யோதநன் கேள்வி கேட்டதாகத் தெரிவிக்கப்படுகிற *பீஷ்ம த்ரோணாவதிக்ரம்ய - இத்யாதி ச்லோகம் மஹாபாரதத்தில் இந்த ப்ரகரணத்தில் காணப்படுவதுமில்லை. ஆசார்ய ஹ்ருதயத்தில் (95) *ச்ரமணீ விதுரேத்யாதி சூர்ணையின் வியாக்கியானத்தில் மணவாள மாமுனிகளும் இவ்விதமாக அருளிச்செய்திருக்கக் காண்கிறோம். நாம் எதை அப்ராமாணிகமென்பது? இந்த ப்ரகரணத்தில் *ஸம்ஸ்ப்ருசந் ஆஸநம் சௌரேர் விதுரஸ்ஸ மஹாமதி:* என்கிற ச்லோகத்தை யெடுத்து நம் ஆசார்யர்கள் பணித்தருளும் அர்த்த விசேஷமும் இப்போது காணும் மஹாபாரத ப்ரக்ரியைக்கு ஒவ்வாததா யிருக்கின்றது. பாடப்பிறழ்வு இல்லாத பழைய இதிஹாஸபுராண ச்லோகங்களை ஸம்பாதிக்க முயலவேணும். ... ... ... ... *

---

# 7. பகவத்கீதா ஸப்தமாத்யாய ரஸாநுபவம்.

கீதையின் ஏழாவது அத்யாயத்தை யிட்டு கீதைக்கு ஒரு அபக்க்யாதி விளைந்திருப்பதுண்டு; ஓரூரில் ஒரு பண்டிதர் கீதா ப்ரவசநம் செய்து கொண்டிருந்தாராம். பலர் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஒருவர் மாத்திரம் அந்த கோஷ்டியில் அந்வயிப்பதில்லை. ஆப்தர்கள் அவரை வெகு நிர்ப்பந்தித்து ஒருநாள் கீதாகாலக்ஷேப கோஷ்டியில் அந்வயிப்பித்தார்கள். அவர் வந்து சேர்ந்த தினத்தில் ஏழாமத்யாயத்தில் பதினைந்தாம் ச்லோகம் ஆரம்பிக்கப்பட்டதாம். அதாவது * ந மாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா:, மாயயாபஹ்ருதஜ்ஞாநா: ஆஸுரம் பாவமாச்ரிதா:* என்பது. இந்த ச்லோகம் முழுவதும் நிந்தையே நிறைந்திருப்பதால் பாஷ்யாதிகளையும் அநுஸரித்து அந்த நிந்தைகளை வெகு விரிவாக உபந்யஸித்தார் ப்ரவசநகாரர். அன்றே புதிதாகக் கேட்க வந்தவர் இந்த கீதையில் இப்படிப்பட்ட நிந்தைகள்தான் நிறைந்திருப்பன போலும் என்றெண்ணி மிகவும் வெறுப்படைந்தாராம். மறுநாளும் 'இன்றைக்கு விஷயம் எப்படி யிருக்கிறது பார்ப்போம்' என்று பரீக்ஷார்த்தமாகக் காலக்ஷேப கோஷ்டிக்கு வந்தாராம்; அன்று அதற்கடுத்த சுலோகம்—(7-16.) * சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ் ஸுக்ருதிநோர்ஜுந. ஆர்த்தோஜிஜ்ஞாஸு ரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப. * என்பது விரிவாக உபந்யஸிக்கப் பட்டதாம். முன் ச்லோகத்தில் நிந்தை நிறைந்தது; இந்த ச்லோகத்தில் ஸ்துதி நிறைந்தது. இரண்டும் பிசகுதானே. அதனால் அந்த ச்ரோதா



கீதையில் வீணான நிந்தையும் ஸ்துதியும் தவிர வேறு கிடையாது' என்று முடிவு செய்துகொண்டு மூன்றுநாள் தொடங்கிக் காலக்ஷேபத்திற்கு வருவதை நிறுத்திக்கொண்டாராம். ஏன் வருவதில்லை யென்று கேட்பவர்களுக்கு "கீதையில் என்ன இருக்கிறது. பரநிந்தை பத்தத்யாயம்; ஆத்மஸ்துதி ஆறத்யாயம்; இன்னு மேதாவது விஷயங்கள் இரண்டத்யாயமிருக்கும்." என்றாராம். இது இவருடைய மருள் இருந்தபடி. திருவாய்மொழியில் (3-5) * * மொய்ம்மாம்பூம்பொழிற் பொய்கைப் பதிகமும் இந்தஏழாமத்யாயமும் ஒரு நிகராக நினைக்கப்படலாம். அப்பதிகத்தின் ஸாரத்தை நூற்றந்தாதியி லருளிச்செய்த மணவாள மாமுனிகள் "அன்பா லாட்செய்பவரை யாதரித்தும், அன்பிலா மூடரை நிந்தித்தும் மொழிந்தருளும் மாறன்பால்" என்கிறார். நிந்திக்க வேண்டியவர்களை நிந்திப்பதும் ஸ்துதிக்க வேண்டியவர்களை ஸ்துதிப்பதும் ப்ராப்தந்தானே. அது நிற்க. "சதுர்விதா பஜந்தே மாம்" என்கிற ச்லோகத்தில் ஆர்த்த:, ஜிஜ்ஞாஸு:. அர்த்தார்த்தீ, ஜ்ஞாநீ என்று நால்வகை யதிகாரிகள் கூறப்படுகிறார்கள். இவர்களை விவரிக்கின்ற சங்கராசார்யஸ்வாமிகள் தமது பாஷ்யத்தில் "आर्तः- तस्करव्याघ्ररोगादिना अभिभूतः आपन्नः; जिज्ञासुः— भगवत्तत्त्वं ज्ञातुमिच्छति यः; अर्थार्थी- धनकामः; ज्ञानी— विष्णोस्तत्त्ववित्" என்று எழுதியுள்ளார். மத்வபாஷ்யகாரரான ஆனந்த தீர்த்தர் ஒரு விவரணமு மெழுதவில்லை. சங்கராசாரியர்—திருடர் புலி பிணி முதலியவற்றால் துன்பமடைந்தவனை ஆர்த்தனென்றும், பகவானை யறிய விரும்புகிறவனை ஜிஜ்ஞாஸுவென்றும், தனம் பெற விரும்புமவனை அர்த்தார்த்தி யென்றும், விஷ்ணுதத்த்வ மறிந்தவனை ஜ்ஞானி யென்றும் விவரித்திருக்கின்றார். நமது பாஷ்யகாரரான ஸ்வாமி யெம்பெருமானார்—ப்ரஷ்டைச்வர்ய காமனை ஆர்த்த னென்றும், அபூர்வைச்வர்யகாமனை அர்த்தார்த்தி யென்றும், கைவல்ய காமனை ஜிஜ்ஞாஸு வென்றும், ஸ்வஸ்வரூபமுணர்ந்தவனை ஜ்ஞானியென்றும் விவரித்தருளுகிறார். இவற்றுள் எந்த விவரணத்தில் பொருத்தமுள்ளதென்பதைப்பற்றி நாம் இங்கு விமர்சிக்க விரும்பவில்லை. இங்ஙனே விலக்ஷணமான விவரணத்தை நம் ஸ்வாமி செய்தருளியதற்கு மூலமென்ன? என்று விமர்சிக்க ப்ராப்தம். இதை விமர்சிக்குமளவில், ஆழ்வார்களின் ஸ்ரீ ஸூக்தியை அடி யொற்றிப் பேசவேணு மென்று ஸ்வாமி கொண்டிருந்த உறுதிதான் இதற்கு மூலமென்று நன்கு புலப்படும். திருப்பல்லாண்டில், * வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல் * என்கிற பாசுரத்தினால் ஜ்ஞானிகளை யழைத்தும், * ஏடு நிலத்திலிடுவதன் முன்னமென்கிற பாசுரத்தினால் கைவல்யார்த்திகளை யழைத்தும், * அண்டக்குலத்துக் கதிபதியாகி யென்கிற பாசுரத்தினால் அபூர்வைச்வர்ய காமர்களையும், ப்ரஷ்டைச்வர்ய காமர்களையு மழைத்தும் உபதேசம் தந்தருளியிருப்பது ஸுஸ்பஷ்டம். இதுவன்றியும் திருவாய்மொழியில் * ஒருநாயகமாய் * என்கிற பதிகத்தில் இந்நால்வகை யதிகாரிகளும் தெரிவிக்கப்பட்டிருப்பதும் ப்ரஸித்தம். கீதையிலுள்ள * சதுர்விதா பஜந்தே மாம் * என்னுமிந்த ச்லோகத்தை யடி யொற்றியே அந்தப் பாசுரங்கள் திருவவதரித்தனவாக ஸம்ப்ரதாய மாகையாலே * மாறனுரைசெய்த தமிழ்மறை வளர்த்தவரான ஸ்வாமி யெம்பெருமானார் திவ்ய ப்ரபந்தச் சாயையிலேயே அருளிச்செய்தாரென்பது இங்குக் குறிக்கொள்ள வேண்டிய பரமார்த்தம்.

மற்றுமொரு விஷயமிங்கு நெஞ்சிற் பதிய வைத்துக் கொள்ளத்தக்கதுண்டு. ஸ்ரீவசந பூஷணத்தில் (73) "அஹமர்த்தத்துக்கு ஜ்ஞாநாநந்தங்கள் தடஸ்தமென்னும்படி தாஸ்யமிறே அந்தரங்க நிரூபகம்" என்ற சூர்ணையின் வியாக்கியானத்தில்—"திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீ பாதத்திலே ஆழ்வான் ஆறுமாஸம் ஸேவித்து நின்று மஹாநிதியாகப்பெற்ற அர்த்தமிறேயிது" என்று மணவாளமாமுனிகள் அருளிச் செய்கிறார். எம்பெருமானார் கோஷ்டியில் ஒருநாள் 'ஜீவாத்மாவுக்கு அந்தரங்க நிரூபகம் ஜ்ஞாத்ருத்வமா? சேஷத்வமா?' என்று

விசாரமுண்டாக, எம்பெருமானார் கூரத்தாழ்வானைத் திருக்கோட்டியூர் நம்பி பக்கலில் விடை கொண்டு இதையறிந்து வருமாறு நியமித்தருள, ஆழ்வான் அப்படியே விடைகொண்டு ஆறுமாஸம் ஸேவித்திருந்து சேஷத்வமே அந்தரங்க நிரூபகமென்று தெளிந்து மீண்டதாக ஐதிஹ்யமுள்ளது. அப்படி மஹாநிதியாகப் பெற்று வந்த மஹார்த்தத்தை ஸ்வாமி யெம்பெருமானார் எவ்விடத்திலாவது பதிய வைத்திருப்பதுண்டோ வென்று சிலர் கேட்பதுண்டு. அவர்களுக்குச் சொல்லுகிறோம்; * சதுர்விதா பஜந்தே மாம் * என்கிற இந்த கீதா ச்லோகத்தின் பாஷ்யத்தில் ஜ்ஞாநீ என்பதற்கு அர்த்தம் செய்தருளுமிடத்து "ज्ञानी च- * इतस्त्वन्यां प्रकृतिं विद्धि मे पराम् * इत्यादिनाऽभिहितभगवच्छेषतैकरसात्मस्वरूपवित् " என்றருளியுள்ளார். விஷ்ணு தத்வத்தை யறிந்தவனை ஜ்ஞாநி யென்றார் சங்கராசாரியர்; ஜீவாத்மஸ்வரூபத்தை யறிந்தவனை ஜ்ஞாநியென்கிறார் நம் ஸ்வாமி. அந்த ஜீவாத்மாவுக்கு விசேஷணமிடுகிறார் [பகவத் சேஷதைகரஸ] என்று. ப்ரஹ்மஸூத்ரக்காரர் *ஜ்ஞோதஏவ *என்கிற ஸூத்ரத்தினால் ஆத்மாவுக்கு ஜ்ஞாத்ருத்வத்தை ஸ்தாபிக்கிறார். ஜ்ஞாதா என்பதற்கு 'அறியுமவன்' என்று பொருள். எதை அறியுமவன் என்று கேள்வி வரில், தான் பகவச்சேஷபூதன் என்பதை யறியுமவன் என்று பொருள் சொல்லவேண்டு மென்பது எம்பெருமானார் திருவுள்ளம். "भगवच्छेषतैकरसात्मस्वरूप" என்னும் சொல்தொடர் இதரர்களின் க்ரந்தங்களொன்றிலும் வர்ஷசதம் தேடினாலும் கிடைக்கமாட்டாது. இப்படி விலக்ஷணமான ஸ்ரீ ஸூக்தியை அஸக்ருத் அருளிச் செய்திருக்கிற நம் ஸ்வாமி, திருக்கோட்டியூர் நம்பி பக்கலில் நின்றும் ஆழ்வான் கொணர்ந்த நிதியைப் பெற்றவரென்பதில் ஸந்தேஹமுண்டோ?

இதற்கடுத்த (7-17.) * தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த: * என்னும் ச்லோகத்தின் உத்தரார்த்தம் "ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:" என்றுள்ளது. இங்கு நம் ஸ்வாமி "ஜ்ஞாநிந: அஹம் அத்யர்த்தம் ப்ரிய:" என்று க்ரமாந்வயத்தையே திருவுள்ளம்பற்றி பாஷ்யமிட்டருளினார். இவ்வந்வயக்ரமத்தில்—ஞானிக்குத் தன்னிடத்தில் ப்ரீதி அதிகம் என்றதாக விளங்குகிறது. உண்மையில், பகவானிடத்தில் ஞானி வைத்திருக்கிற ப்ரீதி அதிகமா? ஞானியினிடத்தில் பகவான் வைத்திருக்கிற ப்ரீதி அதிகமா? என்று ஆராய்ந்து பார்க்குமளவில் ஞானியினிடத்தில் பகவான் வைத்திருக்கிற ப்ரீதிதான் அதிகமென்னத் தகும். ஆகவே இந்த ச்லோகத்தில் [அத்யர்த்தம்] என்பதை 'அஹம்ப்ரிய:' என்பதிலே கூட்டுவதை விட 'மம ப்ரிய:' என்பதிலே கூட்டுவதுதான் ரஸவத்தரமென்று திருவுள்ளம் பற்றின ஸ்வாமி ஸ்ரீ பாஷ்யத்தில் சரமஸூத்ரமான * அநாவ்ருத்தி ஸூத்ரத்தின் பாஷ்யத்தில் "अत्यर्थप्रियं ज्ञानिनं लब्ध्वा" என்கிற அநர்க்கமான வாக்கியத்தினால் அந்த அந்வய க்ரமத்தையும் காட்டியருளினார். அந்த ஸ்ரீ பாஷ்ய ஸூக்தியின்படி ப்ரக்ருத கீதா ச்லோகாந்வயம் எப்படி கொள்ளவேணு மென்னில்; "ஜ்ஞாநிந: அஹம் ப்ரிய: ஸ ச மம அத்யர்த்தம் ப்ரிய:" என்றிங்ஙனே கொள்ளவேணும். ... ... ... *

---

# 8. ஸ்ரீ பாஷ்யகார திவ்யஸூக்தி விசேஷாநுபவம்.

ஸ்ரீ க்ருஷ்ணபரமாத்மா வாஸ்தவமாகத் திருவவதாரம் செய்து, வாஸ்தவமான அர்த்தங்களை நிரப்பி வாஸ்தவமாக கீதாசாஸ்திரத்தை யவதரிப்பித்தருளினதாக ஸ்ரீ பகவத்ராமாநுஜனடியார்களான நாம் நம்பியிருக்கிறோம். ஸ்வாமியிட்டருளின கீதாபாஷ்யத்தின் அவதாரிகையிலும் மேலே பல ச்லோகங்களின் பாஷ்யத்திலும் இந்த நம்பிக்கையே நமக்கு



வார்ஜிதமாக்கப்படுகின்றது. ஸ்ரீமத் சங்கராசார்யஸ்வாமிகளியற்றிய பாஷ்யத்தின் போக்கோ இதற்கு மாறாகவுள்ளது. அவர் தம்முடைய பாஷ்ய அவதாரிகையில் [பகவாந்... ஸ்வமாயயா தேஹவாநிவ ஜாத இவ ச லோகாநுக்ரஹம் குர்வந் லக்ஷ்யதே] என்றெழுதிவைத்திருக்கக் காண்கிறோம். இதனால், பகவான் உண்மையில் தேஹபரிக்ரஹம் செய்தருளவில்லையென்றும், உண்மையான அவதாரம் செய்தருளவில்லையென்றும், மாயையினால் ஏதோ ஜனங்களை மயக்கிக் காட்டினதாகவும் சங்கராசாரியர் அபிப்ராயப் படுவதாக விளங்குகின்றது. இப்படி இவர் அபிப்ராயப்படுவதற்கு ஒரு காரணபாஸமுண்டு; அதாவதென்னென்னில்; மேலே நான்காமத்யாயத்திலே பகவான் தானே தன்னுடைய அவதாரத்தைப்பற்றிப் பேசிவருகையில் (4-6) 'ஆத்ம மாயயா ஸம்பவாமி' என்றுள்ளது. இதற்கு உண்மையான பொருள் எதுவோ அது பகவத் ராமாநுஜ பாஷ்யத்தில் ப்ரமாண ப்ரதர்சந புரஸ்ஸரமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. आत्ममायया—आत्मीयया मायया। * माया वयुनं ज्ञानम् * इति ज्ञानपर्यायोऽत्र मायाशब्दः। तथा चाभियुक्तप्रयोगः—* मायया सततं वेत्ति प्राणिनां च शुभाशुभम् इति। आत्मीयेन ज्ञानेन—आत्मसंकल्पेनेत्यर्थः ॥" என்பன கீதாபாஷ்யத்தில் அங்கு ஸ்வாமி யருளிச்செய்துள்ள ஸ்ரீஸூக்திகள். வைதிக நிகண்டுவையும் அதையநுஸரித்த அபியுக்த பிரயோகத்தையும் காட்டி ஸங்கல்பரூபஜ்ஞானமே இங்கு மாயா சப்தார்த்தமென்று ஸ்வாமி நிர்ணயித்திருக்கிறார். இதுதான் மஹர்ஷிகளின் அபிப்ராயத்திற்கு மிகவு மிணங்கிய ப்ராமாணிகமான பொருள். ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் (6-5-84) *இச்சாக்ருஹீதாபிமதோரு தேஹ:* என்று, மாயாசப்தஸ்தானத்தில் இச்சாசப்தத்தை நிஸ்ஸந்தேஹமாக இட்டு, பகவான் தன்னுடைய இச்சையினாலே தனக்கு அபிமதமான பல திவ்யமங்கல விக்ரஹங்களைப் பரிக்ரஹித்துக்கொண்டு அவதரிப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது.

இங்கு சங்கராசார்யர் "संभवामि—देहवानिव भवामि; जात इव, आत्ममायया—आत्मनो मायया, न परमार्थतः लोकवत्" என்று எழுதியுள்ளார். கானலானது தன்னிடத்தில் தண்ணீர் இல்லாமலிருக்கச் செய்தேயும் அது இருப்பதுபோல் காட்டுகிறதல்லவா? அப்படியே பகவானும் தான் உண்மையில் தேஹபரிக்ரஹம் பண்ணுதவனாகையாலே தன்னிடத்தில் தேஹமில்லாதிருக்கச் செய்தேயும் இருப்பதுபோல் மாயையினால் காட்டிக்கொண்டிருக்கிறான் என்பது சங்கராசார்யருடைய அபிப்ராயம். மாயா என்னுஞ் சொல்லுக்கு பொய்யென்பதே இவர் கொண்ட பொருளாகும். அந்த நாலாவது அத்யாயத்திலேயே மேல் ஒன்பதாவது ச்லோகத்தில் * [ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்த்வத:, த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந.] என்பதில் பகவான் தானே தன்னுடைய அவதாரத்தையும் அவதார சேஷ்டிதத்தையும் ஸத்யமாக எவன் அறிகிறானோ அவன் வர்த்தமாந தேஹத்தை விட்டொழித்து மறுபிறவி யடையாமல் தன்னையே யடைவதாகச் சொல்லியிருக்கின்றான். மே ஜந்ம கர்ம ச ய: தத்த்வத வேத்தி:' என்றிருப்பதை ஸ்வமதப்ரதிகூலமாக நினைத்த சங்கராசார்யர் வெகு சாதுர்யமாய் வேறுவிதமாக அந்வயம் காட்டியுள்ளார். தத்த்வத: என்பதை 'யோ வேத்தி' என்பதில் கூட்டாமல் 'தத்த்வத: தேஹம் த்யக்த்வா' என்று உத்தரார்த்தத்திலே அந்வயித்துப் பொருளுரைத்தார். அவர் இவ்வளவு ச்ரமம் எதற்காகப் படுகிறாரென்றால், 'ஸம்பவாமி ஆத்மமாயயா' என்றுள்ள விடத்தில் மாயா சப்தத்திற்குத் தாம் கொண்ட பொருளே பொருளென்கிற வொரு அபிநிவேசத்தினால்தான்.

ப்ராமாணிகர்கள் இங்கு மத்யஸ்த நிலையில் நின்று ஒன்று குறிக்கொள்ள வேண்டும். தைத்திரீய யஜுர்ப்ராஹ்மணத்தில் காடகமென்னும் பகுதியில் மூன்றும் ப்ரச்நத்தில் "வாசஸ:

पाँसवो भूमेः। संख्याता देवमायया " என்று ஓதப்பட்டிருக்கின்றது. பூமியிலுள்ள மண் துகள்களெல்லாம் தேவர்களின் மாயையினால் கணக்கிடப் பெற்றவையாக இதில் சொல்லப்படுகிறது. இங்கு மாயையென்பதற்குப் பிறர் கூறும் பொருள் பொருந்தமாட்டாதென்பது வெளிப்படை. பூமியிலுள்ள மண்துகள்கள் மனிதர்களின் ஞானத்தினால் கணக்கிட முடியாதவையாயினும் தேவர்களின் ஞானத்தினால் கணக்கிடக்கூடியவையே யாதலால் இங்கு 'தேவமாயயா' என்றதற்கு 'தேவர்களின் ஞானத்தாலே' என்பதுதான் பொருளென்று யாவரும் நிராக்ஷேபமாக இசையத்தக்கதாகும். வித்யாரண்யர் முதலான வேதபாஷ்யகாரர்களும் இப்படித்தான் இங்குப் பொருள் வரைந்துள்ளார்கள். ஆகவே (மாயா) என்பதற்கு 'மித்யா' என்று பொருள்கொள்வது பொருத்தமற்றதென்று தெளியக்கடவது.

அஸுரராக்ஷஸாதிகள் செய்கிற செயல்களை மாயை யென்று சொல்லுவதுண்டு. அங்கும் மித்யா என்கிற அர்த்தம் கிடையாது. ஆச்சர்யகரம் என்பதுபற்றியே அங்கு மாயாசப்த ப்ரயோகம் பண்ணுவது. பிள்ளை லோகாசார்யர் தத்வத்ரயத்தில் அசித் ப்ரகரணத்தில் (10) "மாயையென்கிறது விசித்ரஸ்ருஷ்டியைப் பண்ணுகையாலே" என்றருளிச் செய்த விடத்து வியாக்கியானத்தில் மணவாள மாமுனிகள் "அஸுரராக்ஷஸாதி க்ரியைகளை ஆச்சர்யகரத்வத்தைப் பற்ற மாயாசப்தத்தாலே சொல்லுகிறாப்போலே இத்தையும் [ப்ரக்ருதியையும்] மாயை யென்கிறது விசித்ர ஸ்ருஷ்டியைப் பண்ணுகையாலே. அதாவது, ஒன்றுபோலொன்றன்றிக்கே விஸ்மயநீயங்களான கார்யங்களை ஜனிப்பிக்கை" என்றருளிச் செய்ததும் இங்கே அநுஸந்தேயம். "தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா" (7–14) என்ற கீதா ச்லோகத்தின் பாஷ்யத்தில் ஸ்வாமி வெகு விசதமாக நிரூபித்தருளுகிறார். " अस्या मायाशब्दवाच्यत्वम् आसुरराक्षसास्त्रादीनामिव विचित्रकार्यकरत्वेन .... अतो मायाशब्दो न मिथ्यार्थवाची । ऐन्द्रजालिकादिष्वपि केनचिन्मन्त्रौषधादिना मिथ्यार्थविषयायाः पारमार्थिक्या एव बुद्धेरुत्पादकत्वेन मायावीति प्रयोगः । तथा मन्त्रौषधादिरेव च तत्र माया " இத்யாதி திவ்யஸூக்திகள் அங்கு ஸேவிக்கத்தக்கவை. மாயாசப்தத்தின் உண்மைப் பொருளையுணராதே தவறான பொருளைக் கொண்டதன்பயனாகவே மாயாவாதிகளின் வாதங்கள் மிக மிக வளர்ந்துவிட்டன.

கண்ணபிரான் அவதரித்ததும் பொய், தேஹபரிக்ரஹம் பண்ணினதும் பொய் என்று சொல்லும் பக்ஷத்தில் கீதாசாஸ்த்ரம் அவதரித்ததும் பொய்யென்றே சொன்னதாகத் தேறிவிடும். பொய்யான சாஸ்த்ரம் நம்முடைய உஜ்ஜீவனத்திற்கு எப்படி ஸாதனமாகும்.

கீதையின் இரண்டாமத்யாயத்தின் பன்னிரண்டாவது ச்லோகத்திலிருந்தே சாஸ்த்ராரம்ப மென்று சொல்லலாம். அதற்குக் கீழுள்ள பாகங்களெல்லாம் அவதாரிகையாக நிற்கிறது. அந்த பன்னிரண்டாவது ச்லோகம் எவ்விதமாகவுள்ளதென்று பார்க்கவேணும். [நத்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே நராதிபா:, ந சைவ நபவிஷ்யாமஸ் ஸர்வே வயமத: பரம்] என்பதே அந்த ச்லோகம். இதன் பொருள் யாதெனில், ஸர்வேச்வரனாகிய நானும் இதற்கு முன்கழிந்த அநாதிகாலத்திலும் இருந்தவனே; அர்ஜுநா! நீயும் இந்த அரசர்களுமான க்ஷேத்ரஜ்ஞர்களுங்கூட முன்பும் இருந்தவர்களே. முன்பு இருந்தது மாத்திரமே யன்றிக்கே மேலுள்ளகாலமு மெல்லாம் நானும் நீங்களும் இருக்கப்போகிறவர்களே என்பதாம். ஸர்வேச்வரனாய் பரமாத்மாவான நான் நித்யன் என்பதில் எப்படி ஸந்தேஹமில்லையோ, அப்படியே க்ஷேத்ரஜ்ஞர்களாய் ஜீவாத்மாக்களான நீங்களும் நித்யர்களென்பதில் ஸந்தேஹமில்லையென்று பகவான்தானே சோதிவாய்திறந்து பணித்துள்ளான். இதனால் ஸர்வேச்வரனான பகவானிற் காட்டிலும் ஜீவாத்மாக்களுக்குண்டான பேதமும், அந்த ஜீவாத்மாக்களுக்குப் பரஸ்பரமுண்டான பேதமும் பாரமார்த்திகமென்று பகவான் தானே வ்யக்தமாகத் தெரிவித்ததாய்த் தேறுகிறது. இந்த ச்லோகம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு அடிப்படையாக வுள்ளதென்று நன்குணரலாம். நமது பாஷ்யகாரர் இந்த ச்லோகத்திற்கு இட்டருளியிருக்கின்ற பாஷ்யம் மிகவும் விபுலமாக வுள்ளது.



கீழே அர்ஜுனன் (2-7) *पृच्छामित्वा धर्मसंमूढचेताः। यच्छ्रेयस्स्यान्निश्चितं ब्रूहि तन्मे शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम् * என்று, தத்வார்த்தம் தெரியாமையினாலே தான் தளும்பியிருப்பதாகவும் தன்னுடைய கலக்கம் தீர தத்வார்த்தத்தை அறுதியிட்டு அருளிச்செய்ய வேணுமென்றும் சொல்லித் திருவடிகளில் விழுந்து யாசித்திருக்கிறான். அப்படிப்பட்டவனுக்கு தத்வோபதேசம் செய்யவே இந்த கீதாசாஸ்த்ரம் அவதரித்தது. கீதாசார்யன், கலங்கினவனுக்குச் சொல்லும்போது தெளிவான பொருளைச் சொல்லுவனே யல்லது கலங்கின பொருளையே சொல்மாட்டானன்றோ. ஆகவே இந்த சாஸ்த்ரத்தில் கூறப்படும் பொருள்கள் யாவும் ஸர்வாத்மநா பாரமார்த்திக மென்றே வைதிகர்கள் கொள்ளக்கடவர்கள். அதிலும் ஆரம்ப ச்லோகமான விதனில் கூறப்படும் விஷயம் உபநிஷதாதிகளில் வடிக்கட்டின பொருளாகவே யிருக்கத்தகும். இதில் ஜீவாத்ம பரமாத்மபேதம் முதலியன தெரிவிக்கப்படுமவை அபாரமார்த்திகமாக இருக்கச் சிறிதும் ஔசித்யமில்லை. ஆக இந்த நிரூபணங்களினால் ஸ்வாமியெம்பெருமானார் உபநிஷத்து, ப்ரஹ்மஸூத்ரம், கீதை முதலானவற்றின் பொருள்களை ஆர்ஜவத்துடன் அறிந்து அறுதியிடுபவர் என்பது நிஷ்பக்ஷபாதர்களுக்குக் கையிலங்கு நெல்லிக்கனியாகும். இப்பெருமை பொலியவே யதிராஜஸப்ததியில் "யதாபூதஸ்வார்த்தா யதிந்ருபதிஸூக்திர் விஜயதே" என்று பொருத்தமாகப் பேசப்பட்டது. ... ... *

---

## 9. மூன்று திவ்யங்களின் அநுபவம்.

உலக வழக்கிலும் நூல்வழக்கிலும் மிகச் சிறந்ததைச் சொல்லுமிடத்து திவ்யமென்னுஞ் சொல் யாவராலும் கையாளப் படுகிறது; ததீயாராதனை திவ்யமாயிருந்தது. உபந்யாஸம் திவ்யமா யிருந்தது. அழகியமணவாளன் ஸேவை அதி திவ்யமாயிருந்தது—என்றிப்படியே எங்கும் வார்த்தைப்பாடு உள்ளது. பகவத் கீதையில் கண்ணபிரான் தன்னுடைய அவதாரத்தையும் சேஷ்டிதத்தையும் சிறப்பாகச் சொல்லுமிடத்து " जन्म कर्म च मे दिव्यम्— ஜந்ம கர்ம ச மே திவ்யம் " என்கிறான். விச்வரூபம் காண்பதற்காக அர்ஜுநனுக்குச் சிறந்த சக்ஷுஸ்ஸைக் கொடுப்பதாக அருளிச் செய்யுமிடத்து " दिव्यं ददामि ते चक्षुः—திவ்யம் ததாமி தே சக்ஷு:" என்கிறான். இவற்றால் திவ்யபதத்தின் சீர்மை அறியத்தக்கது.

நம்முடைய ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் ப்ரமாணம், ப்ரமாதா, ப்ரமேயம் என்ற மூன்றையும் சொல்லுமிடத்து திவ்யபதத்தைச் சேர்த்தே சொல்லிவருவதானது தொன்று தொட்டு நிகழ்ந்து வருகின்றது. ப்ரமாணங்களில் தலையானது திவ்ய ப்ரபந்தம். ப்ரமாதாக்களில் தலையானவர்கள் திவ்ய ஸூரிகள். ப்ரமேயங்களில் தலையானவை திவ்ய தேசங்கள். இப்படி எல்லாம் திவ்யமாகத் திகழுமழகு நம்முடைய ஸம்ப்ரதாயத்திற்கே அஸாதாரணமான செல்வமாயிருக்கும். இதில் ஒரு விஷயம் ஆராய்ச்சி முறையில் அறிவிக்கப்படுகின்றது.

மதுரகவியாழ்வாரும் ஆண்டாளுமுட்பட ஆழ்வார்கள் பன்னிருவரு மருளிச் செய்த திவ்ய ப்ரபந்தங்களே நாலாயிர திவ்ய ப்ரபந்தமென்று வழங்கப் பெறுகின்றன. இவற்றுள் இராமாநுச நூற்றந்தாதியும் அடங்குகின்றது. திருப்பல்லாண்டு, திருப்பாவை, கண்ணி

நுண் சிறுத்தாம்பு, இராமாநுச நூற்றந்தாதி ஆகிய இந்நான்கும் திவ்ய ப்ரபந்தங்களுக்கு அஸாதாரணமான வொரு பெருமையைப் பெறுவதற்கு உரிமையற்றவை போல் காணப்படுகின்றன. ஏன்? திவ்யப்ரபந்தங்களுக்கு அஸாதாரணமான பெருமை ஏதென்னில், உகந்தருளின நிலங்களாகிய திவ்ய தேசங்களை விசேஷமாகப் பேசுகையாம். எம்பெருமானுடைய பர வ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சாவதார மென்னும் ஐந்து நிலைகளும் திவ்யப் பிரபந்தங்களில் பேசப்பட்டிருந்தாலும் அர்ச்சாவதாரப் பெருமைகளைப் பேசுவதிலேயே இவற்றுக்கு விசேஷநோக்கு என்பது நம் ஆசாரியர்கள் நிலையிட்ட விஷயம். வேதத்திற்குப் பரத்வத்திலே நோக்கு; பாஞ்சராத்ரங்களுக்கு வ்யூஹத்திலே நோக்கு; இதிஹாஸ புராணங்களுக்கு விபவத்திலே நோக்கு; தர்மசாஸ்த்ரங்களென்கிற ஸ்மிருதிகளுக்கு அந்தர்யாமியிலே நோக்கு; திவ்ய ப்ரபந்தங்களுக்கு அர்ச்சையிலே நோக்கு—என்னும் விஷயமானது ஆசார்ய ஹ்ருதயத்தில் "அதவா, வேதவேத்யந்யாயத்தாலே பரத்வ பர முதுவேதம்" என்று தொடங்கியுள்ள (70) சூர்ணையின் வியாக்கியானத்திலே விசதமாகக் காணலாகும். நாம் திவ்ய தேசங்களின் பெருமைகளை யநுபவிக்க வேணுமானால் திவ்யப்ரபந்தங்களிலல்லது வேறு எதிலும் அனுபவிக்க முடியாதன்றோ. ஆகவே திவ்ய தேசப்பெருமையைப் பகர்வதே திவ்யப்ரபந்தங்களுக்கு அஸாதாரணமான பெருமையென்பது நிர்விவாதமாகும்.

இப்படிப்பட்ட பெருமை திருப்பல்லாண்டு முதலிய மேலே குறித்த நான்கு திவ்ய ப்ரபந்தங்களுக்கு ஸம்பவிக்க ப்ரஸக்தியில்லாமலிருக்கிறது. ஏனென்னில்; 1. பெரியாழ்வார் பாண்டியராஜனுடைய ஸபையிலே பரதத்வ நிர்ணயம் பண்ணி விரைந்து கிழியறுத்து யானையின்மீது ஊர்வலம் வருகையில் அந்த மஹோத்ஸவத்தைக் காணவந்த பரமபத நாதனை நோக்கியே பல்லாண்டு பாடித் திருப்பல்லாண்டென்கிற திவ்யப்ரபந்தத்தை யருளிச் செய்தாராதலால் அப்போது திவ்யதேசப் புகழ்ச்சி எதுவும் செய்ய ப்ரஸக்தியில்லை யாயிற்று.

2. திருப்பாவை கண்ணபிரானுடைய விபவ காலத்திலேயே நேராக ஆய்ச்சிகள் ஆசரித்த படியை அநுகரித்துப் பேசப் பிறந்த பிரபந்த மாதலால் இதிலும் திவ்யதேசப் புகழ்ச்சி எதுவும் செய்ய ப்ரஸக்தி யில்லையாயிற்று.

3. கண்ணிநுண் சிறுத்தாம்பு, நம்மாழ்வாரையே தெய்வமாகக் கொண்டு அவரைத் துதிப்பதற் கென்றே தோன்றின பிரபந்த மாகையாலும்,

4. இராமாநுச நூற்றந்தாதி எம்பெருமானாரையே தெய்வமாகக்கொண்டு அவரைத் துதிப்பதற்கென்றே அவதரித்ததாகையாலும் இவற்றிலும் திவ்யதேசப் புகழ்ச்சிக்கு ப்ரஸக்தியில்லையாயிற்று.

ஆயினும் திவ்ய தேச ப்ரஸ்தாவமில்லாத பிரபந்தம் திவ்யப்ரபந்தமாகமாட்டாதென்று கருதியே மேற்சொன்ன நான்கு பிரபந்தங்களிலும் அந்தந்த ப்ரபந்த கர்த்தாக்கள் திவ்யதேச ப்ரசம்ஸையை ஒருவாறு புகுத்தியுள்ளார்கள்.

1. திருப்பல்லாண்டில் திவ்யதேச ப்ரசம்ஸையைப் புகுத்தியிருக்கிற விதம் யாதெனில்; அதில் * அல்வழக் கொன்றுமில்லா * என்கிற பதினோராம் பாட்டில், பாகவதோத்தமரான செல்வநம்பி யென்னுமொரு பெரியாரை த்ருஷ்டாந்தமாக எடுத்துக்காட்டத் திருவுள்ளம்பற்றி, அப்பெரியார் திருக்கோட்டியூரென்னும் திவ்யதேசத்தில் வாழ்ந்தவராதலால் அதனைக் கூறும் வழியாலே திருக்கோட்டியூரை ப்ரசம்ஸித்திருக்கிறார். * அணிகோட்டியர்கோ னபிமான துங்கன் செல்வனைப் போல * என்றவிடத்து, அணி கோட்டியென்றது திருக்கோட்டியூரேயாம். இப் பிரபந்தத்தில் ஒருவாறு திவ்யதேச ப்ரஸ்தாவம் வருவதற்காகவே * அணிகோட்டியர்கோன் * என்கிற ஸ்ரீஸூக்தி புகுவிக்கப் பட்டதென்க,



மேலுள்ளதான பலச்ருதிப் பாசுரத்தில் * வில்லிபுத்தூர் விட்டு சித்தன் விரும்பிய சொல் * என்றவிடத்து ஸ்ரீ வில்லிபுத்தூராகிற திவ்யதேசத்தின் ப்ரஸ்தாவ மிருந்தாலும் அதனால் த்ருப்தியுண்டாக வழியில்லை போலும்.

2. இனி கண்ணிநுண்சிறுத்தாம்பிலும் திவ்யதேச ப்ரஸ்தாவம் ஒருவாறு புகுந்திருக்கின்றது; அதில் பாசுரந்தோறும் குருகூர் என வருவதால்.

3. இராமாநுச நூற்றந்தாதியில் * கோவலுள் மாமலராள் தன்னொடு மாயனை * என்றும் * தென்னத்தியூரர் கழலிணைக்கீழ் * என்றும் * கண்ணமங்கை நின்றானைக் கலை பரவும் * என்றும், * பொன்னரங்க மென்னில் மயலே பெருகுமிராமானுசன் * என்றும் * நிறைவேங்கடப் பொற்குன்றமும் * என்றும் * இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ்சோலை யென்னும் பொருப்பிடம் * என்றுமிங்ஙனே பல பாசுரங்களில் ப்ராஸங்கிகமாக திவ்யதேச ப்ரசம்ஸை செய்திருக்கையாலே அதுதன்னிலும் திவ்யதேச ப்ரதிபாதநம் குறையற்றதாயிற்று.

4. இனி திருப்பாவையில் இக்குறையில்லாமையை விவரிக்கிறோம். உண்மையில் திருப்பாவையில் ஒரு திவ்யதேசத்தின் ப்ரசம்ஸையும் ப்ராப்தமாகவில்லை. * திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி அங்கு அப்பறை கொண்டவாற்றை * என்று, அக்காலத்தில் கோபிகள் செய்தபடியை அப்படியே அநுகாரம் செய்தும் அநுவாதம் செய்தும் அருளிச்செய்த பிரபந்த மன்றோ திருப்பாவை. இதில் அவ்வாய்ச்சிகள் செய்யாத திவ்யதேச ப்ரசம்ஸையை ஆண்டாள் செய்ய ப்ரஸக்தி இல்லையன்றோ. ஆனால் யசோதைப் பிராட்டி கண்ணனைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டினபடியை அவளுடைய பாவனையினால் கூறுகின்ற பெரியாழ்வார் * குடந்தைக் கிடந்தானே! தாலேலோ * என்றது போலவும், ஆய்ச்சிகள் கண்ணபிரான் செய்த தீமைகளை யசோதைப் பிராட்டியிடம் வந்து முறையிட்ட படியைச் சொல்லுமிடத்து * சாளக்கிராமமுடைய நம்பி சாய்த்துப் பருகிட்டுப் போந்து நின்றான் * என்றது போலவும், * மன்னுகுறுங்குடியாய் வெள்ளறையாய் மதிள் சூழ் சோலை மலைக்கரசே கண்ணபுரத்தமுதே!... ஆடுக செங்கீரை * என்று யசோதை செய்யாத திவ்யதேச ப்ரசம்ஸைகளை ஆழ்வார்தாம் செய்திருப்பது போலவும், திருவாய்மொழியில் * சூழ்விசும்பணிமுகில் என்னும் பதிகத்திலே பரமபதாநுபவங்களைப் பேசுகின்ற நம்மாழ்வார் அங்கு திவ்யதேச ப்ரஸக்தி செய்யவேண்டிய அவசிய மில்லாதிருக்கவும் * குடந்தையன் கோவலன் குடியடியார்க்கே * என்று திருக்குடந்தைப் பதியின் ப்ரசம்ஸையைச் செய்திருப்பது போலவும் ஆண்டாளும் திருப்பாவையில் திவ்யதேச ப்ரசம்ஸை செய்யக் கருதினால் பலபடியாக அதைப் புகுத்தமுடியும்; அது அஸாத்யமன்று. * வல்லானை கொன்றானை * என்றும் * மல்லரை மாட்டிய தேவாதி தேவனை * என்றும் திருவாய்ப்பாடியி லுள்ளவர்கள் பேசமுடியாத கதைகளை யிட்டுப் பேசியிருப்பது போல "அரங்கத் தரவணைமே லமர்ந்தானைப் பாட வெழுந்திராய்" "வேங்கடத்தெம் வித்தகனை யேத்தவாராய்" என்று பேசியிருக்கலாம். * அன்றிவ்வுலக மளந்தாயடிபோற்றி, சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி * என்று வேறு அவதார சேஷ்டிதங்களைச் சொல்லி மங்களாசாஸனம் செய்தது போல * அரங்கத் தரவணைமே லமர்ந்தா யடிபோற்றி * மாலிருஞ்சோலை மாயனே யடிபோற்றி * என்றிப்படி திவ்யதேச ப்ரசம்ஸை பண்ணி மங்களாசாஸனம் செய்திருக்கலாம். கோவிலைப் பற்றின பேச்சு அடியோடில்லாமல் திருப்பாவையை முடித்தது ஏன்? என்று ஆராய்ச்சி செய்ய ப்ராப்தமாகும். இதற்குத் தெரிவிக்கிறோ மிங்கு.

திருப்பாவையில் கோவில் பேச்சு அடியோடு இல்லாதிருந்தால் இதனைப் பெரியோர்கள் திவ்யப்ரபந்தமாகக் கொண்டு ஆதரித்திருப்பர்களோ? இதில் நான்கிடங்களில் கோவில் பேச்சு அழகாகவுள்ளது. (பாட்டு. 6) * புள்ளரையன் கோவில் வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ? (14.) * தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார். * (16) * கோயில் காப்பானே. * (23) * உன்கோயில் நின்றிங்ஙனே போந்தருளி * என்னு மிப்பாசுரங்களில் கோயில் ப்ரஸ்தாவம் வந்திருப்பது குறிக்கொள்ளத் தக்கது. பொதுவாகக் கோயில் என்று உள்ளதேயன்றி ஒரு திவ்யதேச விசேஷம் சொல்லிற்றில்லையே யென்று குறையுற வேண்டா; திருவரங்கத்திற்குக் கோயிலென்பதே அஸாதாரணமான வ்யபதேசம். பெரியாழ்வார் தமது திருமொழியில் (2–9–4.) * கொண்டல் வண்ணாவிங்கே போதராயே கோயிற்பிள்ளா யிங்கே போதராயே * என்கிறார். இங்குக் கோயிலென்றது ஸாமாந்ய வாசகமன்று. தென்னாடும் வடநாடுந் தொழநின்ற திருவரங்கந் திருப்பதியையன்றோ விசேஷித்துச் சொல்லுகிறது. ஆனால், திருப்பாவையில் கோயிலென்று வந்துள்ள நான்கிடங்களிலும் ஸ்ரீரங்கந்தான் விவக்ஷிதமோ வென்று கேட்டுவிட வேண்டா. அர்த்த சக்தியென்பது வேறு, சப்த சக்தியென்பது வேறு. சப்த சக்தியைப் பற்றின நிர்வாஹமிது. * புள்ளுஞ் சிலம்பினகாண் * என்கிற பாட்டிலும் * உங்கள் புழைக்கடை * என்கிற பாட்டிலும் அர்ச்சாவதார ஸன்னிதியை யுத்தேசித்தே கோயிலென்னுஞ் சொல் பிரவேசிப்பிக்கப்பட்டிருக்கின்றதென்பது நிஸ்ஸந்தேஹம். ஆக, திருப்பாவையிலும் திவ்யதேச ப்ரசம்ஸையுள்ளதென்று நிரூபிக்கப் பட்டதாயிற்று. ... ... ... ... *

---

# 10. அபயப்ரதானத்தில் ஒரு அபயப்ரதானம்.

ஸ்ரீராமாயணத்தில் அபயப்ரதான மென்பது ஒரு கட்டம். விபீஷணாழ்வான் மிகுந்த ஆர்த்தியோடு கடற்கரையிலே வந்து சரணாகதி செய்தபோது ஸுக்ரீவமஹாராஜர் முதலானோர் அவனை அங்கீகரிக்கலாகாதென்று வலிதாக ஆக்ஷேபித்தகாலத்தில் அவனுடைய வுள்ளம் சாலவுமஞ்சிக் கிடந்தது. அச்சமயத்தில் பெருமாள் அவனுக்கு அபயமளித்தார். அப்போது பெருமாளருளிச் செய்த * ஸக்ருதேவ ப்ரபந்நாய * என்கிற சரமச்லோகத்திலே 'அபயம் ததாமி' என்கிற வாக்கிய மிருப்பதனால் அந்த கட்டம் அபயப்ரதாந கட்டமென்று வழங்கப்பட்டு வருகிறது. ஸ்வாமி யெம்பெருமானார் ஒருநாள் ஒரு பெரிய திருவோலக்கத்திலே அந்த கட்டத்தை மிக விரிவாக உபந்யஸித்தருளா நின்றார். * த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச ராகவம் சரணம் கத: * என்கிறபடியே புறம்புண்டான பற்றுக்களையுடைய வாஸனையோடே விட்டு விபீஷணாழ்வான் * ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே, நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷண முபஸ்திதம் * என்று சொல்லி வானர முதலிகளைப் பிரார்த்திக்க அவர்கள் இவ்விபீஷணனை அநுகூலனாகக் கொள்ளாமல் பிரதிகூலனாகவே கொண்டு அவன்மீது கற்களை விட்டெறிவது, பெருமாளிடம் ஆக்ஷேபிப்பது முதலாகப் பல தீமைகளை யிழைக்கத் தொடங்கினார்கள்—என்னு மிவ்விஷயத்தை ஸ்வாமி உபந்யஸித்தருளா நிற்கையில் அப்போது ஆனந்தமாகக் கேட்டுக்கொண்டிருந்தவர்களில் ஒருவரான பிள்ளையுறங்கா வில்லிதாஸர் கோஷ்டியில் நின்று எழுந்து விக்கிவிக்கியழுது தம்முடைய வொரு பெரிய ஸந்தேஹத்தை விண்ணப்பஞ் செய்து இதைப் பரிஹரித்தருளினாலொழிய மேலே கதை கேட்க விருப்பமில்லாமையைக் கூறி நின்றார்.



அவர் விஜ்ஞாபித்த ஸந்தேஹமாவது—விபீஷணாழ்வான் உண்மையான பரமபக்தன்; அவனுக்கு ஆர்த்தி முதலிய அதிகார பூர்த்தியில் யாதொரு குறையுமில்லை; ஆகிஞ்சந்யமும் அநந்ய கதித்வமும் கபடமாகவல்லாமல் உண்மையாகவே உண்டாகி நெஞ்சுகனிந்த பக்தியுடன் வந்து சேர்ந்த இவனுக்கே பகவத் கோஷ்டியில் ப்ரவேசம் எளிதாகக் கிடைக்கவில்லை யென்றும், பகவானுக்கு அந்தரங்க மந்திரிகளாக இருந்தவர்களால் மிகுந்த பரிபவமும் ஆக்ஷேபமும் விளைந்தன வென்றும் கண்டால் அவ்விபீஷணாழ்வானுடைய அதிகாரத்தில் நூற்றிலொன்றுகூட இல்லாத எம்போலியர்க்கு பகவதங்கீகாரத்தைக் கனவில்கூடக் காண்பதற்கு ப்ரஸக்தியில்லையன்றோ; ஆகவே எம்போலியர் உஜ்ஜீவிக்க வழியுண்டோ இல்லையோ! என்று நெஞ்சு தளும்பி நிற்கின்றது என்பதாக.

இது எல்லோருக்குமே ஜனிக்கவேண்டிய ஸந்தேஹந்தான். ஆனால் அந்த ஸமயத்தில் பிள்ளையுறங்கா வில்லிதாஸ ரொருவர்க்கே ஜனித்தது. இந்த ஸந்தேஹத்திற்குப் பரிஹாரமுறை என்னவென்று தெரிந்துகொள்ள ஒவ்வொருவரும் குதூஹலங்கொள்ள வேண்டியதே யாகும். கேண்மின். எம்பெருமானார் உடனே அவர்க்குப் பரமத்ருப்திகரமாகப் பணித்த ஸமாதானம் யாதெனில்; விபீஷணாழ்வானைப் போலே நாம் எம்பெருமானைப் பற்றினாலன்றோ இப்படி ஸந்தேஹித்து இடிவிழுந்து நிற்கவேண்டும். நாம் எம்பெருமான் கைபார்த்திருக்கு மவர்களல்லோங்காணும்; உமக்கு நானுண்டு, எனக்குப் பெரிய நம்பியுண்டு."

இதன் கருத்தாவது, எம்பெருமான் மோக்ஷமளிக்கவும் வல்லவன், மேன்மேலும் ஸம்ஸாரத்திலே தள்ளவும் வல்லவன். நிக்ரஹாநுக்ரஹங்களுக்குப்பொதுவான ஸ்வாதந்திரியமுடையவனாகையாலே அவனைப் பற்றினார்க்கு நெஞ்சு தளும்பியே கிடக்க நேரும். அவனைப் போலன்றிக்கே அநுக்ரஹமே வடிவெடுத்த ஆசாரியர்களைப் பற்றினார்க்கு ஸந்தேஹ கந்தமுமின்றிக்கே மார்விலே கைவைத்து உறங்கலாம்படியிருக்கும் என்கை. இவ்வர்த்தம் மஹர்ஷிகளின் வசனத்தாலும் தேறி நின்றது. * ஸித்திர் பவதி வா நேதி ஸம்சயோச்யுத ஸேவிநாம், ந ஸம்சயோஸ்தி தத்பக்தபரிசர்யா ரதாத்மநாம் * என்கிற ப்ரமாணத்தை இங்கே அநுஸந்திப்பது. இதன் பொருள்; எம்பெருமானைப் பற்றினார்க்கு ஸத்கதி ப்ராப்தியாகிற ஸித்தியுண்டோ இல்லையோ என்கிற ஸந்தேஹமுள்ளது; தத்பக்தர்களாகிற பாகவதர்களைப் பற்றினார்க்கு அப்படிப்பட்ட ஸந்தேஹம் உதிக்கவே மாட்டாது என்பதாம்.

இங்ஙனே அவரவர்கள் தம் தம் ஆசாரியர்களைப் பணிந்து உஜ்ஜீவித்தலென்பது இருக்கச் செய்தேயும் * தஸ்மிந் ராமாநுஜார்யே குருரிதி ச பதம் பாதி நாந்யத்ர * என்று பூருவர்கள் ஒருமிடறாக நிஷ்கர்ஷித்திருக்கையாலே ஆசார்யரென்கிற சொல்லுக்குப் பொருளாயிருக்குந் தன்மை எம்பெருமானா ரொருவர்க்கே உரித்தாகவுள்ளதாதலால் அவருடைய திருவடி ஸம்பந்தத்தை அநுதினமும் சிந்தித்திருப்பார்க்கு விசாரலேசமு மில்லையென்று தெளிவது. ... ... ... ... ... *

---

## 11. ஐதிஹ்யங்களுக்கு ஆதரவுகாட்டுதல்.

முதன் முதலாக இன்னாரால் சொல்லப்பட்டதென்று தெரிந்துகொள்ள முடியாமல் பரம்பரையாய்ச் சொல்லப்பட்டு வருகிற புராதந வ்ருத்தாந்தங்களுக்கு ஐதிஹ்யமென்று பெயர். 'இதிஹ' என்கிற வட சொல்லின் மேல் 'ஸ்வார்த்தே ஷ்யஞ்' ப்ரத்யயம் ஏறி ஐதிஹ்யமென்றாயிற்று. இதிஹ, இதிஹ—இப்படியாம் இப்படியாம் என்று வெகுகாலமாகச் சொல்லிவரும் கதை ஐதிஹ்யம் என்றதாயிற்று. பட்டர் ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில்—திருவரங்கம் பெரிய கோயிலிலுள்ள மநுஷ்ய திர்யக் ஸ்தாவர வர்க்கங்களை நித்ய ஸூரிகளாகவும் முக்தர்களாகவும் முமுக்ஷுக்களாகவும் கொள்ளவேணுமென்பதைத் தெரிவித்தருளவேண்டியருளிச் செய்த *அஹ்ருத ஸஹஜதாஸ்யாஸ் ஸூரய:* இத்யாதிச்லோகத்தில் நான்காம் பாதத்தில் *இதிஹ ஸ்ம ப்ராஹு:* என்றார். 'இது நான் புதிதாகச் சொல்லுவதன்று; அநாதிகாலமாகப் பரம்பரையாய்ச் சொல்லப்பட்டு வருகிறது.' என்கிற விவக்ஷையில் 'இதி ஹ ஸ்ம ப்ராஹு:' என்றருளிச் செய்தபடி.

கர்ண பரம்பரையாகவே வந்த ஐதிஹ்யங்கள் கால விசேஷங்களில் ப்ராமாணிகர்களால் ஏடுபடுத்தப் படுகின்றன. அங்ஙனம் ஏற்பட்ட ஐதிஹ்யங்கள் நம்பத்தகுந்தவைதானா? என்கிற விசாரம் பிற்காலத்தவர்களுக்கு விளைவதுண்டு. ஏடுபடுத்தினவர்கள் யாவரோ, அவர்களிடத்தில் தேவதாப்ரதிபத்தி யுள்ளவர்கள் நம்புவதும், மற்றையோர்கள் நம்பாமற் போவதும் உள்ளது. பழைய ஏட்டுப் பிரதிகளை அச்சுப் பதிப்புக்குக் கொண்டுவரும் காலத்தில் அவரவர்கள் [முத்ராபகர்கள்] யதேஷ்டமாகப் புதிய கதைகளைச் சேர்ப்பதும் பழைய கதைகளை மாறுபடுத்துவதும் உண்டு. இதனால் ஐதிஹ்யங்களைப் பரிபூர்த்தியாக நம்புவதற்கு இடமில்லாமலிருக்கிறதென்று சில பல பெரியோர்கள் வருந்திச் சொல்ல நாம் கேட்டிருக்கிறோம்.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் ஆழ்வார்கள் விஷயமாகவும் ஆசாரியர்கள் விஷயமாகவும் பல ஐதிஹ்யங்கள் ப்ரஸித்தமாகவுள்ளன. இவற்றில் இதர மதஸ்தர்களின் ப்ரதிபத்தி எப்படிப்பட்டதென்கிற விசாரம் நமக்கு வேண்டா. நம்முடைய தர்சநத்தைச் சேர்ந்தவர்கள் யாவரும் இவ்வைதிஹ்யங்களை ஸமீசியான ப்ரதிபத்தியுடன் கொண்டாடி வருகிறார்களாவென்று பார்த்தால் இது தேறுவதில்லை. விச்வகுணதர்சகாரர் "விததைதிஹ்ய ஸஹஸ்ரவர்ணநே" என்று ஒன்று எழுதிவைத்துப் போனார். அதை ஒரு நிதியாகக் கொண்டு ஒவ்வொரு விஷயத்திலும் அதையே யெடுத்துச் சொல்லுவார் பலருளர். பொய்யான ஐதிஹ்யங்களும் கலந்துபோயிருக்கின்றனவென்பதை நாமும் இசைவோம். தாவதா, ஐதிஹ்யங்கள் யாவும் பொய்யானவையென்று சொல்லிவிடுவது யுக்தமன்று.

திருவள்ளூரில் திவான்பகதூர் T. T. ரங்காசாரியர் என்று ஒரு மஹநீயர் இருந்தார். இவருடைய காலம் முப்பது நாற்பது வருஷங்களுக்கு முன்பு என்று கொள்ளுங்கள். இவர் லௌகிக உத்யோகத்தில் சிறந்த பதவியில் வாழ்ந்தவராயினும் வைதிகத்திலும் நன்றாகப் படித்திருந்தவர். உபய வேதாந்த க்ரந்தங்களையும் அதிகரித்திருந்தவர். வேதாந்த தீபிகையென்கிற பத்ரிகைக்குச் சில வருஷங்கள் ஸம்பாதகராகவுமிருந்தவர். இந்த மஹான் நவீன ஆராய்ச்சித் துறையில் அபிநிவேசமுள்ளவராதலால் நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் வழங்கும் ஐதிஹ்யங்களை ஆராயப் புகுந்து விப்ரதிபத்திகள் செய்யத் தொடங்கினார். முந்துற முன்னம் திருமங்கையாழ்வாருடைய சரித்திரத்தை விமர்சிக்கப் புகுந்து, அவ்வாழ்வார் நாகைப்பட்டினத்தில் ஸுவர்ணமயமாயிருந்த ஜைந பௌத்த விக்ரஹங்களை "ஈயத்தாலாகாதோ இரும்பினாலாகாதோ?........மாயப் பொன் வேணுமோ மதித்துன்னைப் பண்ணுகைக்கே" என்று சொல்லி ப்ரஹரித்து ஹரித்துக் கொண்டுவந்து



ஸ்ரீரங்க பிராகார மண்டபாதி நிர்மாண கைங்கர்யத்தில் உபயோகித்தார் என்று குருபரம்பராப்ரபாவத்தில் எழுதப்பட்டுள்ள சரித்திரத்தை யெடுத்துக்கொண்டு "இது மிகவும் அநீதியான வரலாறு; ப்ராமாணிகர்களாய் யோக்யர்களாய்ப் பரம பக்தர்களான ஆழ்வார்கள் இப்படி அநீதியான செயல்களைச் செய்தார்களென்று எழுதிவைப்பது நமது பரம பாவனமான மதத்திற்கு இழுக்காகும்" என்று விபுலமாக எழுதி வேதாந்ததீபிகையில் பிரசுரமும் செய்துவிட்டார். அப்போது அதைக் கண்ட நாம் 'ஒரு ப்ரதிஷ்டிதரான மஹான் இப்படி ஸஹஸா எழுதிவிட்டாரே!' என்று மிக வருந்தி அவருக்கு அந்தரங்கமாக வொரு விண்ணப்ப மெழுதலானோம். (அதாவது) வெறுந் தமிழ் வசன நூற்களில் மட்டும் காணும் ஐதிஹ்யங்களில் தேவரீர்கள் எவ்விதமாக ஆராய்ச்சி செய்தாலும் செய்க. கூரத்தாழ்வான், பட்டர், வேதாந்த தேசிகன் போன்ற பூருவாசாரியர்களின் ச்லோகபத்தங்களாய் ஸர்வ ஸம்ப்ரதிபந்நங்களான திவ்யஸூக்திகளினால் நிர்விவாதமாக ஏற்படுகிற ஐதிஹ்யங்களிலும் விவாதப்படுவதும், ஹாஹாகாரம் செய்வதும் தேவரீரைப் போன்ற ஆஸ்திகர்களுக்குத் தகுமா? பட்டர் ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில், *ஜிதபாஹ்ய ஜிநாதிமணி ப்ரதிமா அபி வைதிகயந்நிவ ரங்கபுரே, மணிமண்டப வப்ரகணாந் விததே பரகால கவி: ப்ரணமேமஹி தாந்* என்கிற ச்லோக ரத்நத்தில் நிஸ்ஸந்தேஹமாகப் பொறித்து வைத்த திருமங்கையாழ்வார் சரித்திரத்தை தேவரீர் அநியாயக் கதையென்று எழுதிவிட்டால் இதை ஸ்ரீவைஷ்ண வுலகம் ஏற்குமா? அந்த ச்லோகம் பிற்காலத்தவர்களால் கல்பிக்கப்பட்டு பட்டர் ஸ்ரீஸூக்திமத்யே புகுத்தப்பட்டதென்று தேவரீர் திருவுள்ளமா? இவ்வளவு கம்பீரமான ச்லோகம் பட்டர் தவிர வேறொரு வ்யக்தியால் நிருமிக்க முடியுமா? ஏறக்குறைய ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு அவதரித்த இந்த ச்லோகத்தைக் காற்கடைக்கொண்டு, நெஞ்சில் தோன்றினதை எழுதி வெளியிட்டுவிடுவது யுக்தமாகுமா?........இத்யாதிகள் விஜ்ஞாபனம் செய்திருந்தோம். உண்மையில் அவர் பரமாஸ்திகராகையாலே அந்த பட்டர் ஸ்ரீஸூக்தியிலே அத்யந்த ப்ராவண்யங்கொண்டு, தாம் அவசரப்பட்டு எழுதினதற்கு மஹத்தான அநுதாபமுங் கொண்டு நமக்கு பதில் எழுதினார்—"ஸ்காலித்யே சாஸிதாரம்" என்ற முறையை தேவரீர் கைக்கொண்டு சிக்ஷித்ததற்கு மிகவும் க்ருதஜ்ஞனாகிறேன் இத்யாதி.

இது நிகழ்ந்து நாற்பது வருஷங்களுக்கு மேலாகிறது. நம்முடைய கடிதத்திற்குப் பிறகு அந்த மஹான் வேதாந்த தீபிகையில் என்ன எழுதினாரென்பது நினைவில்லை. அதுநிற்க, இங்ஙனே பல ஐதிஹ்யங்கள் நம் பூர்வாசார்யர்களின் ச்லோக ரூபங்களான ஸ்ரீஸூக்திகளில் திகழ்கின்றன. அவற்றைப் பாராமலே பலர் 'அந்த ஐதிஹ்யம் தவறு. இந்த ஐதிஹ்யம் புளுகு' என்றிப்படி ப்ரஸங்க மேடைகளிற் பேசப் புறப்பட்டு விடுகிறார்கள்.

முதலில் ஸ்வாமி ராமாநுஜர்க்கு உபாத்யாயராயிருந்த யாதவப்ரகாசர் பிறகு திருந்தி ஸ்வாமி திருவடிகளில் ஆச்ரயித்தார் என்ற ஐதிஹ்யத்தைப் பிற மதத்தவர்கள் க்ஷேபிப்பது ஒருபுறமிருக்க; நம்மவர்களும் 'இது ஸம்பாவிதமா?" என்று சொல்ல வருகிறார்கள். யதிராஜ ஸப்ததியில் தேசிகன் "ஸ்வபலாத் உத்க்ருத யாதவப்ரகாச:" என்றருளிச் செய்திருப்பதை யெடுத்துக்காட்டின பிறகு அப்படியா? என்கிறார்கள். ஸ்ரீராமாநுஜர் க்ருஹஸ்தராய் ஸ்ரீகாஞ்சியில் வாழ்ந்த போது சாலக்கிணற்றிலிருந்து தேவப்பெருமாளுக்கு நித்தியப்படியாய் தீர்த்தம் கொணர்ந்து ஸமர்ப்பித்து வந்தாரென்று ஐதிஹ்யமுள்ளது. சதுச்சாஸ்த்ர வித்வானாயிருந்த ஸ்வாமி ஸாமாந்யர்களைப்போல் தலைமேல் தீர்த்தக் குடம் சுமந்து வந்தாரென்பது அவருடைய பெருமைக்குத் தகுமாவென்றும், இதெல்லாம் நவீந காலத்து ஐதிஹ்யமாயிருக்குமென்றும் சிலர் கூசாமல் சொல்லத்துணிகிறார்கள் இவ்விஷயமும் யதிராஜ ஸப்ததியில் "தத்தம் யேந தயா ஸுதாம்புநிதிநா பீத்வா

விசுத்தம் பய: காலே ந: கரிசைலக்ருஷ்ண ஜலத: காங்க்ஷாதிகம் வர்ஷது" என்கிற ச்லோகத்தினால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது காணும் என்றால் அப்படியா? என்கிறார்கள். இந்த ச்லோகத்தில், ஸ்வாமி ராமாநுஜர் தேவப்பெருமாளுக்குத் தீர்த்தம் ஸமர்ப்பித்தாரென்றிருக்கிறதே யொழிய தினப்படியாக ஸமர்ப்பித்து வந்தாரென்றில்லையே என்று சிலர் கேள்வி கேட்பதுண்டு தினப்படியாக வென்பதற்கு ஒரு ப்ரமாணம் காட்டினால் 'தாமே தலையில் சுமந்து வந்து ஸமர்ப்பித்தாரென்று இல்லையே' என்பர்கள்.

ஸ்ரீ காஞ்சீபுரியில் திருவெஃகா என்கிற திவ்யதேசம் ப்ரஸித்தமானது. இத்தலத்தெம்பெருமானுக்கு யதோக்தகாரி யென்று திருநாமம். இத்திருநாமமே தமிழில் 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' என வழங்கி வருகின்றது. திருமழிசையாழ்வார் காலத்தில் அவருடைய திருவடியான கணிகண்ணனைப் பல்லவமன்னவன் கச்சியிலிருக்கக் கூடாதென்று வெருட்ட, அதனால் கணிகண்ணன் ஊரைவிட்டுப் புறப்பட, அவனைப் பிரிந்திருக்க மாட்டாத ஆழ்வாரும் அவனைப் பின்தொடர, திருவெஃகாவிலெம்பெருமான் தானும் பைந்நாகப்பாய் சுருட்டிக்கொண்டு புறப்பட, கச்சிப்பதி முழுவதும் இருள் மூடிப்போக, இதன் காரணத்தை யறிந்த மன்னவன் பதறியோடிச்சென்று பிழை பொறுத்தருளி மீளும்படி ப்ரார்த்திக்க, பெருமாளும் ஆழ்வாரும் கணிகண்ணனும் மீண்டு வந்து சேர்ந்தார்களென்று ஐதிஹ்யமுள்ளது. அசல மூர்த்தியான அர்ச்சாவதாரப் பெருமான் எழுந்து போனானென்பதும் திரும்பி வந்தானென்பதும் பொருந்துமோவென்று ஸ்ரீவைஷ்ணவர்களே கேள்வி கேட்க வருகிறார்கள். வேதாந்த தேசிகன் பணித்த யதோக்தகாரி ஸ்தோத்ரத்தில் [வேகாஸேது ஸ்தோத்ரே] ஆறாவது ச்லோகத்தில் இந்த ஐதிஹ்யம் வெகு சமத்காரமாக அநுஸந்திக்கப்பட்டுள்ளது. *ப்ரத்யாதிசந்தி பவஸஞ்சரணம் ப்ரஜாநாம் பக்தாநுகந்துரிஹ, யஸ்ய கதாகதாநி * என்கிற ச்லோகம் ரஸவத்தரமானது. இதன் கருத்தாவது, யதோக்தகாரி யெம்பெருமான் பக்தனைப் பின் சென்று போவதும் வருவதுமான ஸஞ்சாரப்ரகாரத்தை யநுஸந்தித்தால் அஸ்மதாதிகளுக்கு ஸம்ஸார காந்தாரத்தில் நேரும் போவது வருவதான ஸஞ்சாரம் தொலையுமென்கை. அடுத்த ஏழாவது ச்லோகத்திலும் * ச்ரிதஜந பரதந்த்ரம் * என்பதனால் இவ்வைதிஹ்யம் ஸூசிதமாயிருக்கின்றது. ஸூசனையிருக்கட்டும். "பக்தாநுகந்து: கதாகதாநி" என்று ஸுஸ்பஷ்டமாகவன்றோ வுள்ளது. மஹாமேதாவிகளான பூருவர்களுக்குத் தோன்றாத அநுபபத்திகளன்றோ இக்காலத்து விமர்சகர்களுக்குத் தோற்றுகின்றன. கண்ணழிவு சொல்லமுடியாத பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளினாலும் இவர்கள் தெளியவில்லையென்றால் இவர்களைப்பற்ற "ப்ரஹ்மாபி நரம் ந ரஞ்ஜயதி" என்னவேணுமத்தனை. ... ... ... ... *

## 12. தற்புகழ்ச்சியின் தகாமையும் தகுதியும்.

ஒவ்வொருவர்க்கும் நைச்சியாநுஸந்தானமென்பது ஸ்வரூபாநுரூபமெனப்படுகிறது. அதாவது, தம்மிடத்தில் உண்மையாக எவ்வளவோ ஏற்றங்களிருந்தாலும் அவையிருப்பதாகவே நினையாமல் பலவகைத் தாழ்வுகளே தம்மிடமுள்ளதாக அநுஸந்திப்பதே நைச்சியாநுஸந்தானமெனப்படுகிறது. இதுதான் ஸ்வரூபத்திற்கு ஏற்றதாகவும் சொல்லப்படுகின்றது. இதற்கு எதிராக ஆத்மப்ரசம்ஸை செய்து கொள்வது தவறென்றும் தெரிவிக்கப்படுகிறது நூல்களில், ஆத்ம ப்ரசம்ஸையாவது ஆத்மஸ்துதி; இதுவே தற்புகழ்ச்சி யெனப்படும். இது மிகவும் தாழ்வான செயலென்று நிந்திக்கப்படுகின்றது. ஸ்வரூப ஜ்ஞானம் தலைசிறந்து



விளங்கப்பெற்ற மஹான்கள் ஒருபோதும் ஆத்மப்ரசம்ஸை செய்துகொள்ளமாட்டார்கள். நன்னூலில் பொதுப்பாயிரத்தில் ஒரு சூத்திரம்; (அதாவது)

"தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான் தற்புகழ்தல் தகுதியன்றே" என்பதாம்.

இதன் பொருளாவது, பிறர்க்குத் தோன்றாத நுட்பமான பொருள்களை வெளியிட்டுப் பல துறைகள் அமையப் பெரிய நூலைச்செய்து முடித்தாலும் [மிகப்பெரிய வித்வானாக இருந்தாலுமென்றபடி.] தானே தன்னைப் புகழ்ந்து கொள்வது தக்க தன்றென்கை. இங்ஙனம் தற்சிறப்புக் கூடாதென்பது வித்வான்களுக்கு மட்டுமல்ல; சூரர்களாயிருந்தாலும் தனிகர்களாயிருந்தாலும், மற்றும் குலம் ரூபம் முதலியவற்றால் மேம்பட்டவர்களாயிருந்தாலும் யார்க்குமே தற்சிறப்புக் கூடாதென்பதே நூற்கொள்கை.

ஸ்ரீ ராமாயணத்திற் சிறிது செல்வோம். திருவடியானவர் எல்லாவகைப் பெருமைகளும் பெற்றவரென்பதில் ஐயமில்லை. இவர் பிராட்டி பக்கலில் வார்த்தையாடும்போது *மத்த: ப்ரத்யவர: கச்சிந்நாஸ்தி ஸுக்ரீவஸந்நிதௌ * என்கிறார். 'ஸுக்ரீவ மஹாராஜரிடத்தில் என்னிலும் கடைகெட்ட வேறொரு வானரம் இல்லை' என்பது இதன் பொருள். இதற்கு முன்னே * மத்விசிஷ்டாச் ச துல்யாச் ச ஸந்தி தத்ர வனௌகஸ:* என்றும் சொல்லுகிறார். என்னைக்காட்டிலும் மேற்பட்டவர்களும் என்னோடொத்த நீசர்களுமான வானரர்கள் ஸுக்ரீவ ஸந்நிதானத்திலுள்ளார்களென்றபடி.

இங்கு இப்படி தமது தாழ்வைக் கூறின திருவடிதாமே கடலைக் கடக்க வேண்டிய ஸந்தர்ப்பம் வந்தவளவில் [கிஷ்கிந்தாகாண்ட முடிவில்] * பந்நகாசநமாகாசே பதந்தம் பக்ஷிஸேவிதே. வைநதேய மஹம் சக்த: பரிகந்தும் ஸஹஸ்ரச:* என்றார்; ஆகாசத்திலே கனவேகமாகப் பறந்து செல்கின்ற பக்ஷிராஜனையும் அவலீலையாக இறுகப்பிடிக்கவல்லேன் நான்—என்று தற்புகழ்ச்சியாகச் சொல்லிக் கொள்வது இந்த ச்லோகத்தில் ஸ்பஷ்டமாகவுள்ளது. ஒருவரே ஒருகால் தம்மைத் தாழ்த்திக் கூறிக்கொள்வதும், மற்றொருகால் உயர்த்திக் கூறிக்கொள்வதுமானால் இதில் அர்த்தமில்லையே. ஸ்வரூபாநுரூபமான அநுஸந்தானமென்பது எப்போதும் மாறுபடாமலிருக்கவேண்டுமன்றோ; என்று சிலர் சங்கிக்கக் கூடும். இதைப் பற்றித் தெளிவு பிறப்பிப்பதற்கு முன்னே, இங்ஙனம் ஒருகால் நைச்சியாநுஸந்தானமும், மற்றொருகால் உத்கர்ஷ முரைத்தலும் கொண்டுள்ள வேறு சில மஹான்களையும் எடுத்துக் காட்டிப் பிறகு எல்லாவற்றுக்கும் ஒருங்கே ஸமாதான முரைப்போம்.

ஆழ்வார்கள் நைச்சியானுஸந்தானமே வடிவெடுத்தவர்களென்பது அனைவருமறிந்ததே. இதற்கு நாம் விசேஷித்துப் பாசுரங்களை யெடுத்துக்காட்டவேண்டியது அவசியமில்லை. இத்தகைய ஆழ்வார்களில் திருமழிசைப்பிரான் * பாலில் கிடந்ததுவும் பண்டரங்க மேயதுவும் ஆலில் துயின்றதுவும் ஆரறிவார்?—ஞாலத்தொரு பொருளை வானவர்தம் மெய்ப்பொருளை, அப்பிலரு பொருளை யானறிந்தவாறு * என்றருளிச்செய்கிறார்: எம்பெருமான்படியை யான் தெரிந்து கொண்டிருப்பதுபோல வேறு யார் தெரிந்து கொண்டிருக்கிறார் எனறு, செருக்குத் தோற்றச்சொல்லப்பட்டது இதில். * என்மதிக்கு விண்ணெல்லாமுண்டோவிலை * என்றும் இவ்வாழ்வர்தாமே பேசியுள்ளார். இனி, *நீசனேன் நிறையொன்றுமிலேன் * சீலமில்லாச் சிறியன் * என்றிங்ஙனே தாழ்வின் எல்லையிலே நின்று பேசின நம்மாழ்வாரும் (திருவாய்மொழி ஆறும்பத்தில்) *குரவையாய்ச்சியரோடு கோத்ததும்* என்ற வொரு பதிகத்தில் பாட்டுத்தோறும் ஈற்றடியில் தம்முடைய உயர்வே பொலியப் பேசியுள்ளார்; * எனக்கார் பிறர் நாயகரே * எனக்கினியார் நிகர் நீணிலத்தே * நாவுடையேற்கு மாறுளதோ விம்மண்ணின் மிசையே *

என்றிப்படி பேசியிருப்பனகள் "இவை நம்மாழ்வாருடைய அருளிச்செயலா?" என்று வியக்கும்படியுள்ளன.

ஆசாரியர்களில் ஆளவந்தாருடைய ஸ்ரீஸூக்திகளைக் காண்போம். * ந நிந்திதம் கர்ம ததஸ்தி லோகே ஸஹஸ்ரசோ யத் ந மயாவ்யதாயி.* என்றும், * அமர்யாதஃ க்ஷுத்ரச் சலமதிரஸூயாப்ரஸவ பூஃ க்ருதக்நோ துர்மாநீ ஸ்மரபரவசோ வஞ்சநபரஃ, ந்ருசம்ஸஃ பாபிஷ்டஃ* என்றும் இவருடைய நைச்சியாநுஸந்தானங்கள் அப்ரமேயமானவை. இவர்தாமே *ஆசைலாத் அத்ரிகந்யா சரணகிஸலய ந்யாஸதந்யோப கண்டாத் ஆரக்ஷோநீதஸீதா முககமலஸமுல்லாஸ ஹேதோச் ச ஸேதோஃ. ஆ ச ப்ராச்யப்ரதீச்யக்ஷிதிதர யுகளாத் ஸூர்ய சந்த்ராவதம்ஸாத் மீமாம்ஸா சாஸ்த்ரயுக்மச்ரம விமலமநாஃ ம்ருக்யதாம் மாத்ருசோந்யஃ * ந வயம் கவயஸ் து கேவலம் ந வயம் கேவல தந்த்ர பாரகாஃ, அபி து ப்ரதிவாதி வாரண ப்ரகடாடோப விபாடந க்ஷமாஃ* என்று பணித்துள்ள ச்லோகங்கள் தற்புகழ்ச்சியே வடிவெடுத்திருக்கக் காணுகின்றோம். இவற்றுக்கெல்லாம் இனி ஸமாதானம் கேண்மின்.

மேலேயெடுத்துக் காட்டின ஆளவந்தாருடைய செருக்குமொழிகள் வித்யார்த்தி தசையில் வெளிவந்தவை. ப்ரதிபக்ஷிகோஷ்டியில் வெளிவந்தவை. கீழே நாமெடுத்துக் காட்டிய நன்னூற்சூத்திரத்தில் "தான் தற்புகழ்தல் தகுதியன்றே". என்றவர்தாமே அடுத்த சூத்திரமியற்றியிருப்பது கேளீர்;—

"மன்னுடை மன்றத்து ஓலைத்தூக்கினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னுடையாற்ற லுணராரிடையினும்
தன்னைப் புகழ்தலும் தகும் புலவோற்கே."

என்பதாமது. அரசனைக்காணச் செல்லுகிற வித்வான் தன்னுடைய பாண்டித்தியத்தை உள்ளபடி தெரிவிக்கலாம்; ஒரு ஸபையில் வாதம் செய்து வெற்றி பெற வேண்டிய சந்தர்ப்பத்தில் "என்னுடைய பாண்டித்தியத்தை என்னவென்று நினைத்தீர்கள்? பாருங்கள்" என்று செருக்கிச் சொல்லலாம்; தன்னை [உண்மையான வித்வானை] மற்றொருவர் ஞானக்குறைகூறிப் பழித்த ஸமயத்திலும் தன்னுடைய யோக்யதையைத் தானே புகழ்ந்து கூறலாம்; தன்னுடைய ஞானப் பெருமையை உள்ளபடி தெரிந்துகொள்ளாதவர்கள் 'உமக்கு எந்தெந்த சாஸ்த்ரங்கள் போரும்?' என்று கேட்டால், அப்போதும் தனது கல்விப் பெருமையைப் பகரலாம்—என்பது இச்சூத்திரத்தின் பொருள். முடிவில் 'புலவோற்கே' என்றதனால் உள்ளபடி புலமை பெற்றவர்க்கே இந்தத் தற்புகழ்ச்சி தகுமென்றதாயிற்று. இதன்படி ஆளவந்தாருடைய தற்புகழ்ச்சி சாலத் தகுமென்று தெரிந்துகொள்வது.

இனி, திருமழிசைப்பிரான் நம்மாழ்வார் போல்வாருடைய தற்புகழ்ச்சி—பகவத் குணாநுபவத்தின் பெருமையினாலுண்டான களிப்பின் மிகுதியினாலாயது. இது தற்புகழ்ச்சி யென்று நினைக்கத்தக்கதேயன்று. மணவாளமாமுனிகள் திருவாய்மொழி நூற்றந்தாதியில் "குரவை முதலாங்கண்ணன் கோலச் செயல்கள் இரவு பகலென்னுமைலென்றும் பரவுமனம் பெற்றேனென்றே களித்துப் பேசும் பராங்குசன்." என்று மருமத்தை விளக்கியருளிச் செய்திருப்பது காண்க.

திருவடியின் தற்புகழ்ச்சியுரை எவ்விடத்திலுள்ளதென்று பார்க்கவேணும். கடற்கரையிலே வந்து சேர்ந்த வானர வீரர்கள் கடலைக்கடந்து செல்லவும், சென்று திரும்பி வரவும் முடியாமையை நினைத்துத் தளர்ந்திருந்த போழ்து அவர்களின் தளர்ச்சி தொலையவும் உத்ஸாஹம் ஓங்கவும் பேசின பேச்சு அது. இங்ஙனே திருவடி பேசியிராவிடில் வானரவீரர்கள் அங்கு முடிந்தேயிருப்பார்கள். அங்ஙனமாகாமைக்காக நிகழ்ந்ததான இத்தற்புகழ்ச்சி தண்ணீர்ப்பந்தல் வைத்த தருமத்தோடொக்குமென்பர். ஆக உதாஹரித்த ஆத்ம ப்ரசம்ஸைகளினால் ஸ்வரூபாநுரூபமான நைச்சியாநுஸந்தானத்திற்குக் குறை இறையுமில்லை யென்றுணர்க. ... *

---

## 13. நப்பின்னைப்பிராட்டியைப்பற்றின நிஷ்கர்ஷம்.

ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் நப்பின்னைப் பிராட்டியின் ப்ரஸ்தாவம் பல பல விடங்களிற் காணப்படுகிறது. நப்பின்னையென்று சிலவிடங்களிலும் பின்னையென்று பலவிடங்களிலும் உள்ளது. * பின்னை மணாளனை * பின்னை தோள் மணந்த பேராயா * பின்னைக்காய் ஏற்றுயிரையட்டான் * நப்பின்னை காணில் சிரிக்கும் * நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய் * என்று பின்னை யென்றும் நப்பின்னை யென்றும் திருநாமத்தைச் சொல்லியிருப்பது தவிர, இங்ஙனே திருநாமஞ் சொல்லாமல். * கோவை வாயாள் பொருட்டு ஏற்றினெருத்த மிறுத்தாய் * * வம்பவிழ்கோதை பொருட்டா மால்விடையேழுமடர்த்த * அன்றுருயேழுந் தழுவி நீ கொண்ட ஆய்மகளன்பனே * என்று பொதுப்படச் சொல்லியிருக்குமிடங்களும் பல பல.

யசோதைப் பிராட்டிக்கு உடன் பிறந்தவனாய்க் கும்பனென்னும் பெயரையுடையவொரு கோபாலன் திருவாய்ப்பாடியிலிருந்தான்; அவனுக்கு மகளாய்த் தோன்றினவள் இந்த நப்பின்னை, ஜனக சக்ரவர்த்தி தன் மகளான ஸீதா பிராட்டிக்குக் கந்யாசுல்கமாக வில் முறியை வைத்திருந்ததுபோல, இந்தக் கும்பன் தன் மகளான நப்பின்னைக்கு ஏறு தழுவுதல் என்னுங் காரியத்தைக் கந்யாசுல்கமாக வைத்திருந்தனன்; அதாவது ஒருவராலும் வலியடக்க முடியாத ஏழு எருதுகளை முன்னிறுத்தி இவற்றை வலியடக்குபவர்க்கே தன்மகளை மணம் புரிவித்துத் தருவதென்று ஒரு வ்யவஸ்தை செய்து வைத்திருந்தனன். அவளுடைய ரூபலாவண்யாதிசயங்களைக் கேள்வியுற்ற பலரும் அவளை மணந்துகொள்ள விரும்பி அவ்வெருதுகளை யடர்ப்பதாக வர. அவற்றின் இடி போன்ற முழக்கத்தினால் அவர்கள் யாவரும் வெகு தூரத்திற்கு அப்புறத்திலேயே தள்ளுண்டு போயினரென்றும், கண்ணபிரானொருவனே அவற்றை அவலீலையாக வலியடக்கி அவளை மணந்து கொண்டனனென்றும் வரலாறு கூறப்படுகின்றது.

க்ருஷ்ணாவதாரத்தில் ருக்மிணீ ஸத்யபாமைகளையே ப்ரதாநமஹிஷிகளாக நூல்களில் சொல்லியிருப்பது தவிர, அர்ச்சையிலும் அநுபவித்து வருகிறோம். ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்தங்களில் ருக்மிணிப் பிராட்டியைப் பற்றின ப்ரஸ்தாவம் அதிஸ்வல்பமாகவே யுள்ளது. திருவாய்மொழியில் * அன்றங்கமர் வென்று உருப்பிணி நங்கை யணி நெடுந்தோள் புணர்ந்தான் * என்றும், பெரியாழ்வார் திருமொழியில் * உருப்பிணி நங்கையைத் தேரேற்றிக்கொண்டு * உருப்பிணி நங்கை தன்னை மீட்பான் தொடர்ந்தோடிச் சென்ற.....* என்றும். நாச்சியார் திருமொழியில் * கண்ணாலங் கோடித்துக் கன்னி தன்னைக் கைப்பிடிப்பான் திண்ணானிருந்த சிசுபாலன் தேசழிந்து, அண்ணாந்திருக்கவே ஆங்கு அவளைக் கைப்பிடித்த பெண்ணாளன் * என்றும் இங்ஙனே சிலவிடங்களைத் தேடிப்பிடிக்க வேண்டியிராநின்றது. நப்பின்னைப்பிராட்டியின் ப்ரஸ்தாவத்திற்கே அபரிமிதமான ஸூபிக்ஷமுள்ளது. இராமாநுச நூற்றந்தாதியிலுங்கூட *நங்கள் பஞ்சித் திருவடிப் பின்னை தன் காதலன் * என்று நப்பின்னைப் பிராட்டியை யிட்டே எம்பெருமானை விசேஷித்திருப்பது காணுகின்றோம்.

இவளுக்கு வடமொழியில் என்ன பெயரென்று தெரிந்துகொள்ள வேணுமே. கூரத்தாழ்வான், பட்டர், தேசிகன் ஆகிய மூவருடைய திருவாக்குக்களில் மட்டுமே நப்பின்னையின் ப்ரஸ்தாவம் வந்திருக்கின்றது. இம் மூவரும் இவளை நீளா என்றே குறிப்பிட்டருளியுள்ளார்கள். இதைப்பற்றி மேலே விவரிப்போம். அது நிற்க.

ஸ்ரீ க்ருஷ்ண பகவத் கதைகளை நாம் தெரிந்துகொள்வதற்குப் பரம ப்ரமாணமாக விளங்குகின்ற ஸ்ரீ விஷ்ணுபுராணம் ஸ்ரீ பாகவதம் மஹாபாரதம் முதலிய

இதிஹாஸ புராணங்களில் ஒன்றிலும் இந்த நப்பின்னைப் பிராட்டியைப்பற்றின இதிஹாஸம் காணப்படவில்லை. சிலர் நாக்நஜிதீ என்பவளுடைய சரித்திரத்தைக் கண்டு இவளைத்தான் ஆழ்வார்கள் நப்பின்னைப் பிராட்டியாகக் கூறியிருக்கிறார்களென்று மருள்வதுண்டு; இப்படிச் சிலர் எழுதியுமிருக்கிறார்கள். அவளுடைய சரிதையில் ஏறுதழுவுதல் என்பது உள்ளதாதலால் அதைக்கொண்டு ப்ரமிக்கின்றார்கள். அவள் க்ஷத்ரிய குமாரியாகச் சொல்லப்பட்டிருப்பதைக் குறிக்கொள்ள வேண்டும். கண்ணன் திருவாய்ப்பாடியில் வாழ்கிற காலத்தில் மணந்துகொண்டதாகக் கதையிருக்கவேண்டும்; அவள் கோபால கன்னிகையாகவுமிருக்கவேண்டும். நாக்நஜிதி என்பவளுக்கு இவ்விரண்டு அம்சங்களும் அஸம்பாவிதமாகையாலே அவளை நப்பின்னையாகக் கொள்வதற்குச் சிறிதும் ஔசித்யமில்லை. நப்பின்னையை ஆய்மகளென்றே ஸ்பஷ்டமாகக் குறிக்கின்றார்கள் ஆழ்வார்கள். "ஆயர்மடமகள் பின்னைக்காகி அடல்விடையேழினையும், வீயப்பொருது வியர்த்து நின்றானை மெய்ம்மையே கண்டாருளர்" என்கிறார் பெரியாழ்வார். "அன்றுரு வேழுந் தழுவி நீகொண்ட ஆய்மகளன்பனே" என்கிறார் நம்மாழ்வார், இங்ஙனே பாசுரங்கள் பலபலவுள்ளன. ஆகவே நாக்நஜிதியை நெஞ்சால்நினைக்கவும் ப்ரஸக்தியில்லையாயிற்று.

ஆகில் இவளையும் இவளுடைய சரித்திரத்தையும் ஆழ்வார்களும் ஆண்டாளும் எங்ஙனே தெரிந்துகொண்டார்களென்று கேள்வி பிறக்கும். வேதாந்தவாசிரியர் யாதவாப்யுதய காவியத்தில் திருவாய்ப்பாடியில் நிகழ்ச்சிகளைச் சொல்லிவருமடைவில் நான்காவது ஸர்க்கத்தில் (98, 99 ஆகிய இரண்டு சுலோகங்களினால்) கண்ணபிரான் நப்பின்னைப் பிராட்டியை மணந்துகொண்ட வரலாற்றைப் பணித்துள்ளார்; அந்த சுலோகங்களாவன :—

* दिशागजानामिव शाक्कराणां शृङ्गाग्रनिर्भिन्नशिलोच्चयानाम् ।
स तादृशा बाहुबलेन कण्ठान् निपीड्य लेभे पणितेन नीलाम् ॥
करेण दम्भोलिकठोरतुङ्गान् देहान् पृथून् दानवदुर्वृषाणाम् ।
विमृश्य नूनं विदधे मुकुन्दः प्रियास्तनस्पर्शविहारयोग्याम् ॥

இவ்விரண்டு ச்லோகங்களுள் முந்தின சுலோகத்தினால்—நப்பின்னைப் பிராட்டியின் திருமணத்திற்காக எருதுகளை வலியடக்க வேண்டுவது சுல்கமாக வைக்கப்பட்டிருந்ததென்றும் அப்படியே அவ்வெருதுகளை வலியடக்கி அவளைக் கண்ணபிரான் மணந்துகொண்டானென்றும். நீளையென்பது அவளுடைய பெயர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிந்தின சுலோகத்தினால்—இவ்வேறுதழுவுதல் கண்ணபிரானுக்கு நப்பின்னைப் பிராட்டியின் திருமுலைத் தடத்தோடு அணைந்தாற்போலவேயிருந்ததென்று சொல்லும் முகத்தால் இவ்வரிய பெரிய காரியம் வெகு அவலீலையாக நடைபெற்றதென்று காட்டப்பட்டுள்ளது. இவ்விடத்து வியாக்கியானத்தில் அப்பய தீக்ஷிதர் இக்கதையைச் சிறிது விரிவாக எழுதி இக்கதை ஹரிவம்சத்திலுள்ளதாகவும் எழுதியுள்ளார்.

"एवं हरिवंशे कथाः—विदेहनगरे यशोदानुजः कुम्भको नाम गवांपतिरासीत् । तस्य व्रजे कालनेमेरसुरस्य सुताः सप्त प्राग्भगवता निर्जिताः पूर्ववैरमनुस्मृत्य कृष्णापचिकीर्षया वृषभरूपेण न्यवसन् । तैश्च गोकुलवित्रासनसस्यभक्षणाद्युपद्रवेषु क्रियमाणेषु स्वयं दमयितुमशक्येषु च तेषु य एषां दमयिता तस्मै स्वकन्यां नीलां दास्यामीति कुम्भकः प्रतिजज्ञे । तत्र च कदाचित्कृष्णः समागत्य तान्मारयित्वा नीलां जग्राहेति ॥"



ஆனால் ஹரிவம்சத்தில் நாம் தேடிப்பார்த்ததில் கிடைக்கவில்லை. அதிக ப்ரசாரத்திலுள்ள ஸ்ரீராமாயணாதிகளிலேயே எத்தனையோ விபர்யாஸங்கள் நேர்ந்திருக்கக் காணாநின்றோம். ஹரி வம்சத்திலும் இப்படி நேர்ந்திருக்கிறதென்று நாம் நினைக்க வேண்டியதாகிறது. தீக்ஷிதர் ஹரிவம்சத்தில் தாம் பாராமல் எழுதியிருக்கமாட்டார். அது எப்படியாவது இருக்கட்டும். மூலத்தில் தேசிகன் இக்கதையை வ்யக்தமாகவருளிச் செய்திருப்பதைக் காணாநின்றோம். இதிஹாஸ புராணங்களில் ஏதேனுமொன்றை ஆதாரமாகக் கொள்ளாமல் ஸ்வதந்திரமாக அவர் அருளிச் செய்யமாட்டார். தேநுகாஸுரவதம். காளியமர்த்தனம் முதலிய சரித்திரங்களுக்கு முன்பே இது நடைபெற்றதாகவும் திருவாய்ப்பாடியில் நிகழ்ந்ததாகவும் தேசிகன் காட்டியிருப்பதைக் காணுமிடத்து இது புராண ப்ரஸித்தமான கதையேயென்று நாம் கொள்ளக் குறையில்லை.

இப்பிராட்டியினுடைய திருநாமம் நீலா என்பதேயென்று மேலே குறித்த யாதவாப்யுதய ஸ்ரீஸூக்தியினால் தெரிவதுபோலவே பட்டர் ஸ்ரீஸூக்தியினாலும் ஆழ்வான் ஸ்ரீஸூக்தியினாலும் நன்கு தெரிய வருகின்றது. திருப்பாவைக்குத் தனியனாக பட்டர் அருளிச் செய்த ச்லோகம் *நீளாதுங்க ஸ்தநகிரிதட ஸுப்தம்* இத்யாதி. இந்த ச்லோகத்தின் முதற்பாதமானது *குத்துவிளக்கெரிய பாசுரத்தில் *நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர்மார்பா!* என்றதை மொழிபெயர்த்தபடியாகவுள்ளது. இதில் நப்பின்னையையே நீளா என்று நிர்தேசித்திருக்கிறாரென்பது ஸ்பஷ்டம். கூரத்தாழ்வான் ஸுந்தரபாஹுஸ்தவத்தில் க்ருஷ்ணாவதார ஸ்துதிபரமாக வருளிச்செய்த ச்லோகங்களுள் முதல் ச்லோகமாகிய *ஹே ஸுந்தரைகதர ஜந்மநி க்ருஷ்ணபாவே* என்னும் ச்லோகத்தில் (*நீளா குலேந ஸத்ருசீ கில ருக்மிணீ ச*) என்பது நான்காவது பாதம். இங்கு நீளா என்றது நப்பின்னைப் பிராட்டியையே யென்பது ஸ்பஷ்டம். திருமழிசைப்பிரான் திருச்சந்த விருத்தத்திலருளிச் செய்த *ஆயனாகியாயர் மங்கை வேய தோள் விரும்பினாய்* என்ற பாசுரத்தையே யடியொற்றி மேலே குறித்த ஸுந்தரபாஹுஸ்தவ ச்லோகம் அவதரித்ததாதலால் ஆயர்மங்கையாகிய நப்பின்னைப்பிராட்டியையே ஆழ்வான் நீளா என்று குறிப்பிட்டாரென்பது நிஸ்ஸந்தேஹம்.

ஆழ்வார்கள் ஓரிடத்திலும் நப்பின்னையை நீலா என்கிற பெயரால் நிர்தேசித்திருக்கவில்லை. அப்படி இருக்க இவ்வாசாரியர்கள் நீளா என்றருளிச் செய்திருப்பதற்குக் காரணம் யாது? என்று ஆராயவேண்டியதாகிறது. யாதவாப்யுதய வியாக்கியான கர்த்தாவான அப்பய தீக்ஷிதர் இந்த நப்பின்னையின் வரலாற்றை வடமொழிப் புராணத்தில் கண்டதாக நாம் கீழே காட்டியிருக்கிறோமல்லவா? அந்தப் புராணத்தில் நீளா என்கிற பெயர் இருந்திருக்கவேண்டும். இது நாம் ஊஹமாக எழுதுகிறபடி. நம்முடைய அந்தரங்கமான அபிப்பிராயம் கேளீர் :—

எம்பெருமான் திருநாட்டில் ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவி யென்று மூன்று திவ்யமஹிஷிகளோடு கூடியிருப்பதாக பகவச்சாஸ்த்ரங்களினால் தெரியவருகின்றது. ஸ்ரீராமாயணத்தில் ஸமுத்ர சரணாகதி ப்ரகரணத்திலுள்ளதான *புஜை: பரமநாரீணாம் அபிம்ருஷ்டமநேகதா* என்ற ச்லோகத்தின் கோவிந்தராஜீய வியாக்யானத்திலும் இது காணலாகிறது. கூரத்தாழ்வானும் ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் (ச்லோ. 78 முதல்) ஐந்து ச்லோகங்களினால் அம்மூன்று திவ்ய மஹிஷிகளையும் ப்ரசம்ஸிக்கிறார். ஆழ்வார்களும் அந்த திவ்ய மஹிஷிகள் மூவரையும் சேர்த்துப் பேசுமிடங்களில் *உடனமர் காதல் மகளிர் திருமகள் மண்மகள் ஆயர்மடமகள் என்றிவர் மூவர்* என்றும் *கூந்தல் மலர் மங்கைக்கும் மண்மடந்தைக்கும் குலவாயர் கொழுந்துக்கும் கேள்வன் தன்னை* என்றும் *குழற்கோவலர் மடப்பாவையும் மண்மகளும் திருவும்* என்றும் இவ்வண்ணமாகவே பேசியிருக்கக் காண்கிறோம். பகவச் சாஸ்த்ரங்களில்

ப்ரஸித்தையான நீளா தேவியை ஆழ்வார்கள் *ஆயர்மட மகளென்றும் *குலவாயர் கொழுந்தென்றும்* குழற் கோவலர் மடப்பாவை யென்றுமே கூறியிருத்தலால் ஆழ்வார்களின் திருவுள்ளத்தாலே ஆயர்மங்கையரில் ஒருத்தியான நப்பின்னைப் பிராட்டியே நீளாதேவியின்ஸ்தானத்தில் கொள்ளப்பட்டாளென்பது நிஸ்ஸந்தேஹமாகத் தேறி நின்றது. இல்லையாகில், திருநாட்டிலுள்ள திவ்ய மஹிஷிகளைப் பரிகணனை பண்ணுமிடங்களில் 'ஆயர் மடமகள்' என்னுஞ்சொல்லைப் பிரயோகித்தது பொருந்தாதன்றோ.

ஆக ஆழ்வார்களின் திருவுள்ளத்தினால் நப்பின்னைப் பிராட்டியானவள் நீளாதேவியாகக் கொள்ளப்பட்டாளென்பது தேறிநின்றமையால் இதையடியொற்றியே நம் ஆசார்யர்கள் அவளை [நப்பின்னையை] வடமொழியினால் நிர்தேசிக்க வேண்டுமிடங்களில் நீளா என்று நிர்தேசித்தார்கள் என்று அறுதியிடலாகிறது.

தமிழர்களில் 'நக்கீரர்' என்றொருவர் மிக்க புகழ் பெற்றவர். அவர்க்குக் கீரரென்பதே இயற்பெயரென்றும், உயர்வு குறிப்பதோர் உபசர்க்கமாகிய 'ந' என்னுமெழுத்தைச் சேர்த்து உபசாரமாக நக்கீரரென வழங்குகிறார்களென்றும் கூறுகின்றனர் பெரியோர்; பின்னை—நப்பின்னை என்னுமிவ்விடத்திலும் அவ்வண்ணமாகவே கொள்ளத்தகும், ஸ்ரீதேவிக்கும் பூதேவிக்கும் பிற்பட்டவளென்னுங் காரணத்தினால் பின்னையென்று ஆழ்வார்களால் வழங்கப்பட்டனள். ... *

## 14. ரங்கராமாநுஜஸ்வாமியின் ஸ்காலித்யங்கள்.

நம்மாழ்வார் திருவாய்மொழியில் *ஒன்றுந் தேவு முலகு முயிருமென்று தொடங்கும் பதிகத்தில் (4-10-6)* போற்றி மற்றோர் தெய்வமென்னும் பாசுரத்தில் *எல்லீரும் வீடுபெற்றால் உலகில்லை யென்றே* என்றருளிச் செய்துள்ளார். இப்பதிகத்தில் ஸ்ரீமந்நாராயணனுடைய பரத்துவத்தை உபபாதித்து வந்த ஆழ்வாரை நோக்கி 'ஸ்ரீமந்நாராயணனே ஸர்வேச்வரனாகில் அவன் தன்னையே ஆச்ரயிக்கும்படி எங்களைப் பண்ணாமல் இதர தெய்வங்களைத் தொழுமாறு எங்களைச் செய்து வைத்தது ஏன்?' என்று சிலர் கேட்பதாகக்கொண்டு அவர்களுக்கு விடை கூறுவதாக இப் பாசுரமமைக்கப்பட்டுள்ளது. இப்பாசுரத்தில் "எல்லீரும் வீடுபெற்றால் உலகில்லை யென்றே" என்பதுதான் உயிராகவுள்ளது. எல்லாரும் ஸ்ரீமந்நாராயணனையே தொழப்பெற்றால் எல்லாருமே வீடு பெறுவார்கள்; அப்படி எல்லாரும் வீடுபெற்று விட்டால் உலகு இல்லையாய் விடும்; (அதாவது லீலாவிபூதி அடியற்றுப் போய்விடும்;) அங்ஙனம் ஆகாமைக்காகவே எம்பெருமான் உங்களை இதர தேவதா பஜனம் பண்ணி ஸம்ஸாரிகளாய்த் தொலைந்து போம்படி செய்து வைத்தான்—என்பதாக இப்பாசுரத்திற்கு ஆபாத ப்ரதீதியில் பொருள் தோன்றக் கூடும். தசோபநிஷத் பாஷ்யகாரரான ரங்கராமாநுஜஸ்வாமி வடமொழியில் (திருவாய்மொழிக்குத்) தாம் பணித்த ஒன்பதினாயிரப்படி வியாக்கியானத்தில் இவ்விதமான பொருளையே எழுதியுள்ளார். "भवादृशानां सर्वेषां मोक्षलाभे लीलाविभूत्यन्तर्भूतलोकानाम् उच्छेद एव स्यादिति मत्वैव भगवता स्वविषये भक्तिमनुत्पाद्य देवतान्तरविषये भक्तिरुत्पादितेति भावः ।" என்பவை அந்த ஸ்வாமியினுடைய வியாக்கியான பங்க்திகள்.

ஆனால், திருக்குருகைப்பிரான் பிள்ளான், நம்பிள்ளை முதலான பூருவாசாரியர்கள் தம் வியாக்கியானங்களில் வெளியிட்டருளின பொருள் இங்ஙனே யல்ல, எங்ஙனே யென்னில்; "உலகில்லையென்றே" என்றவிடத்தில், உலகு என்பதற்கு



சாஸ்த்ரமென்று பொருள்; ப்ரபல பாபம் செய்து வைத்த நீங்களும் ப்ரபல ஸுக்ருதிகளுக்கே பெறக்கூடியதான மோக்ஷத்தைப் பெற்று விட்டீர்களாகில் சாஸ்த்ர மர்யாதையே அழிந்துவிடுமென்று நினைத்தே எம்பெருமான் உங்களை தேவதாந்தர ப்ரவணர்களாக ஆக்கிவைத்திருக்கிறான்; அவரவர்கள் பண்ணின புண்ய பாப ரூப கருமங்களுக்குத் தக்கபடியே பலன் கொடுப்பதென்று ஒரு சாஸ்த்ர மர்யாதை ஏற்பட்டிருக்கிறது; நீங்கள் முற் பிறவிகளில் பிரபலமான தீவினைகளைச் செய்திருக்கிறபடியால் அவற்றின் பலனாக இப்பிறப்பில் க்ஷுத்ரதேவதா பஜநம் பண்ணும்படியாக உங்களை உபேக்ஷித்திடலாயிற்று. கொடிய பாவங்கள் செய்த உங்களையும் புண்யாத்மாக்களைப் போலே ஸ்ரீமந்நாராயண ஸமாச்ரயணமே செய்யும்படி பண்ணிவிடுவாரானால் அப்போது முன்சொன்ன சாஸ்த்ர மரியாதை அழிந்துவிடுமன்றோ; அங்ஙனம் அழியாமைக்காகவே உங்களை இங்ஙனே நிறுத்திவைத்தது—என்பதாகவே ஆழ்வார் திருவுள்ளம்பற்றிய பொருள் என்று பூருவாசாரியர்கள் உபபாதித்தருளுகிறார்கள். வேதாந்த தேசிகனும் த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில் *தத்தத் கர்மாநுரூபம் பலவிதரணத:* என்று இவ்வர்த்தத்தையே வெளியிட்டருளினார். ஆகவே ஆழ்வார் திருவுள்ளத்தால் உலகு என்பதற்கு சாஸ்த்ரமென்னும் பொருள் தேறிவிட்டபடியால் இதை யடியொற்றியே ஸ்வாமி பாஷ்யகாரர் ப்ரக்ருத கீதாச்லோகத்தில் [*அதோஸ்மி லோகே வேதே ச*] என்றவிடத்தில் லோக சப்தத்தை சாஸ்த்ர பரமாக நயிப்பித்தருளினாரென்று அறியக் கிடக்கிறது. இந்த கீதா ச்லோகத்தை அப்பாசுரத்தின் வியாக்கியானத்தில் பெரியவாச்சான் பிள்ளையும் வடக்குத் திருவீதிப்பிள்ளையும் எடுத்துக் காட்டியு மிருக்கிறார்கள்.

எம்பெருமானார்க்கு முன்னே ஆளவந்தாரும் லோக சப்தத்தை சாஸ்த்ரமென்னும் பொருளில் ப்ரயோகம் செய்தருளினார். ஸ்தோத்ரரத்நத்தில் (23) *நநிந்திதம் கர்ம ததஸ்தி லோகே* என்றவிடத்திற்கு வியாக்கியானஞ் செய்தருளாநின்ற பெரியவாச்சான்பிள்ளை "ஆயிரமடங்கு என்றால் பண்ணப்படாதது யாதொரு நிந்திதகருமமுண்டு அதிபாதகமஹாபாதகாதிகள். அது சாஸ்த்ரத்திலுமில்லை;........அநுஷ்டாதாக்கள் பக்கல் இல்லாத நிஷித்தங்களும் சாஸ்த்ரத்தில் காணலாமிறே" என்று அருளிச் செய்திருக்கிறார். தேசிகனும் ஸ்தோத்ர பாஷ்யத்தில் அவ்விடத்தில், "लोक्यते अनेनेति लोकः—प्रमाणम्; तस्मिन्नास्ति; अप्रामाणिकमित्यर्थः। अत्र शास्त्ररूपप्रमाणविशेषविवक्षा" என்றருளிச் செய்தார். இவற்றால் ஆளவந்தாரும் லோக சப்தத்தை சாஸ்த்ரபரமாகவே கொண்டாரென்று விளங்காநின்றது. இப்படி ஆளவந்தாரும் எம்பெருமானாரும் கொண்டது ஆழ்வாரருளிச்செயலை அடியொற்றியே யென்பது நிஸ்ஸந்தேஹம். இவற்றை நோக்காமலெழுதினார் ரங்கராமாநுஜஸ்வாமி.

2. மற்றொன்றுங் கேண்மின்;—திருவாய்மொழி மூன்றாம்பத்தில் ஐந்தாவது பதிகத்தில் ஐந்தாவது பாசுரம் *சாதுசனத்தை நலியுங் கஞ்சனைச் சாதிப்பதற்கு, ஆதியஞ்சோதியுருவை அங்குவைத்திங்குப் பிறந்த* இத்யாதி. இதில் "ஆதியஞ்சோதியுருவை அங்குவைத்து இங்குப் பிறந்த" என்கிற இரண்டாமடிக்கு உண்மையான பொருளைப் பலர் க்ரஹிப்பதில்லை. 'தனக்கு அஸாதாரணமான திவ்ய ரூபத்தைப் பரமபதத்திலே வைத்துவிட்டு வேறொரு ரூபத்தைப் பரிக்ரஹித்துக் கொண்டு இங்கே வந்து பிறந்த' என்றே பலர் பொருள் கொள்ள நினைப்பர்கள். மூலத்தின் ஸந்நிவேசம் இப்படி ப்ரமிக்கச் செய்கிறது. திருக்குருகைப்பிரான் பிள்ளானருளிச்செய்த ஆறாயிரப்படி முதலானவியாக்கியானங்களில் உண்மையான பொருள் அருளிச் செய்யப்பட்டிருக்கின்றது. அதாவது, "ஆச்ரித ஜநவிரோதி கம்ஸாத்யஸுர நிரஸநார்த்தமாக ஸ்வாஸாதாரண திவ்ய ரூப விசிஷ்டனாய்க் கொண்டு இந்த லோகத்திலே மநுஷ்யனாய் வந்து பிறந்த" என்று ஆறாயிரப்படி

யருளிச் செயலுள்ளது. இதை யநுஸரித்தே மற்ற வியாக்கியானங்களு முள்ளன. "ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய ஸம்பவாமி" என்ற பகவத் கீதைக்கு இதுதான் சேர்ந்த பொருள். இப்படி யிருக்க, இங்கு ரங்கராமாநுஜஸ்வாமி தமது ஒன்பதி னாயிரப்படியில் இவ்விடத்திற்கு வியாக்கியானமாக எழுதியிருப்பதாவது—

"ஜகத்காரணம் ஸுந்தரம் ஜ்யோதிர்மயவிக்ரஹம் பரமபதே
ஸ்தாபயித்வா அஸ்மிந் லோகே அவதீர்ணம்." —என்று

"அங்கு வைத்து" என்பதற்கு—'பரமபதத்திலே வைத்து' என்று இவர் அர்த்தம் செய்துகொண்டார். இது தவறு. அங்கு வைத்து என்கிற முழுச் சொல்லுக்கு "அங்கிருக்கிறபடியே கொண்டு" என்று பொருள்.

ரங்கராமாநுஜ ஸ்வாமியிடத்தில் நமக்கு விசேஷ ப்ரதிபத்தியுண்டு. அவர் பரமப்ராமாணிகர். ஆயினும் சிலவிடங்களில் இப்படி ஸ்காலித்யம் நேர்ந்துவிடுகிறது. அவருடைய ஒன்பதினாயிரப்படியில் இங்ஙனே மற்றுஞ் சில ஸ்காலித்யங்களும் காட்டக்கூடியவை யுள்ளன. ... ... ... ... *

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம்

**அண்ணங்கராசாரியர்**

எழுதிய

அத்புதோபந்யாஸமாலை

முற்றுப்பெற்றது.

தமிழ்நாடு ... காப்பக ...
2042/38
சென்னை-600 008

ஸ்ரீ:

# அர்ச்சாவதார வைபவம்.

(ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார்.)

பரம காருணிகனான பரம புருஷன் *கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்பமும் சொற்பொருள்தானும் மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினாலருள் செய்து* என்கிறபடியே, இவ்விருள்தருமாஞாலத்தில் அகவிருளைப் போக்குவதற்காக அருளிச்செய்த சாஸ்த்ரங்கள் அபரிமிதங்களாயிருக்கும். அவற்றில் நிரூபிக்கப்படுகின்ற அர்த்தங்கள் எண்ணிறந்தவையாயிருந்தாலும் ஸாரமாக அறியவேண்டிய அர்த்தங்கள் ஐந்தேயாம் என்பர் மஹரிஷிகளும் மஹாசாரியர்களும். பிள்ளை லோகாசாரியர் முமுக்ஷுப் படியில் (27) "அறிய வேண்டுமர்த்தமெல்லாம் இதுக்குள்ளேயுண்டு" என்கிற சூர்ணையினால் ஆத்மோஜ்ஜீவநத்துக்குடலாக அறியவேண்டும் அர்த்த விசேஷங்களெல்லாம் திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்துக்குள்ளே யுண்டென்று முன்னம் ப்ரதிஜ்ஞை செய்தருளி. அடுத்த சூர்ணையை "அதாவது அஞ்சர்த்தம்" என்று இட்டருளினார். பரமாத்மஸ்வரூபம், ஜீவாத்மஸ்வரூபம், உபாயஸ்வரூபம், புருஷார்த்தஸ்வரூபம் விரோதி ஸ்வரூபம் என்னுமிவையாகிற ஐந்து அர்த்தங்களே அவை.

*प्राप्यस्य ब्रह्मणो रूपं प्राप्तुश्च प्रत्यगात्मनः । प्राप्त्युपायं फलं प्राप्तेस्तथा प्राप्तिविरोधि च ।
वदन्ति सकला वेदाः सेतिहासपुराणकाः । मुनयश्च महात्मानो वेदवेदार्थवेदिनः—

*ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச் ச ப்ரத்யகாத்மந:, ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தேஸ் ததா ப்ராப்திவிரோதி ச; வதந்தி ஸகலா வேதாஸ் ஸேதிஹாஸபுராணகா:, முநயச் ச மஹாத்மாநோ வேத வேதார்த்த வேதிந:* என்று ஸுப்ரஸித்தமான ப்ரமாண வசனம் இங்கே அநுஸந்திப்பது, இவ்வைந்து அர்த்தங்களே **அர்த்தபஞ்சக**மென்று வழங்கப்பெறும்.

திருவாய்மொழியாயிரம் பாசுரங்களுக்கும் இவ்வைந்துபொருள்களேலக்ஷ்யமென்னுமிடத்தை *மிக்க இறை நிலையும் மெய்யாமுயிர் நிலையும், தக்கநெறியும் தடையாகித் தொக்கியலு மூழ்வினையும் வாழ்வினையுமோதுங் குருகையர்கோன் யாழினிசை வேதத்தியல்* என்கிற தனியன் முகமாக நம் முன்னோர்கள் வெளியிட்டருளினார்கள். இவை ஐந்து அர்த்தங்களேயானாலும் இவற்றில் உட்புகுந்து ஆராய்ச்சி செய்யத் தொடங்கினால் ஒவ்வோரர்த்தமும் ஐந்தைந்தாகப் பெருகும். முன்னம் **प्राप्यस्य ब्रह्मणो रूपम्** என்றும் *மிக்க இறை நிலையும்* என்றும் சொல்லப்பட்ட பரமாத்மஸ்வரூபமென்கிற முதலர்த்தம் ஐந்துபடிப்பட்டிருக்கும் வகையை ஈண்டு நிரூபிப்போம். ப்ரக்ருதம் நாம் நிரூபிக்கவெடுத்துக்கொண்ட அர்ச்சாவதார வைபவமானது பரம புருஷனுடைய ஐவகையான ஸ்வரூபங்களுள் ஒன்றாதலால் இது தவிர்ந்த மற்ற நான்கு ஸ்வரூபங்களை ஸம்க்ஷேபமாக நிரூபித்து ஐந்தாவதான அர்ச்சாவதார ஸ்வரூபத்தைச் சிறிது விரிவாக நிரூபிப்போம்.

ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபமானது--பரத்வம் வ்யூஹம் விபவம் அந்தர்யாமித்வம் அர்ச்சாவதாரம் என்று ஐந்து ப்ரகாரமாயிருக்கும். இவ்விஷயம் விஷ்வக்ஸேநஸம்ஹிதையிலே

*मम प्रकाराः पञ्चेति प्राहुर्वेदान्तपारगाः । परो व्यूहश्च विभवो नियन्ता सर्वदेहिनाम् ।
अर्चावतारश्च तथा दयालुः पुरुषाकृतिः । इत्येवं पञ्चधा प्राहुर्मां वेदान्तविदो जनाः—

*மம ப்ரகாரா: பஞ்சேதி ப்ராஹுர் வேதாந்தபாரகா:, பரோ வ்யூஹச்ச விபவோ நியந்தா ஸர்வதேஹிநாம், அர்ச்சாவதாரச் ச ததா தயாளு: புருஷாக்ருதி:, இத்யேவம் பஞ்சதா ப்ராஹுர் மாம் வேதாந்தவிதோ ஜநா:* என்று சொல்லப்பட்டது.

இவற்றுள் பரத்வமாவ தென்னென்னில்; *நலமந்தமில்லதோர் நாடு* என்னப்பட்ட நித்யவிபூதியிலே நித்யர்க்கும் முக்தர்க்கும் போக்யனாய்க் கொண்டு எழுந்தருளியிருக்குமிருப்பு, அந்தத்திருநாட்டின் வளத்தை எம்பெருமானாரருளிச் செய்த ஸ்ரீ வைகுண்ட கத்யத்திலும், கூரத்தாழ்வானருளிச் செய்த ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்தில் *இச்சா விஹார விதயே விஹிதாங்யமூநி* என்கிற (40) ச்லோகத்தில் உத்தரார்த்தம் தொடங்கி ஐந்தாறு ச்லோகங்களிலும், பட்டரருளிச்செய்த ஸ்ரீ குணரத்ந கோசத்தில்

*यद्दूरे मनसो यदेव तमसः पारे यदत्यद्भुतं यत्कालादपचेलिमं सुरपुरी यद्गच्छतो दुर्गतिः ।
सायुज्यस्य यदेव सूतिरथ वा यद् दुर्ग्रहं सद्गिरां तद्विष्णोः परमं पदम्—

*யத் தூரே மநஸோ யதேவ தமஸ: பாரே யதத்யத்புதம் யத் காலாதபசேலிமம் ஸுரபுரீ யத் கச்சதோ துர்கதி:, ஸாயுஜ்யஸ்ய யதேவ ஸூதிரதவா யத் துர்க்ரஹம் ஸத்கிராம் தத் விஷ்ணோ: பரமம் பதம்* என்கிற ச்லோகத்திலும் [இவற்றுக்கு அடியேனுடைய விரிவுரைகளிலும்] அறிக. ஸம்ஸாரத்தில் நின்றும் விடுபட்டு ஸ்வரூபாவிர்ப்பாவம் பெற்று பகவதநுபவ கைங்கர்யமே போது போக்காக இருப்பவர்கள் முக்தரெனப்படுவர். கருமம் காரணமாக ஒரு நாளும் ஸம்ஸார மண்டலத்தில் காலை வையாத அனந்த கருட விஷ்வக்ஸேநாதிகள் நித்யரெனப்படுவர். ஆக இப்படிப்பட்ட நித்ய முக்தர்களால் ஸேவிக்கப்படா நின்று கொண்டு பரமபதத்திலே எழுந்தருளியிருக்குமிருப்பு பரத்துவம் என்றதாயிற்று.

இனி வ்யூஹமாவது — படைத்தல் காத்தல் அழித்தலாகிற ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை நிர்வஹிப்பதற்காகவும், புபுக்ஷுக்களான ஸம்ஸாரிகளுக்கு இஷ்டப்ராப்தியையும் அநிஷ்ட நிவ்ருத்தியையும் பண்ணிக் கொடுத்து அவர்களை ரக்ஷிப்பதற்காகவும், முமுக்ஷுக்களாய் உபாஸிக்குமவர்களுக்கு ஸம்ஸாரநிவ்ருத்தி பூர்வகமாகத் தன்னை வந்தடையும்படியான அநுக்ரஹத்தைப் பண்ணுவதற்காகவும் ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தர்களாய்க் கொண்டு திருப்பாற்கடலில் நிற்கும் நிலை. வாஸுதேவரையும் கூட்டிக்கொண்டு சதுர்வித வ்யூஹ மென்று சொல்லுவதுண்டு.

இனி விபவமாவது இதரஸஜாதீயமாய்க் கொண்டு ஆவிர்ப்பவிக்கை. மத்ஸ்ய கூர்ம வராஹ ராமக்ருஷ்ணாத்யவதாரங்களையே விபவாவதாரமென்பது. இது ஆவேசாவதாரமென்றும் ஸாக்ஷாதவதாரமென்றும் இருவகைப்பட்டு, முறையே கௌணமென்றும் முக்க்யமென்றும் வழங்கப்பெறும். சிறிது தாழ்வானது கௌணமெனப்படும். ச்ரேஷ்ட-



மானது முக்க்யமெனப்படும். ஆவேசமானது ஸ்வரூபாவேசமென்றும் சக்தியாவேசமென்றும் இருபடிப்பட்டிருக்கும். தன்னுடைய அஸாதாரண ரூபத்தாலே ஆவேசிப்பது ஸ்வரூபாவேசமாகும். பரசுராமாதிகளான சேதநருடைய சரீரங்களிலே தன்னுடைய அஸாதாரண விக்ரஹத்தோடே ஆவேசித்து நிற்கை இது. சக்தியாவேசமாவது-காரியம் நடைபெறவேண்டிய காலத்தில் மட்டும் பிரமன் சிவன் முதலான சேதநர் பக்கலிலே சக்திமாத்திரங்கொண்டு ஸ்புரித்து நிற்கையாம். இத்தகைய விபவாவதாரங்கள் எண்ணித் தலைக்கட்டப் போகாதபடி அபரிமிதங்களாயிருக்கும். ஆனது பற்றியே * எங்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாயிமையோர் தலைவா! * என்றாராழ்வார்.

இனி, அந்தர்யாமித்வமாவது-- *अन्तः प्रविष्टः शास्ता जनानाम्* शास्ता विष्णुरशेषस्य जगतो यो हृदि स्थितः— சாஸ்தா விஷ்ணுரசேஷஸ்ய ஜகதோ யோ ஹ்ருதி ஸ்தித:* இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே உள்ளே ப்ரவேசித்து ஸகல ப்ரவ்ருத்திகளுக்கும் நியாமகனாயிருக்குமிருப்பு. இந்த அந்தர் வ்யாப்தியில் சில பக்ஷ பேதங்களுண்டு; அவையெல்லாம் நம்முடைய ஸத்ஸம்ப்ரதாயார்த்த ஸாரநிதியிலே பூர்வபக்ஷ ஸித்தாந்த விஸ்தரங்களுடன் காணத்தக்கன. ஆக, பரவ்யூஹ விபவ அந்தர்யாமித்வங்களின் ப்ரகாரம் இன்னதென்று நிரூபிக்கப்பட்டதாயிற்று, இனி அர்ச்சாவதாரத்தைப் பற்றிப் பேசுவோம்.

அர்ச்சாவதாரமாவது-- கோவில்களிலும் க்ருஹங்களிலும் எழுந்தருளி நிற்கும் நிலை. அர்ச்சா என்கிற சொல்லானது *அர்ச்சா பூஜாப்ரதிமயோ:* என்கிற நிகண்டின்படி பூஜித்தல் என்னுமர்த்தத்தையும், ப்ரதிமை என்னுமர்த்தத்தையும் கொண்டது. ப்ரக்ருதத்தில் 'ப்ரதிமை' என்பதே அர்த்தமாகக் கொள்ளக்கடவது. ஒரு ப்ரதிமையிலே எழுந்தருளியிருக்குமிருப்பு அர்ச்சாவதாரமென்றதாயிற்று.

அர்ச்சாவதாரத்தில் விசேஷித்து ஈடுபட்டவர்கள் ஆழ்வார்களும் ஆசாரியர்களுமாகையாலே இவர்களுடைய திவ்ய ஸூக்திகளைக்கொண்டு முன்னமநுபவிப்போம். ஆழ்வார்களில் முற்பட்டவரான பொய்கையாழ்வார் தம்முடைய முதல் திருவந்தாதியிலே (44)

"தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவம் தானே
தமருகந்த தெப்பேர் மற்றப்பேர்--தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரே
அவ்வண்ண மாழியா னும்."

என்கிற பாசுரம் அர்ச்சாவதாரத்திற்குத் தலையான பிரமாணமாயிருக்கும். இப்பாட்டின் கருத்தாவது. ஆச்ரிதர்கள் உகந்த உபாதாந த்ரவ்யங்களே தனக்குத் திருமேனியாகவும், அவர்கள் உகந்த திருநாமங்களே தனக்குத் திருநாமமாகவுங் கொண்டிருந்து, திருக்கல்யாண குணம் திவ்ய சேஷ்டிதம் முதலானவற்றில் யாதொரு விதத்தை (ஆச்ரிதர்கள்) அநுஸந்தித்து ஓயாமல் பாவனை பண்ணிக்கொண்டிருப்பர்களோ அவ்வண்ணமேயா யிருப்பது அர்ச்சாவதார ஸ்வரூபம் என்கை. இப்பாட்டின் பெரியவாச்சான்பிள்ளைவியாக்கியானத்திலே மூன்று ஐதிஹ்யங்கள் அருளிச்செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டி விவரணமும் செய்கிறோம்.

(1) "எம்பெருமானார் மாதுகரத்துக்கெழுந்தருளா நிற்க, சில பிள்ளைகள் காலாலே கீறி, உம்முடையஎம்பெருமான் திருமேனி, என்று காட்ட, பாத்ரத்தை வைத்துத் தெண்டனிட்டருளினார்."

(விவரணம்) எம்பெருமானுர் திருவரங்கம் பெரியகோயிலில் பிக்ஷைக்காகத் திருவீதியில் எழுந்தருளா நிற்கையில், தெருப்புழுதியில் விளையாடிக்கொண்டிருந்த சிறு பிள்ளைகள் திருவாழி திருச்சங்கு முதலியவற்ருேடே ஓர் உருவத்தைத் தரையிலே கீறி 'உடையவரே! உம்முடைய பெருமாள், பார்த்தீரா?' என்றழைத்துக் காட்ட, உடையவரும் *தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவந்தானே* என்னுமிப் பாசுரத்தை யநுஸந்தித்து அக்கீறலை மெய்யே பகவத் விக்ரஹமாக ப்ரதிபத்தி பண்ணித் தெண்டனிட்டாரென்கை.

(2) "கோயிலிலே சிலபிள்ளைகள் விளையாடுகிறவர்கள் திருவீதியிலேயிருந்து பெருமாளும் நாய்ச்சியாரும் பெரிய திருமண்டபமும் கற்பித்துப் பெருந் திருப்பாவாடையும் அமுது செய்வித்து 'எம்பெருமானுர்! ப்ரஸாதப்படும்' என்று மணலைக் கையாலே முகந்தெடுக்க, தத்காலத்திலே மாதுகரத்துக் கெழுந்தருளுகிற உடையவர், அவ்விடத்திலே அது கேட்டருளித் தெண்டனிட்டு அவர்களெடுத்த ப்ரஸாதத்தைப் பாத்ரத்திலே ஏற்ருர் என்று ஜீயர் அருளிச் செய்தார்."

(விவரணம்) நம்பெருமாள் ஸந்நிதியிலேநடக்கிற ரீதிகளை அப்படியே அபிநயித்துத் தெருப் புழுதியில் ஒருநாள் விளையாடிக் கொண்டிருந்த சிறு பிள்ளைகள் ஒரு கொட்டாங்குச்சியில் மண்ணை வாரி யெடுத்துக்கொண்டு ஸந்நிதியில் அருளிப்பாடு சொல்லுகிற க்ரமத்திலே சொல்லிக்கொண்டு வரும்போது "ஜீயோ!" என்று அருளிப்பாடு சொல்லிக் கூவ, அந்த ஸமயத்தில் யாத்ருச்சிகமாக பிக்ஷைக் கெழுந்தருளிக் கொண்டிருந்த எம்பெருமானுர் இவ் விளையாட்டொலியைக் கேட்டு மெய்யே ப்ரதிபத்தி பண்ணி 'நாயன்தே' என்று சொல்லிக் கொண்டே போய் அந்த மண்ணைச் சிக்கத்திலே ஏற்றுக்கொண்டாரென்கை.

(3) "எங்களாழ்வான் பாடே ஆயர் தேவு சென்று நாவற்பழம் வேண்ட, நீ யாரென்று அவர் கேட்க: ஜீயர் மகனுன ஆயர்தேவு என்ன; உம்முடைய பிள்ளை எங்களைக் குடியிருக்க வொட்டுகிறிலன் என்ருர்."

(விவரணம்) நஞ்ஜீயருடைய திருவாராதனப் பெருமாளுக்கு ஆயர்தேவு என்று திருநாமம்; அப்பெருமாள், திருக்குருகைப் பிரான் பிள்ளானுடைய திருவடியான எங்களாழ்வானுக்கு ஸ்வப்நத்திலே ஸேவை ஸாதித்து, தான் இன்னுரென்று தெரிவித்து நாவற்பழம் யாசிக்க, மறுநாள் எங்களாழ்வான் நஞ்சீயரைக் கண்டு 'உங்கள் பெருமான் நாவற்பழத்திற்காக என்னுயிரை வாங்குகின்ருனே!' என்று விநோதமாக ஸாதித்தாராம். கண்ணபிரானுன விபவத்தில் உகந்திருந்த நாவற்பழத்தை அர்ச்சையிலு முகந்தபடி சொல்லிற்றென்க. இத்தகைய ஐதிஹ்யங்கள் அர்ச்சாவதாரத்தில் நம் ஆசாரியர்களுக்கிருந்த ப்ரதிபத்தி விசேஷத்தையும். அர்ச்சாவதாரத்தின் ஸௌலப்யாதி குண பௌஷ்கல்யத்தையும் தெரிவிக்கத் தோன்றியவை.

ஆழ்வார்களுக்குள், அர்ச்சாவதாரத்தில் அளவு கடந்த ஈடுபாடுடையவர் திருமங்கையாழ்வார் இவர் அர்ச்சாவதாரத்தின் ஏற்றம் பற்றி யருளிச் செய்த பாசுரங்களில் முக்கியமானவை இரண்டு பாசுரங்களாம். (1) *அடியோமுக்கே எம்பெருமானல்லீரோ நீர் இந்தளூரீரே * (2) * பின்னுனார் வணங்குஞ் சோதி திருமூழிக்களத்தானுய்* என்பவை அப்பாசுரங்கள் இரண்டையும் சிறிது விவரிப்போமிங்கு.

திருமங்கையாழ்வார் திருவிந்தளூர்ப் பரிமள ரங்கநாதன் ஸந்நிதியிலே சென்று, திவ்ய மங்கள விக்ரஹ ஸேவையிலே தமக்குண்டான அளவு கடந்த அபிநிவேசத்தை வெளியிடு



கிருர். அர்ச்சாவதாரம் அர்ச்சக பராதீநாகிலாத்ம ஸ்திதியை யுடையதாகையாலே அர்ச்சகர்கள் திருவாராதனம் செய்து தலைக்கட்டித் திருக்காப்பு சாத்தி வெளியேறிய பின்பு இவ்வாழ்வார் இங்கு வந்து பகவானை நிர்ப்பந்திக்கிருர். எம்பெருமான் பலவாறு மறுமாற்ற முரைக்கின்ருன். ஆழ்வாரோ ஒன்றினுலும் ஸமாதானம் பெருதே மேன்மேலும் நிர்ப்பந்திக்கின்ருர். அப்போது எம்பெருமான் ஆழ்வாரை நோக்கி 'ஆழ்வீர்! ப்ரஹ்லாதாழ்வானைப் பற்றி உமக்குத் தெரியுமன்ருே!' என்ன; 'தெரியாமலென்ன? வெகு நன்ருகத் தெரியும்' என்று ஆழ்வார் கூற, நீர் தெரிந்து கொண்டிருக்கும் படியை நமக்கு விளக்கிச் சொல்லும்' என்று எம்பெருமானருளிச்செய்ய; *ஸர்வபூதாத்மகே தாத! ஜகந்நாதே ஜகந்மயே, பரமாத்மநி கோவிந்தே* என்ற ப்ரஹ்லாதாழ்வானுடைய உக்தியை யநுஸரித்து, **"தீயெம்பெருமான் நீரெம்பெருமான் திசையுமிருநிலனுமாய் எம்பெருமான்"** என்ருர். அதாவது, *நீர்வானம் மண்ணெரி காலாய் நின்ற நெடுமால் * என்கிறபடியே நாம் கண்ணுல் காண்கிற பொருள்களெல்லாம் எம்பெருமான் வடிவேயென்று கொண்டிருக்கை ப்ரஹ்லாதாழ்வான் படியாகையாலே அவனுடைய கொள்கையை எடுத்துக் கூறினுராயிற்று. இதுகேட்ட எம்பெருமான் 'ஆழ்வீர்! இப்படிப்பட்ட அத்யவஸாயம் உமக்கு முண்டாகையாலே நீரும் * நீர்வானம் மண்ணெரி கால் முதலான பதார்த்தங்களைக் கண்டு கொண்டு அதனுல் என்னைக் கண்டதாகவே யெண்ணி ஆறியிருக்கலாமே; ப்ரஹ்லாதாழ்வான் ஒரு கோவிலுக்குப் போய் எனக்கு ஸேவை ஸாதிக்க வேணுமென்று நிர்ப்பந்தித்ததுண்டோ? இல்லையே; **"अग्नौ तिष्ठति विप्राणाम् ...... सर्वत्र समदर्शिनाम्** – அக்நௌ திஷ்டதி விப்ராணும் ........ ஸர்வத்ர ஸமதர்சிநாம்" என்றதும் உமக்குத் தெரிந்ததே. ஆகையால் என்னை நீர் வடிம்பிட்டுக் கிடப்பது ஏன்? என்ன; அதற்கு உத்தரமருளிச் செய்கிருர் * தீயெம்பெருமான் நீரெம்பெருமான் திசையுமிரு நிலனுமாய், எம்பெருமானுகி நின்ருல் **அடியோம் காணுமால்** * என்று. ப்ரஹ்லாதாழ்வான் போல்வாருடைய கோஷ்டியில் சேர்ந்தவர்களல்லோம் நாம்; ஸாதாரண ரூபத்தைக் கண்டு த்ருப்தியடைகிறவர்கள் நாங்களல்லோம்; அஸாதாரண திவ்ய மங்கள விக்ரஹ வேஷத்தைக் கண்டு களிக்க ஆவல் கொண்டிருக்கிற அடியோங்களுக்கு ஜகத் ஸ்வரூபனுயிருக்குமிருப்பு என்ன த்ருப்தியளிக்கும்! தீ நீர் விண் முதலானவையெல்லாம் உன் வடிவேயென்று வேதாந்த ப்ரக்ரியையில் அநுஸந்தித்துக்கொள்வதில் யாதொரு ஆக்ஷேபமுமில்லை; அப்படி யநுஸந்திப்பதனுல் அவற்றில் உனது அஸாதாரணத் திருமேனியைக் காண்போமோ யாம்! காணமாட்டோம்; நாங்கள் கண்டு களிப்பதற்காகவே யன்ருே நீ அர்ச்சா ரூபத்தைப் பரிக்ரஹித் தெழுந்தருளி யிருப்பது என்ருர்.

இப்பாசுரத்தில் **"அடியோமுக்கே எம்பெருமானல்லீரோ நீர்"** என்றது மிகவும் ஸாரமான திருவாக்கு. பரவாஸுதேவனுயிருக்கு மிருப்பு நித்ய முக்தர்களின் அநுபவத்திற்காக; வியூஹ நிலை பிரமன் முதலானோருடைய கூக்குரல் கேட்கைக்காக. ராம கிருஷ்ணுதி விபவாவதாரங்கள் அக்காலத்திலிருந்தவர்கட்காயொழிந்தன. அந்தர்யாமியாய் இருக்குமிருப்பு ப்ரஹ்லாதாழ்வான் போல்வார்க்கும் (कर्मठ) கர்மடர்களுக்குமாகும். அர்ச்சாவதார நிலை யொன்றே அடியோங்களுக்கு ஜீவாது. ஸம்ஸாரிகளுக்கு முகங் கொடுக்கைக்காகவேயன்ருே அர்ச்சாவதாரமமைந்தது, குருடர்க்கென்று ஏற்பட்ட இடத்திலே விழி கண்ணர் புகுரலாமோ? விழி கண்ணர்க்கு ஏற்பட்ட இடம் குருடர்க்கு நிலமாமோ? திருவாய்மொழியில் (6—9—1) * நீராய் நிலனுய்த் தீயாய்க் காலாய் நெடுவானுய், சீரார்சுடர்களிரண்டாய் சிவனுயயனுனுய் * என்று ஜகத் ஸ்வரூபனுயிருக்கு

மிருப்பை முன்னம் அருளிச்செய்து, அதில் தமக்கு த்ருப்தியில்லாமையையும், அஸாதா ரண விக்ரஹ ஸேவையே வேண்டுமென்பதையும் "கூராராழி வெண்சங்கேந்திக், கொடியேன் பால் வாராய், ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே" என்ற பின்னடி களினால் வெளியிட்டருளினமையும் இங்கே அநுஸந்திக்கத்தக்கது. விச்வரூபங் கண்ட அர்ஜுநனும் இங்ஙனே பிரார்த்தித்தமை பகவத் கீதையில் காணத்தக்கது. அவன் அர்ச்சா ரூபத்தைக் காண விரும்பிற்றிலனாகிலும் அஸாதாரண ரூபத்தைக் காண விரும்பினமையுண்டே.

இனி, திருநெடுந்தாண்டகத்திலே ***பின்னானார் வணங்குஞ் சோதி திருமூழிக் களத்தானாய்*** என்றதை விவரிப்போம். அர்ச்சாவதாரத்திற்கு "**பின்னானார் வணங்கு மிடம்**" என்று ஒரு திருநாமமுண்டு. பரத்வத்திலும் வியூஹத்திலும் விபவங்களிலும் அந்தர்யாமித்வத்திலும் அந்வயிக்கப் பெறாதவர்கள் இங்குப் **பின்னானார்** எனப்படுகின் றனர். அன்னவர்கட்காக அர்ச்சாவதார நிலங்களிலே திருக்கோயில் கொண்டெழுந் தருளியிருக்குமவனே ! என்கை. இங்கே 'திருமூழிக்களமென்று ஒரு திருப்பதியை யெடுத்துக் காட்டினது உபலக்ஷணம். இத்தால் அர்ச்சாவதார ஸாமாந்யத்தைச் சொன்னபடி. பின்னானார் என்பதற்கு—ராமக்ருஷ்ணாதி விபவாவதாரங்களை யிழந்து பிற்பட்டவர்களென்று பொருள்.

அர்ச்சாவதாரத்திற்கு முக்கியமான ஏற்றமொன்றுண்டு; அதாவது எல்லா வகைக் குணங்களும் நிறைந்திருக்கப் பெறுகையாம். எம்பெருமானுடைய திருக்குணங்கள் ஆறு வகையாக வகுக்கப்படுகின்றன. (1) ஸ்வரூபநிரூபககுணங்கள். (2) நிரூபித ஸ்வரூபவிசேஷண குணங்கள். (3) திவ்யாத்ம ஸ்வரூபாச்ரித குணங்கள். (4) திவ்ய மங்கள விக்ரஹாச்ரித குணங்கள். (5) ஆச்ரயண ஸௌகர்யாபாதக குணங்கள். (6) ஆச்ரித கார்யாபாதக குணங்கள்—என்று, இவற்றுள் முடிவிலே சொன்ன இரு வகைக் குணங்கள் மிக முக்கியங்கள். உலகில் மஹா ப்ரபு ஒருவரிருக்கிறார் ; அவரைக் காணவேணுமென்பது முதன்மையான ஆசை; கண்டு அவரிடத்தில் சில கொள்ள வேணுமென்பது இரண்டாவதான ஆசை. காணவேணுமென்கிற ஆசை நிறைவேறு வதற்கே வழியில்லையாயின் இரண்டாவதாசை நிறைவேறுவதற்கு ப்ரஸக்தியே யிராது. ஒருவாறு காணப்பெற்றாலுங்கூட, காணப்பட்ட ப்ரபு சக்தியில் குறையுற்றவராகில் அவரிடம் காரியங்கொள்ள ப்ரஸக்தியே யிராது. ஆகவே, காணப் பெறுகைக்குரிய குணங்களும், கண்டு பேறுபெறுதற்குரிய குணங்களும் அமைந்திருந்தாலல்லது பய னில்லை யென்றதாயிற்று. இவ்வண்ணமாகவே எம்பெருமானை ஆச்ரயிக்கப் பெறவேணு மென்கிற ஆசையும், ஆச்ரயித்துச் சில விண்ணப்பங்கள் செய்து பேறு பெறவேணு மென்கிற ஆசையும் நம்போல்வார்க்கு உள்ளது. முதலாசை நிறைவேறுவதற்குரிய குணங்களுக்கு ஆச்ரயண ஸௌகர்யாபாதக குணங்களென்று பெயர் ; இரண்டாவ தாசை நிறைவேறுவதற்குரிய குணங்களுக்கு ஆச்ரித கார்யாபாதக குணங்களென்று பெயர். கண்டு பற்றுகைக் குறுப்பான ஸௌலப்யம், மேன்மைகண்டு, அகலாமைக் குறுப்பான ஸௌசீல்யம் முதலானவை ஆச்ரயண ஸௌகர்யாபாதக குணங்களெனப் படும். ஸர்வஜ்ஞத்வம், ஸர்வ சக்தத்வம், ஸ்வாமித்வம், பரிபூர்ணத்வம் ஆகிய இவை ஆச்ரித கார்யாபாதக குணங்களெனப்படும். ஆக இப்படிப்பட்ட ஸகல கல்யாண குணங்களும் அர்ச்சாவதாரத்திலே நிரம்பியிருக்கும். எம்பெருமானுடைய பரவ்யூஹாதி களான எந்த நிலையிலும் எல்லாக் குணங்களும் பூர்ணங்களாயிருக்க அர்ச்சாவதாரத் தில் ஏற்றமென்னென்னில் ; இதற்குப் பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்கிறார் காண்மின்— (ஸ்ரீவசநபூஷணே)



"ப்ரபத்திக்கு அபேக்ஷிதங்களான ஸௌலப்யாதிகள் இருட்டறையில்
விளக்குப்போலே ப்ரகாசிப்பதிங்கே." — என்று.

இவ்விடத்திற்கு மணவாளமாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீ ஸூக்திகள் வருமாறு ; "பரத்வத்தில் இக் குணங்களெல்லா முண்டாயிருக்கச் செய்தே பரம ஸாம்யாபந்நர்க்கு முகம் கொடுத்திருக்கிறவிடமாகையாலே பகல் விளக்குப் போலே ப்ரகாசமற்றிருக்கும் ; அர்ச்சாவதாரமான விடத்தில் தண்மைக்கு எல்லை நிலமான ஸம்ஸாரிகளுக்கு முகங் கொடுத்துக் கொண்டிருக்கையாலே அந்தகாரத்தில் தீபம்போலே அத்யுஜ்ஜ்வலமாய்த் தோற்றுமென்றபடி. விஷயமுள்ள விடத்தேயிறே குணங்கள் ப்ரகாசிப்பது ; அங்குள் ளாரும் சீலாதி குணாநுபவம் பண்ணுகைக்கு வருவது இங்கேயிறே" என்று.

விளக்கானது பகலிலுமுண்டு இரவிலுமுண்டு. பகலில் கேவலம் மங்கலார்த்தமே யொழிய இரவிற்போல் ஜ்வலிக்கமாட்டாது. ஜ்வலிக்கவேணுமானால் இருள் அபேக்ஷித மாகும். அதுபோலவே எம்பெருமானுடைய திருக்குணங்கள் மிக விளங்கவேணு மானால் இருள் தருமாறாலம் இன்றியமையாததாயிருக்கும். தயை, வாத்ஸல்யம், க்ஷமை ஸௌசீல்யம் முதலான குணங்களில் எந்த குணமாவது திருநாட்டில்பிரகாசிக்க முடியுமாவென்று பாருங்கள். தயையாவது என்ன ? பரதுःக்க துःக்கித்வமோ, பர துःக்க நிராசிகீர்ஷையோ ஏதாவது ஆகுக: துக்கமுள்ளவர்களிடத்தில் தான் தயை காட்டமுடியும். திருநாட்டில் துக்கமேது ? துக்கிதர்களேது ? இல்லையாதலால் தயைக்கு விஷயமில்லை. இனி வாத்ஸல்யத்தை யெடுத்துக்கொள்ளுவோம். வாத்ஸல்ய மாவது தோஷ போக்யத்வமோ தோஷாதர்சித்வமோ ஏதேனுமாகுக, தோஷமுள்ளவர் களிடத்தில் தான் வாத்ஸல்யம் காட்டமுடியும். திருநாட்டில் தோஷமேது ? துஷ்டர் களேது. இல்லையாதலால் வாத்ஸல்யத்திற்கு விஷயமில்லை. இனி க்ஷமையை எடுத் துக் கொள்வோம். க்ஷமையாவது பொறுமை. குற்றஞ்செய்தவர்களிடத்திலன்றோ பொறுமைக்கு உபயோகம். இதற்கும் அங்கு விஷயமில்லை. இப்படி ஒவ்வொரு குண மாக எடுத்துப்பார்த்தால் ஸ்வாமித்வம் ஒன்று தவிர மற்று எந்த குணமும் அங்கு ஓங்குவதற்கில்லை என்று முடிவாகும். அக்குணங்களெல்லாம் இருட்டறையில் விளக் குப்போலே பிரகாசிப்பது இங்கே யென்னத் தட்டில்லை.

ஸர்வேச்வரன் அவாப்த ஸமஸ்த காமனென்று ப்ரஸித்தன். அபேக்ஷிதங்களெல் லாம் இயற்கையாகவே நிறைவேறி யிருக்கப்பெற்றவனென்றபடி. இப்படியிருக்கு மிருப்பு தவிர்ந்து, ஸம்ஸாரிகள் என்ன இடுகிறார்களோ அதைக்கொண்டு தன் வயிறு நிறைய வேண்டும்படி அபேக்ஷையோடே கூடினவனாய், தன்னுடைய ஸ்வரூபம் ஸ்திதி முதலான எல்லாவற்றையும் அர்ச்சகாதிகளுக்குப் பராதீனமாக்கி அவர்களிட்டது சட்டமாயிருப்பவனாய், தான் இப்படி எளியனாய் வந்து நின்றால் இந்த ஸௌலப்யத் திலே யீடுபட்டு மேல் விழவேண்டியிருக்க அது செய்யாமல் அந்த ஸௌலப்யமே காரணமாக ஸம்ஸாரிகள் உபேக்ஷித்தால் அந்த உபேக்ஷையைப் பொருள்படுத்தாத வனாய் அந்த ஸம்ஸாரிகளைத் தான் விடமாட்டாதவனாய், அவ்வளவேயுமல்லாமல் அவர் களை யொழியச் செல்லாமை தோற்றும்படி நிற்கிறவிடம் அர்ச்சாவதாரம்-என்று இதன் பெருமையிலே நம் ஆழ்வாராசாரியர்கள் மிகவீடுபட்டிருப்பர்கள்.

பரத்வம் முதலான நான்கு நிலைகளினால் நமக்குப் பயனொன்றுமில்லை யென்பதை யும், அர்ச்சாவதாரத்தினால்தான் பலனுண்டென்பதையும் நல்ல த்ருஷ்டாந்த முகத்தாலே எடுத்துக் காட்டுகிறார்கள் நம் ஆசாரியர்கள். எங்ஙனே யென்னில்; ஒருவன் அப்போதே தண்ணீரைப் பருகி விடாயைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்படி மிகவும் தாஹித்திருக் கிறான்; அவனுக்குக் கையிலே தண்ணீரைக் கொடாமல் பூமியைக் காட்டி 'இதனுள்ளே

தண்ணீர் இருக்கிறது' என்று சொன்னால் என்ன பயன்? பூமியினுள்ளே தண்ணீரிருப்பது உண்மையே. கொட்டும் குந்தாலியுங்கொண்டு கல்லினாலல்லது குடிக்கக்கிடையாதபடி பூமிக்குள்ளே புதிந்து கிடக்கும் அந்த நீரினால் பயனென்னே! இதுபோலே அப்போதே கண்டு பற்றவேணுமென்று ஆசைப்பட்டமுமுக்ஷுக்களுக்கு அந்தர்யாமி பகவானால் ஒரு பயனுமில்லையாகும். (2) அண்டத்தின் வெளியே ஆவரணஜலம் பெருகிக் கிடக்கின்றதென்று சாஸ்த்ரங்களாலறிகிறோம். ஆனால் அந்தநீர் இப்போது தாஹித்தவனுக்குப் பயன்படாதன்றோ. அதுபோல பரமபதநிலயனாயிருக்கு மிருப்பும் இப்போது ஸேவிக்க விருப்பமுடையார்க்குப் பயன்படாது. (3) ஆவரணஜலம் போலன்றிக்கே பாற்கடல் அண்டத்துக்கு உட்பட்டேயிருக்கிறது. ஆனாலும் கிட்டவரிதானவது தாஹித்தவர்களுக்குப் பயனற்றதேயாம்; அதுபோல வியூஹமும் ஆர்த்தர்களான முமுக்ஷுக்களுக்குப் பயனற்றதேயாம் (4) என்றைக்கோ ப்ரவஹித்தொழிந்த பெருக்காறுகளாலே இப்போது தாஹித்தவனுக்குப் பயனில்லாதாப்போலே ராமக்ருஷ்ணாதி விபவங்களும் இப்போது காணவிரும்புவார்க்குப் பயன்படாதவையே. (5) அப்போதே விடாய்தீரப் பருகலாம்படி தேங்கியிருக்கிற வாபீ கூப தடாகாதிகளே பயன்படுவது போல கோயில்களிலும் க்ருஹங்களிலும் கண்ணுக்கிலக்காகி நிற்கிற அர்ச்சாவதாரமே பயன்படுவதாம்.

இன்னமும் இவ்வர்ச்சாவதாரத்தின் பெருமை கேளீர்;—ஹிதங்களைத் தெரிவிக்கத் தோன்றிய ச்ருதிகள் ஸ்மிருதிகள் முதலான சாஸ்த்ரங்களானவை விஷயாந்தரங்களிலே அருசி பிறக்கும்படி அவற்றின் கெடுதல்களையும், பகவத் விஷயத்தில் ருசி பிறக்கும்படி அதன் நலங்களையும் குறித்து எவ்வளவோ உபதேசங்கள் செய்திருந்தாலும் அவற்றாலே விஷயாந்தரங்களை விட்டு பகவத் விஷயத்தைப் பற்ற முடியாமல் துர்வாஸநாபலத்தாலே விஷயாந்தரங்களிலே அளவற்ற அபிநிவேசத்தை வைத்து, பகவத் விஷயமென்றால் கண்ணெடுத்தும் பார்க்க இசையாதிருக்கிற ஸம்ஸாரிகள் திருந்துவதற்கு இவ்வர்ச்சாவதாரமே முக்கியமாக உபயோகப்படுகின்றது. இவ்விஷயத்தைத் தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலையில் * சூதனாய்க்கள்வனாகித் தூர்த்தரோடிசைந்த காலம், மாதரார் கயற்கணென்னும் வலையுள்பட்டழுந்துவேனை, போதரேயென்று சொல்லிப் புந்தியிற் புகுந்து தன்பால் ஆதரம் பெருக வைத்தவழகன் * என்கிற பாசுரத்தில் ஸ்வாநுபவவிஜ்ஞாபந வியாஜத்தினால் வெளியிட்டருளினார். பகவத் ஸந்நிதிகளுக்கு வருபவர்கள் யாவரும் பக்தியினால் [அதாவது பகவத் ஸேவையில் ருசியாலே] வருகிறார்களென்பதில்லை. பல ஆசைகளை உட்கொண்டு வருகிறார்கள். அவ்வாசைகளில் ஸ்த்ரீசாபல்யமுமொன்றாகும். சிலர், தாமுகந்த வேசிகள் கோவிலுக்குப் போயிருப்பதாகவறிந்து அவர்களைக் காணவேண்டிக் கோயிலுக்கு வந்தால் அப்படிப்பட்டவர்களையும் அர்ச்சாவதாரப்பெருமான் தன்னழகிலே யீடுபடும்படி செய்து அகப்படுத்திக் கொள்ளுவனும். இதைப் பிள்ளைலோகாசார்யர் ஸ்ரீவசந பூஷணத்தில் (40) "இதுதான் சாஸ்த்ரங்களால் திருத்தவொண்ணாதே விஷயாந்தரங்களிலே மண்டி விமுகராய்ப்போருமவர்களுக்கு வைமுக்யத்தை மாற்றி ருசியை விளைக்கக் கடவதாய், ருசி பிறந்தால் உபாயமாய், உபாயபரிக்ரஹம் பண்ணினால் போக்யமுமாயிருக்கும்" என்கிற சூர்ணையினால் வெகு அற்புதமாக அருளிச் செய்தார்.

இப்படிப்பட்ட அர்ச்சாவதாரத்தின் வைபவம் அப்ரமேயமாயிருக்கும். ஸர்வஸ்வாமியான எம்பெருமான் தன்னுடைய ஸ்வாமித்வத்தை விட்டு நம்முடைய ஸொத்துக்களிலே தானும் ஒரு ஸொத்து என்னலாம்படி யிருந்துகொண்டு, தன்னுடைய ஸர்வஜ்ஞத்வத்தையும் ஸர்வ வித சக்தி பௌஷ்கல்யத்தையும் நிரங்குச ஸ்வாதந்த்ரியத்தையும் மறைத்துக்கொண்டு, தன்காரியமும் பிறர்காரியமும் அறியமாட்டாத அஜ்ஞரைப்போலேயும், தன்னைத்தான் ரக்ஷிக்கமாட்டாத அசக்தரைப்போலேயும், தனக்கென்னவொரு ப்ரபுத்வமில்லாத அஸ்வதந்த்ரரைப் போலேயுமிருக்கச் செய்தேயும், விமுகர்களையுங் கூட விடமாட்டாதபடி கரைபுரண்டு செல்லுகிற காருண்யத்திற்குக் கட்டுப்பட்டவனாகி, கண் கொடுத்தல், மக்கள் கொடுத்தல் முதற்கொண்டு மோக்ஷமளிப்பது ஈறுக சேதநர்களின் ஸகலாபேக்ஷிதங்களையும் யதாதிகாரம் கொடுத்தருள்வன். ... ... ...

***ஸ்ரீகாஞ்சீ. அண்ணங்கராசாரியர் எழுதிய அர்ச்சாவதார வைபவம் முற்றிற்று.***

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

# ஸ்ரீ மஹாவிஷ்ணு ஸாம்ராஜ்யம்.

हरेर्हरस्यचाद्वैत निकर्षोत्कर्षवादिनाम् ।
मनः प्रसादनायैतत्साम्राज्य मवतार्यते ॥

— ஸ்ரீகாஞ்சீ, பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர். —

**பொதுமக்களுக்கும் ஸ்ரீ மஹாவிஷ்ணு பக்தர்களுக்கும் நல்ல தெளிவு ஏற்படும்படியாக இதன் கீழ் நாம் பன்னிரண்டு விஷயங்களை விவரிக்கிறோம்.**

## (1. சிவபெருமானுக்கு ஸ்ரீ மஹாவிஷ்ணுவிடத்திலுள்ள பக்தி.)

ஸ்ரீ மஹாவிஷ்ணுவினிடத்திலே சிவபெருமான் எப்படிப்பட்ட ப்ரதிபத்தியையுடையவர் என்பதை முன்னம் தெளிந்து கொள்ளவேண்டும். இதற்குப் பல வழிகளுண்டு, எல்லாருமறிந்த ஒரு வழியை முன்னம் நினைப்பூட்டுவோம். ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் '*பார்வத்யுவாச*' என்று பார்வதியின் கேள்வியாக ஒரு ச்லோகமும், 'ஈச்வர உவாச' என்று பரமசிவனுடைய பதில் வார்த்தையாக வொரு ச்லோகமும் உலகமெல்லாம் சொல்லி வருவது அபலபிக்க முடியாதது. பார்வதியின் கேள்வியென்னவென்றால், "கேநோபாயேந லகுநா விஷ்ணோர் நாமஸஹஸ்ரகம், பட்யதே பண்டிதைர் நித்யம் ச்ரோது மிச்சாம்யஹம் ப்ரபோ! — சிறியதொருபாயத்தாலே விஷ்ணுவின் ஆயிரந் திருநாமங்களையும் சொன்னதாக ஆவதற்கு வழியுண்டோ?" என்று கேட்டாள் பார்வதி. அதற்குப் பரமசிவன் "ஸ்ரீராமராம ராமேதி ரமே ராமே மநோரமே, ஸஹஸ்ரநாமதத்துல்யம் ராமநாம வராநநே." என்று பதில் சொன்னதாகவுள்ளது, ராமநாமத்தைச் சொன்னால் ஸஹஸ்ரநாமஞ் சொன்னதாக ஆய்விடுமென்றும், நானும் அந்த ராமநாம ஸங்கீர்த்தனத்தில்தான் ரமித்திருக்கிறேனென்றும் சிவபெருமானுடைய பதில்வார்த்தை. 'பார்வதீ! என் பேரைச் சொன்னால் ஸஹஸ்ரநாமம் சொன்னதாக ஆய்விடும்' என்று சிவபெருமான் சொல்லவில்லை. அப்படிச் சொன்னால் பரதேவதாத்ரோஹ பாதகம் தனக்கு ஏற்படுமென்று அஞ்சியே அவர் அப்படிச் சொல்லவில்லை. உலகில் அவரவர்கள் தம் தம் மனைவிகளிடத்தில் தங்கள் பெருமைகளைப் பேசிக் கொள்வதுண்டு; அப்படி இவரும் பேசுவரோ வென்று பரீக்ஷிப்பதற்காகவே பார்வதி தன் பர்த்தாவை நோக்கி இக்கேள்வி கேட்டது. அந்தப் பரீக்ஷையில் பரமசிவன் ஏமாந்துபோகாமல்—தனக்கில்லாத பெருமையைத் தான் பேசிக்கொள்ள முன்வரமாட்டாமல் உண்மையான விடையை விடுத்தார்.

## (2. ஸ்ரீராமனும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவும்)

அந்த ஸ்ரீராமன் யாவனென்று தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமல்லவா? இவ்வுண்மையைத் தெரிவிப்பதில் ஸ்ரீராமாயணமே ஸமர்த்தமானது. அதில் பல பல ச்லோகங்களிருந்தாலும் இங்கு நாம் சிற்சில ச்லோகங்களையே உதாஹரிக்க விரும்புகிறோம். அதில் அயோத்யா காண்டத்தின் உபக்ரமத்தில் " ஸ ஹி தேவை ருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபி:, அர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸநாதன: ". என்று, ஸ்ரீ மஹாவிஷ்ணுவே ஸ்ரீராமனாயவதரித்ததாக ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்பட்டது. ஆரம்பத்தில் "ஏதஸ்மிந்நந்தரே விஷ்ணுருபயாதோ மஹாத்யுதி:" என்றதும், ராவண வதத்திற்குப் பிறகு தேவதைகளெல்லாரும் திரண்டு வந்து "பவாந் நாராயணோ தேவ:" என்றதும் காண்க. அந்த தேவதா ஸமூஹத்தில் முக்கண்ணப்பனும் சேர்ந்திருந்ததை வான்மீகி முனிவர் "ஷடர்த்த நயன: ஸ்ரீமாந்" என்று கண்ணையிட்டுக் காட்டிவைத்தார். இது தவிர முக்கியமாக நோக்கத்தக்கதொன்றுண்டு. லங்காபுரியில் ராவணாதிகளுக்கு முன்பு குடி வாழ்ந்த மாலி சுமாலி மால்யவான்களை வதைக்க வழி தேடின தேவர்கள் முதலில் சிவபெருமானைச் சரணமடைந்து வேண்டிக் கொண்டதாகவும் அப் பெருமான் 'இது என்னாலாவதன்று; சங்க சக்ர கதாபாணியான ஸ்ரீமந் நாராயணனே இவர்களை வதைக்க வல்லவன்' என்று சொன்னதாகவும், பிறகு அவர்கள் ஸ்ரீமந் நாராயணனை அடைந்து வேண்டி அபயம் பெற்றதாகவும் உத்தர ஸ்ரீ ராமாயணத்தில் ஆறாவது ஸர்க்கத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இப்படியுள்ள பல இதிஹாஸங்களினால் சிவபெருமான் விஷ்ணு பகவானைப் பரதேவதையாகக் கொண்டிருந்தபடியால்தான் அந்த விஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீ ராமனிடத்திலேயே தான் ரமிப்பதாகவும் தன் தேவிக்கும் அதை உபதேசிப்பதாகவும் அமைந்திருக்கின்றது.

## (3. ராமேச்வரம் என்பதற்குச் சொல்லும் ஸமாஸங்கள்.)

ராமேச்வரம் என்கிற வொரு சொல்லுக்கு தத்புருஷஸமாஸம், பஹுவ்ரீஹி ஸமாஸம், கர்மதாரய ஸமாஸம், த்வந்த்வஸமாஸம் என்று நான்கு வகைப்பட்ட ஸமாஸங்கள் சொல்ல சாஸ்த்ரம் இடம் தருகின்றது. (1) ராமஸ்ய ஈச்வர: = ராமேச்வர:; இது தத்புருஷ ஸமாஸம். ராமனுக்குத் தலைவன் என்றபடி. (2) ராம: ஈச்வர: யஸ்ய ஸ: = இது பஹுவ்ரீஹி ஸமாஸம். ராமனைத் தலைவராகக் கொண்டவர் என்றபடி. (3) ராமச்சாஸௌ ஈச்வரச்ச; இது கர்மதாரய ஸமாஸம். ராமனாகிய தலைவன் என்றபடி. (4) இனி த்வந்த்வ ஸமாஸமாவது, रामश्च ईश्वरश्च तयोस्समाहारः-रामेश्वरम् என்பது, த்வந்த்வஸமாஸம் கொண்டால் 'ராமலக்ஷ்மணௌ' என்பதுபோல 'ராமேச்வரௌ' என்று த்விவசநாந்தமாக ஆகவேண்டாவோ வென்று சங்கிக்க வேண்டா. 'सर्वो द्वन्द्वो विभाषयैकवद्भवति' என்பது வையாகரண பரிபாஷையாதலால் ஏகவசநாந்தமாகவும் நிற்பது பொருந்தும். ஆகவே இங்கு த்வந்த்வஸமாஸமும் இஸாங்கும், ராமனும் ஈச்வரனுமென்று இந்த ஸமாஸத்தின்படி பொருளாகும். இதன்மேல் ஒரு ஆராய்ச்சி அவசியமாகிறது.

*ராமேச்வரம்* என்பது ஊருக்குப் பெயரா? தெய்வத்திற்குப் பெயரா? என்று விமர்சிக்கவேண்டும். இரண்டு விதமாகவும் வைத்துக்கொண்டு சொல்லுகிறோம்,



ஊருக்குப் பெயரானால் ஸ்ரீராமனைத் தலைவனாகக் கொண்டவூர் என்கிற வொரு பொருள்தான் பொருந்தும். சிவபிரான் சொன்னதாகத் தெரிவிக்கப்படுகிற பஹுவ்ரீஹிஸமாஸந்தான் பொருத்தமானதென்று தேறும். தத்புருஷஸமாஸங்கொண்டால் ராமனுடைய ஐச்வர்யம் விளங்குமூர் என்பதுதான் ஒருவாறு தேறும். கர்மதாரயஸமாஸம் பொருந்துவதற்கு வழியே கிடையாது. இனி, ராமேச்வரமென்பதை, தெய்வத்திற்குப் பெயராக வைத்துப் பார்ப்போம். ஸ்ரீ ராமனுக்கு ஈச்வரனாக ஒரு தெய்வத்தைச் சொல்லவேணுமானால் அந்த தெய்வம் ஸ்ரீரங்கநாத மூர்த்தியேயல்லது மற்றொன்று எடுத்துக் கழிக்கவும் தகுதியில்லை. ஸ்ரீராமன் * **ஆத்மாநம் மாநுஷம் மந்யே** * என்ற தனது மநுஷ்ய பாவனைக்குச் சேர ஸ்ரீரங்கநாத திவ்யமூர்த்தியைத் தனது குலபரம்பரை ஆராதித்து வந்த காரணத்தினால் தானும் ஆராதித்து வந்ததாகப் புராணப்ரஸித்தியுள்ளது. ஸ்ரீராமாயணத்திலும் பட்டாபிஷேக ஸந்தர்ப்பத்திலுள்ள * **லப்த்வா குலதநம் ராஜா** * என்ற சுலோகத்தின் வியாக்யானத்தில் இதை முன்னோர்கள் விளக்கியுமுள்ளார்கள். மற்றும் பூர்வாசாரியர்களும் இதை வெளியிட்டுள்ளார்கள். ஆகவே ஸ்ரீராமனுக்கு ஈச்வரன் என்று தத்புருஷஸமாஸம் கொள்வதானால் ஸ்ரீரங்கநாதன் தவிர மற்றொரு தெய்வமும் தலைகாட்ட ப்ரஸக்தியில்லை. ஸர்வநியந்தாவாய் ஸர்வேச்வரனென்று ஸகல வேதங்களாலும் போற்றப்பட்ட ஸ்ரீமந் நாராயணன் தன்னுடைய நியாம்யர்களிலே சிலரைத் தனக்கு ஈச்வரனாகக் கொண்டானென்று நெஞ்சாலெண்ணுவதும் அபசாரமாகும். அவதார விசேஷங்களிலே * ஸுக்ரீவம் நர்தமிச்சதி * ஸுக்ரீவம் சரணம் கத: * இத்யாதிகளைக்கொண்டு யதேச்ச பாஷணம் செய்யவொண்ணாது.

பரமசிவனார் பஹுவ்ரீஹிஸமாஸம் சொன்னாரென்பது உண்மையில் மிகவும் பொருத்தமானது. அவர் ஸ்ரீராமனைத் தலைவராகக் கொண்டிருந்தவரென்பது யாராலும் அபலபிக்க முடியாதபடி பஹுப்ரமாண ஸித்தமாயிருப்பதனால் ஸர்வஜ்ஞரென்று பேர்பெற்ற அவர் சொன்னதுதான் பொருத்தமாயிருக்கத் தக்கது. சிவபெருமான் திருவேங்கடமலையில் நாராயணமூர்த்தியைத் தொழுவதற்கு வந்ததைத் தெரிவிக்கின்ற நம்மாழ்வார் திருவாய்மொழியில் (6—10—8) *நுண்ணுணர்வின் நீலார்கண்டத்தம்மான்* என்று 'ஸூக்ஷ்ம ஜ்ஞான நிதியான நீலகண்டபகவான்' என்று கொண்டாடிக் கூறுகின்றார். ஸர்வஜ்ஞரென்று அவர்க்கு இயற்பெயராயுமுள்ளது. அப்படிப்பட்ட அவர் உள்ளபடி பொருத்தமாகச் சொன்ன பஹுவ்ரீஹி ஸமாஸத்தில் ஒரு விதமான அநுபபத்தியும் சொல்ல முடியாதாகையாலே அதுதான் ஸித்தாந்தப் பொருளாகத் தக்கது.

இனி கர்மதாரய ஸமாஸத்திற் செல்வோம், கீழ் இரண்டு மூர்த்திகள் தெரிவித்ததாகச் சொல்லப்பட்ட இருவகை ஸமாஸங்களிலும் ஈச்வரனென்ற சொல்லுக்கு என்ன பொருள் கொள்ளப்பட்டதென்பதை விவேவிகள் சற்று ஆராயவேணும். அவ்விரண்டு ஸமாஸங்களிலும் ஈச்வர சப்தத்திற்குச் சிவனென்கிற பொருள் கொள்ளப்படவில்லையென்பது வெளிப்படை. ஸ்ரீராமனுக்குத் தலைவன் என்றும், ஸ்ரீராமனைத் தலைவனாகவுடையவன் என்றுமன்றோ பொருள் விவரிக்கப்பட்டது. ஆகவே ஈச்வர: என்ற சொல்லுக்குப் பொதுவாக ப்ரபுவென்கிற பொருளே கொள்ளப்பட்டிருக்கின்றதென்பது வ்யக்தம். இப்போது கர்மதாரய ஸமாஸத்திலும் அப்பொருளையேதான் கொள்வதற்கு ஔசித்யமுள்ளது. " ராமச்சாஸௌ ஈச்வரச்ச ராமேச்வர:" என்பது கர்மதாரயஸமாஸமென்று விளக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஸமாஸந்தான் த்ருப்திகரமாக முடிந்த

தென்றும் தெரிவிக்கப்படுவதால் உண்மையில் இந்த ஸமாஸத்தினால் ஏற்படுகிற பொருள்தான் ஸகல ப்ரமாணங்களுக்கும் ஸகல ப்ராமாணிகர்களுக்கும் த்ருப்திகரமாகும். விக்ரமாதித்யராஜ: என்றால் விக்ரமாதித்யனாகிற அரசன் என்று பொருள்பட்டு விக்ரமாதித்யனே அர்சன் என்று தானே தேறும். அதுபோலவே இங்கும் ஸ்ரீராமனே தலைவன் என்னும் பொருள் தவிர வேறொரு பொருள் தோன்றுவதற்கு இடமே கிடையாது. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் *விச்வயோநி: புநர்வஸு: *என்கிற திருநாமத்திற்கு பாஷ்யம் செய்த சங்கர பகவத் பாதாள், "विश्वं योनिर्यस्य ; विश्वश्चासौ योनिश्चेति वा विश्वयोनिः" என்று பஹுவ்ரீஹியும் கர்மதாரயமுமாகிற இரு ஸமாஸமும் காட்டியுள்ளார். அர்த்தத்தில் சிறிதும் வைபரீத்யமில்லை. இங்கும் அப்படியே வைபரீத்யமில்லாத பொருளே தேறி நிற்கும். ஸ்ரீராமனே தலைவன் என்பதுதான் அப்பொருள்.

## (4. ஸ்ரீமஹாவிஷ்ணுவே பரமஸாத்விக மூர்த்தி)

"நாராயணன் கறுப்பாகையாலும் தூங்குகிறவனாகையாலும் அவனுக்குத் தமோ குணமேயுள்ளது ; அவன் தாமஸ தேவதை " என்கிற பேச்சு ஆதி சங்கராசார்ய பகவத் பாதாளுடைய ஹ்ருதயத்தை மிகவும் புண்படுத்துவதாகும். ஏனென்னில், விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் "ஸத்வவாந் ஸாத்விகஸ் ஸத்ய:"என்ற விடத்தில் "सत्वे गुणे प्राधान्येन स्थित इति सात्विकः —ஸத்வ குணத்திலேயே ஊன்றியிருப்பவராகையாலே ஸாத்விகர்" என்று பாஷ்யம் செய்திருப்பது குன்றிலிட்ட விளக்காக விளங்குகின்றது. அப்பெரியார் ஸாத்விக தேவதையென்று நிர்ணயித்த பரதேவதையை மாறுபாடாகச் சொல்லி நிந்திப்பதனால் யாதொரு ஹானியுமில்லை. ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு ஆளவந்தாரென்கிற ஆசார்ய ஸார்வபௌமர் "பரமஸத்வ ஸமாச்ரய: க:" என்று கேள்வி கேட்டு வைத்திருக்கிறார். அதற்கு இன்றுவரை ஒரு மதாந்தரஸ்தரும் வேறான பதில் சொல்ல முன் வந்ததில்லை. நாராயணனே பரம ஸாத்விக தேவதை யென்றும் மற்ற இரு தெய்வங்கள் ராஜஸதாமஸ தேவதைகளென்றும் ஆயிரக்கணக்கான பிரமாணங்கள் அறைகின்றன. இவ்விஷயத்தில் பூருவர்கள் எடுத்துக்காட்டியுள்ள பிரமாணங்கள் நூற்றுக்கணக்கானவை; அவற்றுள் ஒன்றிரண்டு மட்டும் இங்குக் காட்டுவோம். மைத்ராயணீயோபநிஷத்தில்

अथ यो ह खलु वा अस्य राजसोंशस्सोऽसौ ब्रह्मचारिणो योऽयं ब्रह्मा, अथ यो ह खलु वा अस्य सात्विकोंशस्सोऽसौ ब्रह्मचारिणो योऽयं विष्णुः, अथ यो ह खलु वा अस्य तामसोंशस्सो ब्रह्मचारिणो योऽयं रुद्रः

என்று ஸ்பஷ்டமாக ஓதப்பட்டது. பிரமன் ராஜஸ தேவதை; விஷ்ணு ஸாத்விக தேவதை, ருத்ரன் தாமஸ தேவதை என்று சொல்லிற்று. வராஹ புராணத்தில் அகஸ்த்ய ருத்ர ஸம்வாதத்தில் * *யத் ஸத்வம் ஸ ஹரிர் தேவ :* * என்று தொடங்கி ருத்ரன் தன் வாக்கினாலேயே நாராயணனை ஸாத்விகனாகவும், நான்முகனை ராஜஸனாகவும் தன்னைத் தாமஸனாகவும் தெரிவித்திருப்பது காணலாம். அங்கு



यद्वेदबाह्यं कर्म स्यात् मामुद्दिश्योपसेव्यते । तद्रौद्रमिति विख्यातं ... केवलं तामसं तु यत् । तत् दुर्गतिप्रदं नृणामिहलोके परत्र च ।* என்று நிஸ்ஸங்கோசமாக விவரித்திருப்பதையும் காண்க

புராணங்களை ஸாத்விகம் தாமஸம் என்று மூன்று விபாகமாக்கி *அக்நேச் சிவஸ்ய மாஹாத்மியம் தாமஸேஷு ப்ரகீர்த்திதம்* என்றும் * ராஜஸேஷு ச மாஹாத்மியம் அதிகம் ப்ரஹ்மணோ விது : * என்றும் * ஸாத்விகேஷ்வத கல்பேஷு மாஹாத்ம்யமதிகம் ஹரே:, தேஷ்வேவ யோகஸம்ஸித்தா கமிஷ்யந்தி பராம் கதிம் * என்றும் ஆழ்வார்களோ ஸ்ரீ வைஷ்ணவாசார்யர்களோ எழுதிவைக்கவில்லை. மத்யஸ்தர்களான மஹர்ஷிகளேயன்றோ எழுதி வைத்திருப்பது. தன்னுடைய ஸம்பந்தத்தினால் புராணத்தையே தாமஸமாக்கி விடுகிற ஒரு தேவதையை ஸாத்விக தேவதையென்று வாய் கூசாமல் சொல்லுவதுதான் வியப்பு.

நாராயணன் கறுப்பாகையாலேயென்றும் உறங்குகிறபடியாலேயென்றும் சொல்லுகிற வார்த்தைகளும் பொருத்தமற்றவை. நாராயணன் ஒவ்வொரு யுகத்தில் ஒவ்வொரு நிறத்தை ஏற்றுக்கொள்கிறார். திருமழிசையாழ்வார் * பாலின் நீர்மை செம்பொன் நீர்மை* என்று தொடங்கியும், திருமங்கையாழ்வார்* முன்னைவண்ணம் பாலின் வண்ணம்* என்று தொடங்கியும் கூறியுள்ள பாசுரங்களைக் காண்பது. திருமால் கருந்தெய்வமேயென்றே கொள்வோம். அது தேஹ குணம். ஸத்வமென்பது ஆத்ம குணம். உலகில் கறுப்பாயிருப்பவர்கள் ஸாத்விகர்களாயிருப்பதில்லை யென்றும், எரிவண்ணத்தவர்களே ஸாத்விகர்களா 'யிருப்பர்களென்றும் கண்டிருக்கிறார்கள் போலும். "நாராயணன் ரக்ஷணத் தொழிலை நடத்துகையாலே ஸாத்விக தேவதை; சிவன் ஸம்ஹாரத் தொழில் நடத்துகையாலே தாமஸ தேவதை" என்று தாங்களே பேசி யிருப்பது ஸத்வம் தலையெடுத்துச் சொன்ன வார்த்தை. உடனே அவ்வுண்மையை மாற்றி வேறாகச் சொன்னது குணாந்தரம் தலையெடுத்ததனாலாயது—என்று ஒவ்வொருவரும் நிச்சயிக்கத் தட்டில்லை. நாராயணன் ஸாத்விக தேவதையல்லவென்றோ தாமஸ தேவதை யென்றோ யாரேனுமொரு மஹர்ஷியின் வாக்கில் வந்திருப்பதுண்டோ? ஆதி சங்கர பகவத் பாதாளாவது ஒரு மூலையிலாவது சொல்லியிருப்பதுண்டோ? அன்று தொட்டு இன்றறுதியாக "நாராயணஸ்ம்ருதி:" என்பதையே தங்களுக்கு ஹஸ்தாக்ஷரமாக வைத்துக்கொண்டும், யார் நமஸ்கரித்தாலும் 'நாராயண, நாராயண' என்று சொல்லுவதையே வழக்கமாக வைத்துக்கொண்டுமிருக்கிற பெரியார்கள் நாராயணனைத் தாமஸ தேவதையென்று ஹ்ருதய பூர்வமாகச் சொல்லார்கள். நாராயணன் உறங்குகிறானென்று யாரும் சொல்லியிருக்கவில்லை. *உறங்குவான்போல் யோகு செய்த பெருமான்* என்றும், *வெள்ளை வெள்ளத்தின் மேலொரு பாம்பை மெத்தையாகவிரித்து அதன் மேலே கள்ள நித்திரை கொள்கின்ற* என்றும் *பாற்கடல் யோக நித்திரை சிந்தை செய்த வெந்தாய்* என்றுமே ஆழ்வார்கள் கூறியிருப்பது. ஸம்ஸ்க்ருத க்ரந்த கர்த்தாக்களும் "**விச்வத்ராண விமர்சந ஸ்கலிதயா நித்ராஸி ஜாகர்யயா**" என்றே கூறியுள்ளார்கள்.

## (5. வேதமும் விஷ்ணுவும்.)

இதிஹாஸ புராணங்களில் கதைகள் கிடக்கட்டும். வேதத்தில் விஷ்ணுவைப் பற்றின மதிப்பு எப்படிப்பட்டதென்பதை வைதிகர்கள் உள்ளபடி தெரிந்துகொள்ள

வேண்டும். "வேதமும் விஷ்ணுவும்" என மகுடம் கொடுத்து இப்போது நாம் எழுதும் இந்த விஷயம் மிகவும் அபூர்வமானது. வேதத்தில் ஆழ்ந்த பரிசயமுள்ளவர்களும், வேதத்திலே உண்மையான பிரதிபத்தியுள்ளவர்களும் இந்த ஆராய்ச்சியை ஆழ்ந்து அநுபவிக்க வேணும், (அதாவது)--வேதத்தில் ப்ரஸ்தாவிக்கப்படாத தேவதை கிடையாது. எல்லாத்தெய்வங்களும் ப்ரஸ்தாவிக்கப்பட்டு ஒவ்வொரு தெய்வத்தைப் பற்றியும் பல பல கதைகள் ஓதப்பட்டிருக்கின்றனவென்பதை வைதிகர்கள் அறிவர்கள். அக்நி, இந்திரன், ப்ருஹஸ்பதி, மித்ராவருணர், ருத்திர பகவான் இத்யாதி தேவர்களைப்பற்றிக் கதைகள் சொல்லப்படுவ்துபோலவே விஷ்ணுவைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கின்றது. அக்நி முதல் ருத்ர பகவான் வரையிலுமுள்ள தேவதைகளைப் பற்றிச் சொல்லப்படும் கதைகளையும் விஷ்ணுவைப்பற்றிச் சொல்லப்படும் கதையையும் ஊன்றிப் பார்க்கவேணும். விஷ்ணுதவிர மற்ற தேவதைகளிடத்திலே வந்து 'எங்களுக்கு இன்ன காரியம் செய்துதர வேணும்' என்று யாரேனும் சிலர் வேண்டினால் உடனே அந்த தேவதைகள் என்ன பதில் சொல்லுவது வழக்கமென்றால் ***'வரம் வ்ருணே'*** என்றோ ***'வரம் வ்ருணுமஹை'*** என்றோ சொல்லி "நான் இன்னவரம்விரும்புகிறேன்; இதை எனக்குக் கிடைக்கச்செய்தால் உங்களுக்கு நான் காரியம் செய்கிறேன்" என்று சொல்லி வரம் பெற்றுக் கொண்டே காரியஞ் செய்வது வழக்கம்; விஷ்ணுவிடம் வந்து கார்யாபேக்ஷை பண்ணும் போது அவர் இப்படி பல்லைக்காட்டி வரம் கேட்டதாக ஓரிடத்திலும் கிடையாது. இது நாம் ஸாமான்யமாக எழுதிவிடுவதன்று; ***"வரம் வருணே—வ்ருணுவஹை, வரம் வ்ருணுமஹை."*** என்று நமது யஜுர்வேதத்தில் எத்தனையிடங்களில் வருகின்றதோ; அத்தனை யிடங்களையும் அடுத்தபடியாக எடுத்துக் காட்டப் போகிறேன். குறையுள்ளவர்களே வரம் கேட்பவர்களென்பதையும், வரம் கேளாதவர்கள் அவாப்த ஸமஸ்த காமர்களென்பதையும் நாம் சொல்லவேணுமோ? எங்கேனும் ஓரிடத்திலாவது விஷ்ணுவின் வாக்கில் 'வரம் வ்ருணே' என்கிற வாக்கியம் வெளி வந்திருப்பதாகக் காட்டிவிட்டால் 'மற்ற தெய்வங்களைப் போலே அவரும் குறைவாளரேயொழிய அவாப்த ஸமஸ்த காமரல்லர்' என்று நாம் இசையத் தடையில்லை.

வரம் கேட்பதில் அக்நி முதல் ருத்ர பகவான் வரையில் ஒரே வகுப்புத்தான் என்பதையும், இந்த வகுப்பில் விஷ்ணு சேராதவரென்பதையும் வைதிகர்கள் நிஷ்கர்ஷித்துவிட்டால் பரதேவதா நிஷ்கர்ஷம் எளிதில் முடிந்ததாகும்.

யார் யார் வரம் வேண்டினவர்களென்பதற்கும், அந்த வேண்டுகோள் ஓதப்பட்டிருக்குமிடத்திற்கும் ஜாபிதா காட்டுகிறோம் இனி;

முதல் காண்டத்தில் வரம் வேண்டுகிற ப்ரஸ்தாவம் ஓரிடத்திலும் கிடையாது. ஆகவே அந்த காண்டம் விடப்பட்டது.

இரண்டாவது காண்டத்தில், ஐந்தாவதான * விச்வரூப ப்ரச்நத்தில் இந்திரன் ப்ரஹ்மஹத்யா பாபத்தைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டின போது ப்ருதிவியும் வநஸ்பதிகளும் ஸ்த்ரீகளும் வரம் வேண்டிப் பெற்றதாகவுள்ளது. அந்த ப்ரச்நத்திலேயே அடுத்த அநுவாகத்தில், * ते अब्रुतां वरं वृणावहै नक्षत्रविहिताऽहमसानि * இத்யாதியாலே த்யாவாப்ருதிவிகள் வரம் வேண்டினதாகச் சொல்லிற்று. அவ்விடத்திலேயே



*साऽब्रवीद्वरं वृणै मय्येव * இத்யாதியாலே गो வரம் வேண்டினதாகச் சொல்லிற்று. மேலே * ते अब्रुतां वरं वृणावहा आवं देवानां भागधे असाव * இத்யாதியாலே அமாவாஸ்யையும் பௌர்ணமாஸியும் வரம் வேண்டினதாகச் சொல்லிற்று. மேல் ஆறும் ப்ரச்நத்தில் * सोऽब्रवीद्वरं वृणै यदेव गृहीतस्य * இத்யாதியாலே அக்நி வரம்வேண்டினதாக வோதிற்று.

மூன்றாவது காண்டத்தில் முதல் ப்ரச்நத்தில் * मनुः पुत्रेभ्यो दायं व्यभजत् * என்று தொடங்கி ஓதப்பட்டுள்ள நாபாநேதிஷ்டனுடைய கதையில் ருத்ரபகவான் செய்த வேண்டுகோள் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இங்கு ***'வரம் வ்ருணே'*** என்று ஸ்பஷ்டோக்தியில்லாவிட்டாலும் * सोऽब्रवीद्यज्ञे माऽऽभजाथ ते * இத்யாதி வாக்யத்தினால் ருத்ரனுடைய வேண்டுகோள் ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஐந்தாவது காண்டத்தில் நாலாம் ப்ரச்நத்தில் *सोऽब्रवीद्वरं वृणै मह्यमेव वाजप्रसवीयम्* இத்யாதியாலே அக்நி வரம் வேண்டினதாகச் சொல்லிற்று.

ஆறாவது காண்டத்தில் இரண்டாம் ப்ரச்நத்தில் த்ரிபுர ஸம்ஹாரம் சொல்லுகிற அநுவாகத்தில் *क इमामसिष्यतीति, रुद्र इत्यब्रुवन् रुद्रो वै क्रूरस्सोऽस्यत्विति *என்றவளவிலே *सोऽब्रवीद्वरं वृणै अहमेव पशूनामधिपतिरसानीति* என்ற வாக்யத்தினால் ருத்ரன் தான் பசுபதியாக வேணுமென்று வரம் வேண்டினதாகச் சொல்லிற்று. கீழே மூன்றாவது காண்டத்திலிருந்து எடுத்துக்காட்டப்பட்ட கதையில் *यज्ञवास्तौ रुद्र आगच्छत् सोऽब्रवीन्मम वा इमे पशव इति* என்றிருப்பதை இந்த ஆறாவது காண்ட கதையோடு சேர்த்து விமர்சிப்பது நலம்.

ஆறாவது காண்டம் மூன்றாவது ப்ரச்நத்தில் *वरं वृणै पशोरुद्धारमुद्धरा इति* என்றது அக்நி தேவனுடைய வேண்டுகோள். மேல் நாலாவது ப்ரச்நத்தில் வரப்ரார்த்தனைகள் அதிகமாக இருக்கின்றன. வாயு, இந்திரன், மித்ரன், வருணன், அச்விநிகள், சண்டாமர்க்கர்கள் ஆக இவர்கள் வரப்ரார்த்தனைகள் செய்திருக்கிறார்கள். ஐந்தாவது ப்ரச்நத்தில் *तेऽब्रुवन् वरं वृणामहै योऽतो जायाता अस्माकम्* என்று ஆதித்யர்களின் வரப்ரார்த்தனையுள்ளது. இந்த ரீதியில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் யாரிடத்திலாவது வரம் கேட்டதாக வேதத்தில் காண்பதுண்டோ? விஷ்ணுவினிடத்திலே யாரேனும் வந்து ஒரு காரியம் செய்ய வேண்டினால் அவர் வரப்ரார்த்தனை எதுவும் செய்யாமலே காரியத்தை உடனே நிறைவேற்றிக்கொடுத்தாரென்பது *विष्णवेहीदमाहरिष्यावः ... स विष्णुस्त्रेधात्मानं विन्यधत्त * இத்யாதி ஸ்தலங்களில் வ்யக்தம்.

இதர தெய்வங்களின் வரப்ரார்த்தனைகளை நாம் கீழே ஸம்ஹிதையிலிருந்து எடுத்துக்காட்டினது போலவே ப்ராஹ்மணத்திலிருந்தும் காட்டுகிறோம் காண்மின். முதலஷ்டகத்தில் (1—6—49) *तेऽब्रुवन्मरुतो वरं वृणामहै। अथ वयं वेदाम। अस्मभ्यमेव

प्रथमं हविर्निरुप्याता इति* (2—1—3) *सोऽब्रवीद्वरं वृणै। दश मा रात्रीर्जातं न दोहन्* இது வத்ஸத்தின் வரப்ரார்த்தனை யாதலால் இந்த ப்ரகரணத்திற்கு இது வேண்டா. (2-1-8) [அக்நி தேவதையின் வரப்ரார்த்தனை.] * सोऽब्रवीत्। किं भागधेयमभिजनिष्य इति। तुभ्यमेवेदँ हूयाता इत्यब्रवीत्। * இங்ஙனே மற்றுமுள்ள வரப்ரார்த்தனைகளையும் விஷ்ணு பாரம்யோக்திகளையும் (2-2-16;) (2-2-18) (2-2-61) (2-3-7) (2-7-47) (2-4-23, 24, 25, 29, 51, 52, 63) ஆரண்யகே. 8—4, 8—6, இவ்விடங்களிற் கண்டுகொள்வது. உச்சேஷணபாகமே ருத்ரபாகமென்பதை வைதிகர்கள் நன்கு அறிவர்கள்.

ஆக, விஷ்ணுவொருவர் தவிர மற்றைத் தெய்வங்களெல்லாம் வரம் வேண்டுவன; விஷ்ணுவொருவரே வரம் வேண்டாதவர் என்பது கல்வெட்டாகத் தேறுகிறபடியால் தான் வேதமே (ஐந்தாவது காண்டம், ஐந்தாவது ப்ரச்நத்தில்) *अग्निरवमो देवतानां विष्णुः परमः * என்று ஸம்சய விபர்யயமற ஸித்தாந்தம் பண்ணிவைத்தது.

## (6, இதிஹாஸ புராணங்களும் தேவதைகளும்.)

இதிஹாஸபுராணங்கள் வைதிகர்களால் வேதம் போலவே கொண்டாடப்பட்டு வருகின்றன. இவை எதற்காக அவதரித்தனவென்றால், ஏதோ கதைகள் சொல்லுவதற்கு என்றே சிலர் நினைப்பார்கள். உண்மை அதுவல்ல. * इतिहासपुराणाभ्यां वेदं समुपबृंहयेत्। बिभेत्यल्पश्रुताद्वेदो मामयं प्रतरिष्यति * என்று மஹர்ஷிகள்சொல்லிவைத்தார்கள். ஸ்ரீவால்மீகி பகவான் ஸ்ரீ ராமாயணத்தைக் குசலவர்களுக்கு ப்ரவசனம் செய்வித்ததைச் சொல்லுமிடத்து * वेदोपबृंहणार्थाय तावग्राहयत प्रभुः * என்று சொல்லிற்று. இவற்றால் நாம் என்ன தெரிந்துகொள்ளுகிறோம்? வேதத்தினுட் பொருள்களை விசதீகரிப்பதற்காகவே இதிஹாஸ புராணங்கள் அவதரித்தனவென்று தெரிந்துகொள்ளுகிறோம். இதிஹாஸ புராணங்களில் வரும் கதைகள் வெறுங் கதைகளல்ல வென்றும் வேதவிழுப்பொருள்களை விளக்குவனவென்றும் தெரிந்து கொள்வதே வைதிகர்களின் கடமையாகும். ஸ்ரீராமபிரானுடைய கதைகளை விளக்கும் ஸ்ரீராமாயணாதிகளும் கண்ணபிரானுடைய கதைகளை விளக்கும் மஹாபாரத ஸ்ரீபாகவதாதிகளும் தெரிவிக்கின்ற கதைகளானவை வேதத்திற்கு வியாக்கியான ரூபங்கள் என்றதாகத் தேறிற்று, ஸ்ரீராமனும் ஸ்ரீ க்ருஷ்ணனுமாகிற திவ்யமூர்த்திகள் ஸாக்ஷாத் நாராயண மூர்த்திகளேயன்றி வேறு தேவதைகளின் மூர்த்திகளல்ல வென்பது ஸ்பஷ்டம். இதர தேவதைகளின் வேண்டுகோளுக்கிணங்கியே நாராயணன் ஸ்ரீராமனாகவும் ஸ்ரீ க்ருஷ்ணனாகவும் திருவவதாரங்கள் செய்தருளினது அபலபிக்கமுடியாதபடி மஹர்ஷிகளால் வெளியிடப்பட்டிருப்பதால் தேவதைகளுள் பேதமே கிடையாதென்கிற பேச்சு எள்ளளவும் பொருந்தாது. அப்படி வெவ்வேறுபட்டிருக்கின்ற தேவதைகளுக்குப் பலபல ஆபத்துக்கள் நேர்ந்ததும், அவற்றை அவர்கள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவிடம் வந்து முறையிட்டு அவருடைய திவ்ய க்ருபையால் பரிஹாரம் பெற்றதும் இதிஹாஸ புராணங்களில் பலபல விடங்களில் பிரசுரமாகியுள்ளது. ஸ்ரீ மஹாவிஷ்ணுவுக்கு இப்படியொரு விபத்து நேர்ந்து அதை அவர் இதர தேவதைகளிடம் முறையிட்டுப் பரிஹாரம் பெற்றதாக ஓரிடத்திலும் ஒரு



கதைகூட கிடையாது; வேதத்தில் "வ்ரம் வ்ருணீ — வ்ரம் வ்ருணீமஹே" என்று சொல்லி வரம் வேண்டுகின்ற தேவதைகளுக்கே ஆபத்து நேரக்கூடியதாதலாலும், அப்படி ஓரிடத்திலும் ஒரு வரமும் வேண்டாத தேவதாஸார்வபௌமனுக்கு ஆபத்து நேரிட ப்ரஸக்தியில்லாமையாலும், வேதங்களோடும் இதிஹாஸ புராணங்களோடும் வாசியற ஸகல ப்ரமாணங்களும் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் பாரம்யத்தையே நிலைநாட்டுகின்றன வென்பது தேறி நின்றது. ஆனது பற்றியே ஆளவந்தார்

"वेदापहारगुरुपातकदैत्यपीडाद्यापद्विमोचनमहिष्ठफलप्रदानैः।
कोऽन्यः प्रजापशुपती परिपाति? कस्य पादोदकेन स शिवः स्वशिरोधृतेन?॥

என்று துணிந்து கேள்வி கேட்டுள்ளார். இதை யநுஸரித்துப் பிள்ளைப்பெருமாளையங்காரும்

"மங்கைபாகன் சடையில் வைத்த கங்கை யார்பதத்து நீர்
வனச மேவு முனிவனுக்கு மைந்தனானதில்லையோ?
செங்கையாலிரந்தவன் கபாலமாரகற்றினார்
செய்யதாளின் மலரரன் சிரத்திலானதில்லையோ?
வெங்கண் வேழம் மூலமென்ன வந்ததுங்கள் தேவனோ
வீறுவாணன மரிலன்று விறலழிந்த தில்லையோ?
அங்கண் ஞாலமுண்டபோது வெள்ளி வெற்பகன்றதோ
ஆதலாலரங்கனன்றி வேறு தெய்வமில்லையே."

என்று சில கேள்விகள் கேட்டிருக்கின்றார். பிறரால் ஆர்ஜவத்துடன் ஸமாதானம் சொல்ல வொண்ணாதபடி இங்ஙனே கேட்கத்தக்க கேள்விகள் கணக்கிலடங்கா. இதிஹாஸ புராணங்களில் கூறப்பட்டிருக்கின்ற கதைகளுக்கு அர்த்தமே கிடையாதென்றும், அவற்றைக்கொண்டு தத்வநிஷ்கர்ஷம் பண்ணலாகாதென்றும் சொல்லுவதனால் "इतिहासपुराणाभ्यां वेदं समुपबृंहयेत्" என்றது அர்த்தமில்லாத வார்த்தையாய் விடும். இதிஹாஸ புராணங்கள் அவதரித்தது எதற்காக?

## (7. பகவத்கீதையும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவும்)

வேதம் இதிஹாஸ புராணங்கள் முதலிய ஸகல ப்ரமாணங்களிற் காட்டிலும் பகவத் கீதை மிகச் சிறந்ததென்று சொல்லும்படியாக உலகமெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இது பகவான் தானே யருளிச்செய்ததென்னும் ஏற்றமுடையது. அந்த பகவான் ஸ்ரீமந் நாராயணனென்றும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவென்றும் குலாவப்படுகிற பரமபுருஷனேயென்பது நிர்விவாதம். இப்படிப்பட்ட கீதாசாஸ்த்ரத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பரத்வமும் இதர தேவதைகளின் அவரத்வமும் அடுத்தடுத்துத் தெரிவிக்கப்படுகிறது: (10—8) * अहं सर्वस्य प्रभवो मत्तस्सर्वं प्रवर्तते— அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்தஸ் ஸர்வம் ப்ரவர்த்ததே*, என்னுமிவ்விடத்தில் சங்கரபகவத் பாதாளுடைய பாஷ்யம் :—

"अहं परं ब्रह्म वासुदेवाख्यम्; सर्वस्य जगतः प्रभवः—उत्पत्तिः। मत्त एव स्थितिनाशक्रियाफ—लोपभोगलक्षणं विक्रियारूपं सर्वं जगत् प्रवर्तते।

இத்யாதி மூலத்தில் நாராயணபதமும் விஷ்ணுபதமும் ஸ்பஷ்டமாக இல்லாதவிடங்களில் சங்கரபகவத் பாதாள் விஷ்ணு நாராயண வாஸுதேவ பதங்களையிட்டே பாஷ்யம் செய்து போகிறார். (9—22) * अनन्याश्चिन्तयन्तो माम् * என்றவிடத்தில் "परं देवं नारायणं...पर्युपासते...तेषां परमार्थदर्शिनाम्" என்று, பரதேவதையான நாராயணனை உபாஸிப்பவர்களே பரமார்த்தம் கண்டவர்களென்கிறார். 'விஷ்ணுவுக்குப் போலவே சிவனுக்கும் பாரம்யமுண்டு' என்கிற வாதத்தை ஆதிசங்கர பகவத்பாதாள் ஸஹிப்பதில்லை. கீதையில் ஸ்ரீமந் நாராயணன் தவிர மற்றுள்ள தேவதைகளை பஜனஞ் செய்யுமவர்களைப் பற்றிச் சொல்லாமலில்லை (7—20)*कामैस्तैस्तैर्हृतज्ञानाः प्रपद्यन्तेऽन्यदेवताः * என்று தொடங்கிச் சொல்லுகையில் (ச்லோ 23 अन्तवत्तुफलं तेषां तद्भवत्यल्पमेधसाम् * என்று முடிக்கப்பட்டது. இந்த ச்லோகத்தின் சங்கரபாஷ்யத்தின் முடிவு வாக்யம் பரமபக்தர்களை அவசமாகவே கண்ணீர்விடச் செய்கின்றது.

'एवं समानेऽप्यायासे मामेव न प्रपद्यन्ते अनन्तफलाय; अहो खलु कष्टतरं वर्तते—इत्यनुक्रोशं दर्शयति भगवान्"

என்பது இங்கு சங்கரபாஷ்யபங்க்தி. நாராயணோபாஸகர்களுக்குத்தான் அனந்தமாய் அக்ஷயமான பலன் கிடைக்குமென்று தெரிந்திருக்கவும் அந்தோ! சிலர் அற்ப பலனுக்காக இதர தேவதைகளைப் பற்றுகிறார்களேயென்று வாஸுதேவன் வருந்திக் கூறுவதாகக் கண்டறிந்து சங்கரபகவத் பாதாள் எழுதியிருப்பது குறிக்கொள்ளத் தக்கது.

பதினோராமத்யாயத்தில் விச்வரூபப்ரதர்சநம் அமைந்திருப்பது இதர தேவதைகளின் அவரத்வத்தைக் கையிலங்கு நெல்லிக்கனியாகக் காட்டுவதற்காகவே. அதில் அர்ஜுநன் மூன்றாவது ச்லோகத்தில் "நீயே பரமேச்வரனென்பது வாஸ்தவமே; ஆனாலும் அதை நான் ஸாக்ஷாத்கரிக்க விரும்புவதால் உன்னுடைய வைஷ்ணவ ரூபத்தைக் காட்டலாமோ?" என்று விரும்ப,* पश्यादित्यान् वसून् रुद्रानश्विनौ मरुतस्तथा* என்று தன் திருமேனியி னேகதேசத்திலே யொடுங்கிக் கிடக்கிற ஸகல தேவதைகளையும் காணென்று காட்டிக்கொடுத்தான் ஸ்ரீமந்நாராயணன்; திவ்யசக்ஷுஸ்ஸைப் பெற்று அதுகண்ட அர்ஜுனன் "பச்யாமி தேவாந் தவ தேவ! தேஹே" என்று தொடங்கி விதி சிவ பாவகாதி ஸகலதேவதைகளையும் வாஸுதேவனுடைய தேஹத்திலே தான் காண்பதாக் கூறினன். இதை இந்திரஜாலமென்று கூறிற்றிலனாகையாலே அத்வைத வாதம் அடியற்றது. தேவதாந்தர பாரம்யவாதம் ஸுதராம் தொலைந்தது. வேறொரு தேவதை இப்படி விச்வரூபங்காட்டித் தன்னிடத்திலே நாராயணன் ஒடுங்கியிருப்பதாகக் காட்டவல்லதோ?



*रुद्रादित्या वसवो ये च साध्या विश्वेऽश्विनौ मरुतश्चोष्मपाश्च।
गन्धर्वयक्षासुरसिद्धसंघा वीक्षन्ते त्वां विस्मिताश्चैव सर्वे॥*

என்ற ச்லோகமானது * பின்னிட்ட சடையானும் பிரமனுமிந்திரனுமென்று ஆழ்வார்கள் அருளிச்செய்வதற்கு மூலமாக விளங்குகின்றது. ... ... ...*

## (8. மஹாவிஷ்ணுவும் பரசுராமனும்)

தசரதாத்மஜராமனும் பரசுராமனுமாகிய இருவரும் விஷ்ணுவின் அவதாரமாயே யிருக்க இவர்கள் பரஸ்பரம் சண்டையிட்டதாகவும் இவர்களுள் ஒருவன் பராஜயமடைந்ததாகவும் கதைகாண்பது போலவே பாணாஸுரயுத்தத்தில் பரமசிவன் பங்கமடைந்ததாகச் சொல்லப்படுவதும் என்பவர்களைத் தெளிவிக்கிறோம்.

உலகத்திலே எவரும் அழிப்பவரில்லாமையால் கொழுத்துத் திரிந்து கொடுமையியற்றி வந்த க்ஷத்திரிய வம்சங்கள் பலவற்றை நாசஞ்செய்தற் பொருட்டு நாராயணமூர்த்தி ஜமதக்கினி முனிவரது மனைவியான ரேணுகையினிடம் இராமனாய்த் திருவவதரித்து, பரசு என்னும் கோடாலிப்படையை ஆயுதமாகக் கொண்டு அதனாற் பரசுராமனென வழங்கப் பெற்று, தனது தந்தையின் ஹோமதேனுவைக் கார்த்தவீர்யார்ஜுநன் கவர்ந்து அவரைக் கொன்றிட்டது காரணமாக அவனையும் அவனது குமாரர்களையுங் கொன்று அதனாலேயே க்ஷத்ரிய வம்சம் முழுவதன்மேலும் கோபாவேசங்கொண்டு உலகத்திலுள்ள அரசர்கள் பலரையும் இருபத்தொரு தலைமுறை பொருது ஒழித்திட்டான்; இப்பரசுராமன் ஏழு சிரஞ்ஜீவிகளில் ஒருவன். சிவபிரானது கைலாஸகிரியைப் பெயர்த்தெடுத்த இராவணன் மிகவலியவனென்றும், அவனிலும் கார்த்தவீரியன் வலியவனென்றும், அவனிலும் பரசுராமன் வலியவனென்றும் இதிஹாஸங்களால் விளங்கும். விஷத்தையுண்டு கங்கையைத் தரித்து மேரு வில் வளைத்துத் திரிபுரமெரித்து மன்மதனை நீறுபடுத்தி யமனையுதைத்து ஸம்ஹாரத்தொழில் நிகழ்த்தும் பேராற்றலையுடைய உக்ரமூர்த்தியாவான் ருத்ரன்; அக்கடவுள் வீற்றிருக்கின்ற கைலாஸ கிரியை ஒருகால் இராவணன் வேரோடு பெயர்த்தனன்; அங்ஙனம் மிக வலியனாய் திக்விஜயஞ்செய்து திக்கஜங்களையும் வென்ற இராவணனைக் கார்த்தவீர்யார்ஜுநன் கட்டிச் சிறையிலிட்டனன். அவனைப் பரசுராமபிரான் தோள் துணித்துத் தொலைத்திட்டனன் என்க.

எம்பெருமானுடைய தசாவதாரங்களுள் ஆறும் அவதாரமான இப்பரசுராமன் ஏழாம் அவதாரமான தசரதராமன்மீது கோபித்தலும், இவ்விருவரும் ஒருவரோடொருவர் பொருதலும், அவர்களில் ஒருவர் மற்றொருவரை வெல்லுதலும் பொருந்துமோவெனில்?—துஷ்டர்களாய்க் கொழுத்துத் திரிந்த அரசர்களைக் கொல்லும் பொருட்டுப் பரசுராமனிடத்தில் ஆவேசித்த விஷ்ணுசக்தி விசேஷம் அக்காரியம் முடிந்த பின்பு அவ்விஷ்ணுவின் அம்சாவதாரமான தசரதராமனாற் கவர்ந்து கொள்ளப்பட்டதாகையால் பொருந்துமென்க, இதனால் ஆவேசாவதாரத்திற் காட்டிலும் அம்சாவதாரத்திற்கு உள்ள ஏற்றம் விளங்கும்.

ஸ்ரீமந்நாராயணனது விபவாவதாரங்கள் அளவற்றவை. அவை முக்கியம் அமுக்கியம் என இருவகைப்படும். இவற்றில் முந்தியது சிறந்தது. பிந்தியது அதனிலும் தாழ்ந்தது. முக்கியமாவது ஸாக்ஷாதவதாரம், அமுக்கியமாவது ஆவேசாவதாரம். ஆவேசந்தான் ஸ்வரூபாவேசமென்றும் சக்தியாவேசமென்றும் இரு வகையதாம். ஸ்வரூபாவேசமாவது—சேதநருடைய சரீரங்களில் எம்பெருமான் தன்னுடைய ரூபத்துடன் ஆவேசித்து நிற்பது, பரசுராமன் பலராமன் போல்வார் இத்திறத்தார்கள் சக்தியாவேசமாவது—சேதநர்பக்கல் காரியகாலத்திலே எம்பெருமான் சக்திமாத்திரத்தால் தோன்றி விளங்குதல்; கார்த்த வீர்யார்ஜுநன், அர்ஜுனன், வ்யாஸர் போல்வார் இத்திறத்தார். இவற்றில் சக்தியாவேசத்தைவிட ஸ்வரூபாவேசம் பிரபலம். இவற்றின் உண்மைநிலையை 'விஷ்வக்ஸேநஸம்ஹிதை' முதலிய ஸ்ரீ பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளிலும், தத்வத்ரயத்திலும் அதன் வியாக்யானத்திலும் பரக்கக் காணலாம். பரசுராமாவதாரம் ஸ்வரூபாவேசாவதாரம்.

இராமாநுச நூற்றந்தாதி (56) * கோக்குல மன்னரை மூவெழுகால் ஒரு கூர் மழுவால் போக்கிய தேவனைப் போற்றும் புனிதனென்றவிடத்து உரையில் மணவாள மாமுனிகளருளிச் செய்த ஸ்ரீஸூக்திகள்:—'பரசுராமாவதாரம் அஹங்காரயுக்த ஜீவனை அதிஷ்டித்து நிற்கையாலே முமுக்ஷுக்களுக்கு அநுபாஸ்யமன்றோ? **போக்கிய தேவனைப் போற்றும் புனிதனென்பானென்?** என்னில்; அதுக்குக் குறையில்லை; விரோதி நிரஸநம் பண்ணின உபகாரத்துக்குத் தோற்று, ஸ்துதிக்கிற மாத்ரமொழிய ததுபாஸனமல்லாமையாலே. 'மன்னடங்க மழுவலங் கைக்கொண்ட இராமநம்பி' என்றும், 'வென்றிமா மழுவேந்தி முன்மண்மிசை மன்னரை மூவெழுகால் கொன்றதேவா' என்றும் ஆழ்வார்களருளிச் செய்ததும், விரோதி நிரஸந ஸ்வபாவத்துக்குத் தோற்றுத் துதித்ததித்தனையிறே" என்று.

## ( 9 நேத்ரார்ப்பணீச்வர கதா விவேசனம் )

ஸ்ரீமஹாவிஷ்ணு தினப்படியாகப் பரமசிவனை ஆயிரம் தாமரை மலர்களினால் அர்ச்சித்து வந்தாரென்றும், ஒரு நாள் தாமரைப் பூ குறைந்துபோகத் தன் திருக்கண்களைப் பிடுங்கி அவைகொண்டு அர்ச்சித்தாரென்றும், அதனாலேயே அப்பெருமானுக்குப் புண்டரீகாக்ஷனென்று பெயருண்டாயிற்றென்றும, நேத்ரார்ப்பணீச்வரரென்கிற பெயருமுண்டென்றும் சொல்லுவது அபஹாஸ்யமான கட்டுக் கதை. இக்கதை உண்மையில் பௌராணிகமாக இருந்தால் புண்டரீகாக்ஷநாம பாஷ்யத்தில் பகவத்பாதாள் எழுதியிருப்பர்கள். பல பொருள்கள் எழுதுவதில் இதையும் ஒரு பொருளாக எழுதியிருப்பர். அஸத்கதையை 'மஹா ப்ராமாணிகர்களான அவர்கள் எழுத ப்ரஸக்தி'யுண்டோ? "पुण्डरीकाकारे उभे अक्षिणी अस्य" என்று செந்தாமரை போன்ற கண்களையுடையவரென்கிற பொருளைச் செய்தாரேயல்லது, தன் கண்களைத் தாமரையாக உபயோகப்படுத்தினவர் என்கிற [அநுவாதத்திற்கும் அநர்ஹமான] பொருளைச் செய்திலர். * பத்மீ பத்மநிபேக்ஷண: * பத்மநாபோரவிந்தாக்ஷ: * என்றவிடங்களிலும் பாஷ்யம் காண்க.



சங்கர பகவத்பாதாள் தம்முடைய பாஷ்யத்தில் கதைகளைக் காட்டுகிற வழக்கமில்லாமையால் காட்டவில்லையெனில், இது சங்கரபாஷ்யத்தை அடியோடு பாராதவர்களின் பேச்சாகும். அதில் அபரிமிதமான கதைகள் எடுத்தாளப்பட்டிருப்பது காணலாம். அந்தக்கதைகளெல்லாம் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் பாரம்யத்தை ப்ரதிஷ்டாபநம் செய்யுமவையே யல்லது, விஷ்ணுவுக்கு அபகர்ஷத்தையோ தேவதாந்தரங்களுக்கு உத்கர்ஷத்தையோ எள்ளளவும் காட்டுவனவல்ல. கேசவநாமத்தின் பாஷ்யத்தில் ஹரிவம்சத்திலிருந்து கதை காட்டியுள்ளார், ஸ்ரீமஹாவிஷ்ணுவுக்குக் கேசவனென்று பெயர் கொடுத்தவன் பரமசிவனேயாவன். அந்தப் பெயரைக் கொடுக்கும்போது

*को ब्रह्मेति समाख्यात ईशोऽहं सर्वदेहिनाम् । आवां तवाङ्गे संभूतौ तस्मात्केशवनामवान् ॥*

என்று சொல்லிக்கொண்டே கொடுத்ததாக ஹரிவம்சத்திலுள்ளதை யெடுத்துக் காட்டுகிறார்கள் பகவத்பாதாள். நிர்வாஹகர் நிர்வாஹ்யரை அர்ச்சித்து வந்தாரென்கை ஏற்கத்தக்கதன்று.

***அர்க்க:*** (अर्कः) என்னும் திருநாமத்திற்கு பாஷ்யம் செய்கிற பகவத்பாதாள் "ब्रह्मादिभिः पूज्यतमैरपि अर्चनीयत्वात् अर्कः" என்றார்கள். இங்கு ஆதி சப்தத்தால் முந்துற முன்னம் சிவபெருமானைத் தானே கொள்ள வேண்டும். * स ब्रह्मा स शिवः * என்று வேதத்தில் தீர்த்தக்ரமம் இப்படித்தானேயுள்ளது. தன்னை அர்ச்சிக்கத் தோன்றியவர்களைத் தான் அர்ச்சித்தானென்கை அஸங்கதம். * ***அமிதாசந:*** * என்கிற திருநாமத்திற்கு பாஷ்யமியற்றுகையில் "संहारसमये विश्वमश्नातीति अमिताशनः" என்றார் பகவத்பாதர். விச்வசப்தார்த்தத்தில் ப்ரஹ்ம சிவாதிகளும் சேர்ந்தவர்களேயன்றோ.

விஷ்ணுவுக்கு **வ்ருஷபாக்ஷ:** என்றொரு திருநாமமுள்ளது; நேத்ரார்ப்பண கதை உண்மையாயிருந்தால் இந்தத் திருநாமத்தின் பாஷ்யத்திலே ஒருவாறு இக்கதையைப் புகுத்தியிருக்கலாம். வ்ருஷபபதத்திற்கு வ்ருஷபவாஹநனென்று பொருள் கூறி அவருக்கு அக்ஷியைக் கொடுத்தவர் என்று எளிதாக எழுதியிருக்கலாமே. இங்கு சங்கரபாஷ்யம்— सकलान् कामान् वर्षुके अक्षिणी अस्येति वृषभाक्षः; वृषभो धर्मः; स एव वा दृष्टिरस्येति वृषभाक्षः" என்பதாம். ஸ்வக்ஷ: (स्वक्षः) என்று ஒரு திருநாமம்; சிவார்ச்சனைக்கு உபயோகிக்கப்பட்டவை யாகையாலே நல்லவையான கண்களையுடையவர் என்று பாஷ்யம் செய்திருக்கலாம்; "शोभने पुण्डरीकाभे अक्षिणी अस्येति–स्वक्षः" என்றே பாஷ்யம். * ***ஸர்வவாகீச்வரேச்வர:*** * என்றொரு திருநாமம் இங்கு सर्वेषां वागीश्वराणां ब्रह्मादीनामपि ईश्वरः என்பது பகவத்பாத பாஷ்யம். இங்ஙனே எவ்வளவெடுத்துக் காட்டலாம். ஸர்வேச்வரனை ஈசிதவ்யஸ்தானத்திலே நிறுத்தியும், ஈசிதவ்யர்களை ஈச்வரஸ்தானத்திலே நிறுத்தியும் பேசுவது பாலிசபாஷிதமாகும். கண்ணைக் கொண்டு அர்ச்சித்ததாகச் சொல்லப்படுகிற இக்கதை விச்வஸநீயமான இதிஹாஸ புராணங்களில் ஏதேனுமொன்றில் இருப்பதாகவே வைத்துக்கொள்வோம். அதனால் ருத்ர மூர்த்திக்குப் பரத்வமென்பது தலைகாட்ட வழியில்லை. "युक्तो विधेयविषयेषु हि कामचारः" என்று கூரத்தாழ்வானருளிச் செய்து வைத்தார். ஸம்ப்ரதிபந்நமான பரத்வம் எந்த தேவதை யினிடத்திலே யென்பது

நிர்ணீதமாய்விட்டால் கதைகளைக் கொண்டு உபமர்தம் தேருதென்று இங்கே ஸம்க்ஷிப்தமானபடி.

## (10. அத்வைதமும் நாராயண ப்ரதிபத்தியும்)

உபநிஷத்துக்களுக்கோ ஸூத்ரங்களுக்கோ அர்த்தம் பண்ணுகையில் அத்வைதக் கொள்கை ஏற்பட்டது. இக்கொள்கையுடையாற்கு நாராயணனிடத்தில் த்வேஷமோ தேவதாந்தரத்தினிடத்தில் பக்தியோ ஏற்படுவதற்கு ஔசித்யமேயில்லை. சைவ மதக் கொள்கை வேறு. அத்வைத மதக் கொள்கை வேறு. அத்வைதிகளுக்கு சைவர்களென்கிற வ்யபதேசம் கிடையாது. சைவர்கள் நாராயண தூஷணம் செய்தால் அதில் வியப்பில்லை. அத்வைதிகள் நாராயண த்வேஷம் பாராட்டுவது அநுசிதம். நாராயணனை விட்டு வேறு தெய்வத்தை உபாஸிப்பதும், நாராயணனையும் இதர தெய்வங்களையும் துல்யமாக நினைப்பதும் மஹாபாதகமென்று சாஸ்த்ரங்கள் முறையிடுகின்றன. வராஹபுராணத்தின் உள்ளீடான கைசிக புராணத்தில் இவ்விஷயம் நம்பாடுவானென்கிற பரம பக்தனால் "तस्य पापेन लिप्येयं यद्यहं नागमे पुनः" என்று பல பாபங்களையும் சொல்லிவருமடைவிலே மேலே நாம் கூறின இரண்டு பாபங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

*वासुदेवं परित्यज्य येऽन्यं देवमुपासते। तेषां गतिं प्रपद्येय यद्यहं नागमे पुनः ॥
नारायणमथान्यैस्तु देवैस्तुल्यं करोति यः। तस्य पापेन लिप्येय यद्यहं नागमे पुनः ॥

இத்யாதிகள் காண்க.

வராஹ புராணத்தில் சைவர்களுக்கு விப்ரதிபத்தியிருந்தாலும் அத்வைதிகளுக்கு இருக்க நியாயமில்லை. இவ்விஷயம் வராஹ புராண மொன்றில் மட்டுமன்றே; வைதிக மதஸ்தர்களுக்கு உபஜீவ்யங்களான ப்ரமாணங்களெல்லாவற்றிலும் இது பரந்துள்ளது.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயஸ்தர்கள் விசேஷித்து ஆதரிக்கிற நாராயணனையே நாமும் ஆதரிப்பதா? என்றொரு அபிப்ராயமுண்டாகி நாராயண த்வேஷமோ நாராயண தூஷணமோ அத்வைதிகளுக்கு இடைக்காலத்தில் தான் ஏற்பட்டது. அப்பயதீக்ஷிதோபஜ்ஞமிது—என்று பெரியார் சொல்லக் கேள்வி, அவர் "நமோ ஹரிகேசாய" என்கிற வேத வாக்கியத்திற்குப் பொருள் சொல்லுகையில் "हरिश्च कश्च हरिकौ; तयोरीशः-हरिकेशः" என்று வ்யுத்பத்தி காட்டி ஹரிக்கும் பிரமனுக்கும் தலைவன் ருத்ரன் என்று சிஷ்யர்களுக்கு போதித்தாராம். அதைக் கேட்டுக்கொண்டிருந்த மஹாவிவேகினியான அவருடைய மாதா "பையா! அதோ வேத பாட சாலையில் பதபாடம் ஸந்தை நடந்து கொண்டிருக்கிறது; அங்குச்சென்று கேட்டுவா என்று சொன்னாளாம். தீக்ஷிதர் ஸர்வதோமுகமானஞானம் படைத்திருந்தும் வேதாத்யயநம் செய்திராமையாலேஎழுந்து வேதபாடசாலையிற் சென்று கேட்டாராம்; அங்கு *ஹரிகேசாயேதி ஹரி — கேசாய* என்று வேஷ்டநபாடம் இவருடைய காதில் விழுந்தது. இவர்தாம் போதித்த பொருள் வேத புருஷனுக்கு அபிமதமாயிருந்தால் *ஹரிகேசாயேதி ஹரிக — ஈசாய* என்று



வேஷ்டநபாடம் வந்திருக்கவேண்டும். அப்படி வராமையினாலும் செம்பட்ட மயிரையுடையவனென்னும் பொருளைக்காட்டுமதான பாடமே வந்திருந்தபடியாலும் தாம் கொண்ட பொருள் அஸங்கதமென்றறிந்து அநுதபித்து மாதாவிடம் சென்று நமஸ்கரித்து 'அம்மா! தெளிவு பெற்றேன்; எனக்கு விஷ்ணுத்வேஷம் அதிகரித்து வருகிறதே இதற்கு என்ன காரணம்?' என்று கேட்க, அதற்கு அவள் ஏதோ ரஹஸ்யம் தெரிவித்ததாகச் சொல்லப்படுகிறது. அது வேதாந்த கௌஸ்துபத்தில் ஸூசிதமாகவுள்ளது. பிறகு அவர் விஷ்ணுத்வேஷத்தை விலக்கிக்கொள்ளமுயன்றாராம். அது தோன்றவே அவர் நயமயூக மாலிகையென்றொரு ப்ரஹ்ம ஸூத்திர வியாக்கியானமெழுதினார். அதில் *लक्ष्मणार्यहृदयानुसारिणी रच्यते नयमयूखमालिका* என்கிற ப்ரதிஜ்ஞையுள்ளது.

## (11. ஆதிசங்கராசார்யஸ்வாமிகளின் விசேஷவாக்கு)

இங்கே மிகவும் ரஸமானவொரு விஷயத்தை நிரூபணம் செய்து தலைக்கட்டுகிறோம். ஆதிசங்கர பகவத் பாதாள் நாராயணனையே பரதேவதையாகக்கொண்டு நாராயணோபாஸநத்தையே மோக்ஷஸாதநமாகக் கொண்டவர். இது அவருடைய ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யத்தில் நன்கு விளங்குகின்றது. (2—2—42) *உத்பத்த்யஸம்பவாத்* என்கிற ஸூத்ரபாஷ்யத்தில் "तत्र भागवता मन्यन्ते" என்று தொடங்கி பாஞ்சராத்ர ப்ரமேயமாக மூன்று விஷயங்களைத் தெரிவித்து இரண்டு விஷயங்களில் தம்முடைய ஸம்மதியைக் காட்டி ஒரு விஷயத்தில் மட்டும் அஸம்மதியைக் காட்டி முடிக்கிறார் ஸம்மதங்களாகத் தெரிவிக்கப் பட்டுள்ள இரண்டு விஷயங்கள் எவையென்னில்; அவருடைய பங்க்திகளையே காட்டுவோம்.

"तत्र यत्तावदुच्यते योऽसौ नारायणः प्रसिद्धः परमात्मा सर्वात्मा...इति, तन्न निराक्रियते।
यदपि तस्य भगवतोऽभिगमनादिलक्षणमाराधनमजस्रमनन्यचित्ततया अभिप्रेयते, तदपि न
प्रतिषिध्यते; श्रुतिस्मृत्योरीश्वरप्रणिधानस्य प्रसिद्धत्वात्।"

என்பவை சங்கரபகவத் பாதாளுடைய பங்க்திகள். நாராயணனே பரதேவதையென்பதை இங்கு ஸித்தாந்தப் படுத்தியுள்ளார். ஈச்வராதி ஸாமாந்ய சப்தங்களை வாஸுதேவ நாராயணாதி விசேஷ சப்தங்களையே யிட்டுப் பரதத்வ நிஷ்கர்ஷம் செய்தவாள் ஆதிசங்கர பகவத் பாதாள். அவர்களுடைய பரம்பரையில் நாராயண, நாராயண என்கிற ஸந்ததோச்சாரணமும் *நாராயணஸ்ம்ருதி* என்கிற ஹஸ்த முத்ரையும் இன்றளவும் விபர்யயமடையாமலுள்ளது.

## (12. நம்மாழ்வாரும் முக்கண்ணப்பாவும்)

நம்மாழ்வார் திருவாய்மொழியின் முடிவில் *முனியே நான்முகனே முக்கண்ணப்பா*என்றருளிச்செய்துள்ளார். முடிவு பாசுரத்தில் *அரியை யயனை யரனையலற்றி* என்றுமருளிச்செய்துள்ளார். இவற்றால் கலங்குகிறவர்களைத் தெளிவு பெறுத்துவோம்.

சாஸ்த்ரங்களில் ஸமாநாதிகரண நிர்தேசமென்றும் வ்யதிகரண நிர்தேசமென்றும் இரண்டுண்டு. ஒரே விபக்தியினால் சொல்லுவது ஸமாநாதிகரண நிர்தேசமாகும்; வெவ்வேறு விபக்திகளாற் சொல்லுவது வ்யதிகரண நிர்தேசமாகும் * स ब्रह्मा स शिवस्सेन्द्रस्सोऽक्षरः परमस्स्वराट् *என்றாற் போன்றவை ஸமாநாதிகரண நிர்தேசங்களாம்.

* यः पृथिव्यां तिष्ठन् पृथिवीमन्तरो यमयति यं पृथिवी न वेद...य आत्मनि तिष्ठन् आत्मानमन्तरो यमयति यमात्मा न वेद* என்றாற் போன்றவை வ்யதிகரண நிர்தேசங்களாம். வ்யதிகரண நிர்தேசத்தால் பேதம் விளங்கும்; ஸமாநாதிகரண நிர்தேசத்தால் அபேதம் விளங்கும். பேதத்தை ப்ரதிபாதிக்கிற ப்ரமாணங்கள் பஹுளமாயும் அபேதத்தை ப்ரதிபாதிக்கிற ப்ரமாணங்கள் ஸ்வல்பமாயும் காணப்படுகையாலே பேதத்தை முக்கியமாகக் கொண்டு இதற்கு விரோதமின்றிக்கே அபேதத்தை நிர்வஹிக்கவேணுமென்பது விசிஷ்டாத்வைதிகளின் ஸித்தாந்தம். "நாராயணோ வைச்வாநர:, நாராயண இந்த்ர:" என்று சொன்னால் 'நாராயண: வைச்வாநர சரீரக: நாராயண: இந்த்ர சரீரக:, என்று அர்த்தமேயொழிய, நாராயணனும் வைச்வாநரனும் இந்திரனும் ஒரு வ்யக்தியேயென்று சொன்னதாக ஆகாது. வைச்வாநராதி கரணத்திலுள்ள * साक्षादप्यविरोधं जैमिनिः * என்கிற ஸூத்திரத்தின்படி அக்நி-வைச்வாநர-இந்த்ராதி சப்தங்களுக்கு ஸாக்ஷாத்தாகவே [யோகார்த்தத்தைக்கொண்டு] நாராயண பரமான நிர்வாஹமும் வேதாந்திகளுக்கு அபிமதம் * एको ह वै नारायण आसीत् न ब्रह्मा नेशानः नेमे द्यावापृथिवी * இத்யாதி விசேஷ ச்ருதிகளாலே தேறுதலடைந்திருக்கும் பரமைகாந்திகள் அக்நி-இந்த்ர-வைச்வாநராதி சப்தங்களுக்குப் போலவே சம்பு-சிவ-சங்கர-மஹாதேவாதி சப்தங்களுக்கும் அர்த்தம் கொள்ளுகிறார்கள். அதாவது, அந்தர்யாமித்வேநவோ ஸாக்ஷாத்தாகவோ.

"நாராயண: சிவம் அநுஜக்ராஹ; நாராயண: ப்ரஹ்மாணம் அஸ்ருஜத்" என்றாற் போல் வருமிடங்களிலும் இங்ஙனே கொள்ளவேணுமென்பது கிடையாது.

இனி ஆழ்வார்கள் பாசுரங்களுக்கு வருவோம் *முனியே நான்முகனே முக்கண்ணப்பா என்றருளிச்செய்த நம்மாழ்வார்க்கு த்ரிமூர்த்திகளின் ஸாம்யமோ ஐக்யமோ விவக்ஷிதமாவதற்கு அவகாசமே கிடையாது. * பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகனவனே கபாலநன் மோக்கத்துக் கண்டு கொண்மின் * என்பது போன்ற பல நூறு பாசுரங்களில் த்ரிமூர்த்திகளுக்குப் பரஸ்பரமுள்ள பேதத்தையும், இதர தேவதைகளுக்கு நேரும் ஆபத்துக்களை நாராயணனே போக்குபவனென்பதையும் கல்வெட்டாக ஸாதித்திருப்பவர்கள் ஆழ்வார்கள். இடையிடையே ஸம்ஸ்கிருத வேதாந்தச் சாயையில் * பூத்தண்டுழாய் முடியாய்! புனைகொன்றையஞ் செஞ்சடையாய் வாய்த்தவென்னான்முகனே! * என்று மருளிச் செய்திருக்கிறார்கள். பகவானுடைய விபூதிகளையெல்லாம் ஒரு பதிகத்தில் அநுபவிக்கிறார் நம்மாழ்வார்; [திருவாய்மொழியில் 3—4. * புகழுநல்லொருவனென்கோ * என்னும் பதிகம் அது ] அதில் "பூமியென்கோ தீயென்கோ வாயுவென்கோ ஆகாசமென்கோ ...... குன்றங்களனைத்துமென்கோ மாரியென்கோ தாரகைகளென்கோ கலைகளென்கோ" என்று சொல்லுகிற அடைவிலே "களிர்மதிச் சடையனென்கோ நான்முகக் கடவுளென்கோ" என்றும் சொல்லியுள்ளார்.



இதெல்லாம் அபேதோக்தியன்று: இவற்றை விபூதியாகவுடையவனென்பதுதான் அசைக்கமுடியாமல் தேறும் பொருள். திருவாய்மொழியிலேயே *மூவராகிய வொருவனை முதல் மூவர்க்கு முதல்வன் தன்னை * (3-6-2) என்று மருளிச்செய்துள்ளார். மூவராகிய வொருவனை' என்பதைக் காணும் போது த்ரிமூர்த்தி அபேதம் சொல்லுவது போல் தோன்றும்; அதன் பக்கத்திலுள்ள "முதல் மூவர்க்கு முதல்வன் தன்னை" என்பதைக் காணும்போது மருள் நீங்கும். இவ்வாழ்வார் தாமே மற்றொரு திவ்யப்பிரபந்தத்தில்— "முதலாந்திருவுருவம் மூன்றென்பர் ஒன்றே முதலாகும் மூன்றுக்குமென்பர்—முதல்வா நிகரிலகு காருருவா நின்னகத்த தன்றே, புகரிலகு தாமரையின் பூ." என்றொரு பாசுரமருளியுள்ளார், இதில் த்ரிமூர்த்தி ஐக்யவாதம், த்ரிமூர்த்தி அதீதவாதம் இவை ஸுஸ்பஷ்டமாகக் கண்டிக்கப்பட்டிருக்கின்றன. நாராயணனுடைய திருநாபியில் கமலத்தை ஸேவித்தால் இந்த துர்வாதங்களெல்லாம் அடியறும் என்று நிரூபிக்கிறார்.

கூரத்தாழ்வான் திருக்குமாரரான பட்டர் மேலே காட்டின ஆழ்வார் பாசுரத்தை ஸம்ஸ்கிருத ச்லோகமாக மொழிபெயர்த்திருக்கிறார்.

त्रयो देवास्तुल्याः त्रितयमिदमद्वैतम् अधिकं त्रिकादस्मात्तत्त्वं परमिति वितर्कान् विघटयन्।
विभोर्नाभीपद्मो विधिशिवनिदानं, भगवतस्तदन्यद् भ्रूभङ्गीपरवदिति सिद्धान्तयति नः॥

என்பது அந்த ச்லோகரத்நம். இவற்றிற்கு நம்முடைய வியாக்யானங்களை நோக்குவது. ஆக "முனியே நான்முகனே முக்கண்ணப்பா" என்ற பாசுரத்திற்கு பிறர் கொள்ளும் பொருள் பொருந்தாது. 'நிகில புவந நிர்மாண த்ராண ஸம்ஹரணாதி லீலன்' என்று பூர்வாசாரியர்கள் காட்டியுள்ள பொருள்தான் பொருந்தும்.

முக்கண்ணா! என்னாமல் 'முக்கண்ணப்பா!' என்றதற்கு ஏதோ வொரு பொருள் சொல்லி' இதைப் பூர்வாசாரியர்களும் எழுதியிருக்கிறார்கள் – என்றதும் பொருந்தாது. இங்கே பூர்வர்களின் வியாக்கியான வாக்கியங்கள் இவை காணீர்;– [முக்கண்ணப்பா!] ஸம்ஹார்யங்களோடேகூட ஸம்ஹாரகனையும் ஸம்ஹரிக்கிற ஸர்வேச்வரனுக்கு சரீரபூதனான த்ரிநேத்ரனுடைய பேரான சப்தத்தினாலே அவனில் வேறாய் அவனுக்கு அந்தராத்மாவான எம்பெருமானை ஸம்போதிக்கிறது" என்று சப்தார்த்தமாக எழுதப்பட்டது. அதன் பிறகு **அப்பா!** என்று ப்ரதீகமெடுத்து, "உபகாரம்; ஸ்ருஷ்டியிலும் உபகாரமிறே ஸம்ஹாரம்; நாலுநாள் கழித்து ஸ்ருஷ்டிக்கிலும் ஸத்தை கிடக்கும், சடக்கென ஸம்ஹரியாவிடில் ஸத்தையிழக்க வேண்டும்படி தீம்பிலேயாய்த்துக் கைவளர்வது. எங்ஙனேயென்னில், தம் தம் கையைக்கொண்டு கண்ணைக்கலக்கிக் கொள்வாரைப்போலே, ஸ்ருஷ்டித்த ஸ்ருஷ்டி பேற்றுக்கு உடலன்றியே தீம்புக்கு உடலானவாறே, சிறு ப்ரஜைகளைக் கையிலும் காலிலும் விலங்கிட்டு ரக்ஷிக்கும் மாதா பிதாக்களைப்போலே கரணகளேபர விதுரமாக்கி ஸம்ஹரித்திட்டு வைக்கையும் உபகாரமாயிருக்கிறபடி" என்று வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். இது நம்மாழ்வார் தம் விஷயத்திலே பண்ணின உபகாரமாகச் சொன்னபடியன்று. ஸர்வேச்வரன் ஸர்வ ஸாதாரணமாகச் செய்யும் ஸம்ஹாரம் லோகோபகாரமானது என்றபடி. அப்பா என்றது முக்கண்ணனுக்கும் அந்தர்யாமியாய் முழுமுதற் கடவுளான நாராயணனிடத்திலே அந்வயிப்பதாகவே காட்டப்பட்டுள்ளது. ஆக ஆழ்வார் பாசுரத்தை யெடுத்துப் பொருள் சொன்னதும் பொருத்தமற்றதென்று நிரூபிக்கப்பட்டதாயிற்று... ... ... ... *

## உபஸம்ஹாரம்

விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்கு சங்கர பகவத் பாதாள் இயற்றிய பாஷ்யத்தை நித்யம் காலை மாலைகளில் பாராயணம் செய்து வந்தால் விஷ்ணுத்வேஷம், தேவதாந்தர ப்ராவண்யம், தேவதாந்தரங்களோடொக்க விஷ்ணுவை நினைத்தல் முதலான அவத்யங்கள் அகன்றொழியும், * ஸமயஜ்ஞோ ஹவிர் ஹரி: * என்றவிடத்தில் ஹரிநாமத்திற்குப் பல பொருள்களை யெழுதுகின்ற பகவத் பாதாள் "हरिद्वर्णत्वाद्वा हरिः * वर्णश्च मे हरिः श्रेष्ठः तस्माद्धरिरहं स्मृतः* इति भगवद्वचनात्' என்று மஹாபாரத சாந்திபர்வ வசனத்தைக் காட்டி * பச்சைமாமலைபோல் மேனியனென்று பொருள் செய்துள்ளார்கள். ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் நிறம் ச்ரேஷ்டமென்று காட்டப்பட்டது, விஷ்ணுவுக்குக் கறுப்பு நிறமாகையாலே தாமஸப்ரக்ருதியென்கிற வார்த்தை பகவத் பாதாளுக்கு மிகவும் அருந்துதமாயிருக்குமென்பதில் ஐயமுண்டோ? *குமுத: குந்தர: குந்த: * என்றவிடத்தில் "कुन्दोपमं सुन्दराङ्गत्वात् स्वच्छतया स्फटिकनिर्मलः कुन्दः" என்றுள்ள பகவத் பாதபாஷ்ய பங்க்தியை நிச்சலும் ஸேவிப்பது.

वैदिकगोष्ठीषु हरिर्नारायण एक एव परदैवम् । तस्य परिवारभूताः शिवादयोऽन्ये सुरा इति ध्येयम् ॥
शिवविष्ण्वभेदवादः शिवस्य पारम्यवाद इत्यादिः । पामरमोहनवाक्ततिरास्तिकवैदिकविदूरगा भवतु ॥
इत्थं वादिभयङ्करवंशीयाण्णङ्गरार्यसंग्रथितम् । जीयादाचन्द्रार्कं विद्वज्जनभोग्यविष्णुसाम्राज्यम् ॥

ஸ்ரீ காஞ்சி பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் எழுதிய
ஸ்ரீ மஹாவிஷ்ணு
ஸாம்ராஜ்யம்
முற்றுப்பெற்றது

ஸ்ரீ:

# தயிரரவமாராய்ச்சியின் தடுமாற்றங்கள்.

(ஸ்ரீ காஞ்சி ப்ர. அண்ணங்கராசாரியர்.)

पितृपर्यायभूतस्य मातामहमहात्मनः । प्रथितां दिव्यसूक्तिं तां सार्थयन् विजयीभव ॥

நமது லஹரியின் சென்ற மாசி மாதத்து இதழில் "மத்தினாலோசைபடுத்த தயிரரவம்" என்னும் மகுடம் புனைந்த வோர் வியாஸம் வெளிவந்திருப்பது அன்பர்களுக்கு நினைவிருக்கும். மறந்திருந்தாலும் 172 லக்கமுள்ள பத்ரிகையை நோக்குவது. மத்தினாலோசைபடுத்த தயிரரவம் என்ற திருப்பாவைப் பாவில் 'தயிரரவும்' என்று (உம்மையோடு கூடிய பாடமிருந்தால்தான் பொருந்தும்) என்று சிலர் எழுதியிருந்ததை மறுத்து எழுதப்பட்டது அந்த வியாஸம். அதை மறுக்க நினைக்க விவேகிகளுக்கு நியாயமில்லை. ஆயினும் எதற்கும் மறுப்பென்று ஒன்றை யெழுதிவிடலாமாதலால் முன்பு மறுப்புண்டவர்கள் தாமே மீண்டும் "மத்தினாலோசைபடுத்த தயிரரவம் ஓர் ஆராய்ச்சி" என மகுடம் புனைந்த சில ஏடுகளை வெளியிட்டுள்ளார்கள். அவ்வாராய்ச்சியில் இன்னது தெரிவிக்கப்படுகிறது என்பதை ஊன்றித் தெரிந்து கொள்ளவல்லார் இருக்கில்லாராதலால் இங்கு நாம் 25 வார்த்தைகளினால் ப்ரக்ருத விஷயத்தில் ஸ்வமதஸ்தாபனத்தையும் பரமத நிரஸனத்தையும் மறுவாய் திறக்க இடமின்றிக்கே செய்து போருவோமாக.

1. * கீசுகீசென்றெங்குமென்கிற திருப்பாவைப் பாசுரத்தில் எழுப்பப்படுகிற ஆய்ச்சி சடக்கென எழுந்து வருதற்காகப் பொழுது விடிந்தமைக்கு இரண்டு தொனிகள் அடையாளமாகக் கூறப்படுகின்றன. ஆனைச்சாத்தம் கலந்து பேசின பேச்சரவம் ஒன்று; ஆய்ச்சியர் மத்தினாலோசைபடுத்த தயிரரவம் மற்றொன்று. ஆக இவ்விரண்டு ஓசைகளே அடையாளமாக இப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

2. காசும் பிறப்புமித்யாதியான சொல் தொடரை வியாக்யானித்தருளா நின்ற பூருவாசாரியர்கள் மூவாயிரப்படியிலும் ஆறாயிரப்படியிலும் இவ்வொரு வாக்கியத்தில் மட்டும் மூன்று ஓசைகள் தெரிவிக்கப்படுவதாகக் காட்டுவதாய்க் காண்கிறது, காசும்பிறப்புமாகிய ஆபரணங்கள் கலகலக்குமொலி, ஆய்ச்சியர்களின் பாட்டொலி, தயிர்கடையுமொலி ஆகிய இம்மூன்றொலிகள் பொழுது விடிந்தமைக்கு அடையாளமாய் சொல்லப்படுவதாக வியாக்யானத்திலிருந்து தெரியவருகிறது. மூலமுள்ள ஸந்நிவேசத்தைக் காணுமிடத்து * மத்தினாலோசைபடுத்த தயிரரவம் கேட்டிலையோ * என்றதற்குச் சேர, தயிரரவமாகிற ஒரு ஓசைமட்டுமே அடையாளமாகக் கூறப்படுவதாய்க் கொள்வதற்கு ஔசித்யமுள்ளது. மற்ற இரண்டு ஓசைகளையும் பூர்வாசாரியர்கள் எங்ஙனே காட்டினார்களென்னில்; "காசும் பிறப்பும் கலகலப்ப" என்பது ப்ரதாநவாக்யார்த்தமாகவன்றிக்கே உபஸர்ஜனமாக விருந்தாலும் அதுவொரு த்வநியைக் காட்டுவதாயிருக்கையாலே அப்படி காட்டப்படுகிற த்வநியையும் இங்கு அடையாளஞ் சொல்லப்படுவதாக உரையிடலாமென்று திருவுள்ளம் பற்றினார்கள். ஆய்ச்சியர்களின் பாட்டொலியென்பது மூலத்தில் அடியோடு இல்லை. இல்லாதவதனை எப்படி கொண்டார்களெனனில்; (இதுதானே முக்கியமான விஷயம்) கேண்மின்;

3. இதற்கு இரண்டு வகையால் ஸமாதானம் சொல்லலாம். (மத்தினாலோசைபடுத்த) என்று ப்ரதீகமெடுத்து "மந்தரத்தாலே கடலைக் கலக்கினாப்போலே இந்த கோஷமும்

"செவியில் பட்டதில்லையோ" என்று இவ்வளவோடே ப்ரக்ருத வ்யாக்யானம் முற்றுப் பெற்றதாயிற்று. இதன்படி தயிரரவமாகிற ஓர் அரவந்தான் ஆசாரியர்கள் காட்டியருளினது என்று தீர்ந்துவிட்டது. இதற்குமேல் ப்ராஸங்கிகமாக "உத்காயதீநாம் அரவிந்தலோசநம்" என்கிற ஸ்ரீபாகவத ச்லோகத்தை யுதாஹரித்து அதை வியாக்யானித்தருளுமிடையிலே யுள்ளது "அவன் கண்ணழகிலே தோற்றுப்பாடுகிற த்வநியும்" என்கிற ஸ்ரீஸூக்தி. ஆகவே கோபிகளின் கீதத்வநியானது பாசுரத்திலிருந்து காட்டப்பட்டதன்று; "அரவிந்தலோசநம் உத்காயதீநாம் த்வநி:" என்கிற உதாஹ்ருத ச்லோகத்திலிருந்து காட்டப்பட்டத்தனை — என்பது ஒரு ஸமாதானம். பாசுரத்திலிருந்தே காட்டப்பட்டதாகக் கொள்ள வேணுமென்றாலும் தாராளமாகக் கொள்ளலாம். எங்ஙனே யென்னில்;

4. நம்முடைய பூர்வாசார்யர்கள் ஸம்ஸ்க்ருத சாஸ்த்ரமர்யாதைகளையும் கொண்டே அருளிச்செயல் வியாக்யானங்கள் செய்தருளுகிறபடியாலே योगविभागप्रक्रियया [யோகவிபாக ப்ரக்ரியயா] கோபிகைகளின் கீதத்வநியையும் கொண்டார்களென்று கொள்ளக்கடவது. யோகவிபாகப்ரக்ரியையினால் வியாக்யானம் செய்திருக்குமிடம் திவ்ய ப்ரபந்தங்களில் வேறு காட்டமுடியுமோவென்னில், எத்தனையோ காட்டலாம். யாவருமறிந்த திருப்பல்லாண்டிலேயே யிருப்பதை யெடுத்துக்காட்டுகிறோம் காண்மின்.

5. * பையுடை நாகப் பகைக் கொடியானுக்குப் பல்லாண்டு கூறுவனே * என்னுமிடத்தில் கருடத்வஜனான எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடுவதாக உள்ளதேயொழிய சேஷசயனனான பெருமானுக்குப் பல்லாண்டு பாடுவதாக இல்லை. இங்குப் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்யானத்தை யெடுத்து ஸேவிக்க வேணும். "(பையுடை யித்யாதி) மங்களாசாஸனத்துக்கு விஷயமேதென்ன; அவ்விஷயத்தைச் சொல்லுகிறார்; தன்னோட்டை ஸ்பர்சஸுகத்தாலே விகஸிதபணமான நாகத்தினுடைய பகையுண்டு, பெரியதிருவடி; அவனைக் கொடியாகவுடையவனுக்கு." என்றருளிச் செய்திருப்பது பொருத்தமானது. இதற்கு அடுத்தபடியாக "அனந்தசாயியாய் கருடத்வஜனானவனுக்கு மங்களாசாஸனம் பண்ணுகிறேனென்கை. நகட்டிலழுத்தின மாணிக்கம்போலே திருவனந்தாழ்வானோட்டைச் சேர்த்தியால் வரும் அழகு நித்ய ஸ்ரீயாகவேணும்" என்கிற ஸ்ரீஸூக்திகளையும் காணுகின்றோம். மூலமிருக்கிற ஸந்நிவேசத்தில் இவ்வர்த்தம் எங்ஙனே கொள்ளப்பட்டதென்று பார்க்கவேணும். திருவனந்தாழ்வானோட்டைச் சேர்த்தி மூலத்தில் சிறிதும் காணப்படவில்லையேயென்று சிலர் திகைப்பர்கள். ஆசாரியர்கள் செல்லும் வழியின் மருமமறியாதவர்கள் இங்ஙனேயான பல பலவிடங்களில் திகைப்பர்கள். இவர்கள் தெரியவேண்டும் வழியை காட்டுவோமிங்கு.

6. யோகவிபாக ப்ரக்ரியையினால் இது மிகவும் பொருத்தமான வியாக்யானமாயிற்று. யோகவிபாக ப்ரக்ரியையைப்பற்றித் தெளிவுபடுத்த வேண்டுமவற்றை மேலே விளக்குவோம். ப்ரக்ருதத்தில், பையுடைநாகமென்கிற சொல்தொடர் அடுத்துள்ள பகை யென்னுஞ்சொல்லிலே அந்வயிப்பதாயிருந்தும், அப்படி அந்வயித்துப் பொருள் கொள்ளப் பட்டிருந்தும், மற்றொரு வகையான அந்வயமும் இங்குப் பெரியவாச்சான்பிள்ளையினால் கொள்ளப்பட்டது. (அதாவது) பையுடைநாகத்தானுக்குப் பல்லாண்டு என்பதாக. எனவே * பையுடை நாகப்பகைக் கொடியானுக்குப் பல்லாண்டு என்கிற ருஜுவான அந்வயமொன்று இருக்கச் செய்தேயும், * பையுடை நாகத்தானுக்குப் பல்லாண்டு என்றுங்கொண்ட அந்வயமானது யோகவிபாக ப்ரக்ரியா ஸித்தமென்றதாயிற்று.

7. யோகவிபாகத்தினால் இங்குச் செய்தருளப்பட்ட விவரணத்தில் என்ன விசேஷம்? என்று சிலர் கேட்கக்கூடும். 'கருடத்வஜனுக்கு' என்கிற பொருள் மட்டுமே இங்கு விவக்ஷிதமாகில் 'நாகப்பகைக்கொடியானுக்கு' என்னுமளவே போதுமானது. நாகத்திற்குப் பையுடைமை சொல்ல வேண்டிய ஆவச்யகதையில்லை. 'கருடன் பையுடைய



நாகத்திற்கே பகைவன்; வேறு நாகத்திற்குப் பகைவனல்லன்' என்னப்போகாதே. ஆகவே பையுடையவென்கிற விசேஷணம் வியர்த்தமாக வேண்டிவருகிறது. அங்ஙனமாகாமைக்காகவே யோகவிபாகம் பண்ணி அர்த்த விசேஷம் கொள்ளப்பட்டதென்பது நுட்பமாக உணரத்தக்கது.

8. ஸம்ஸ்க்ருத சாஸ்த்ர ந்யாயங்களை அருளிச்செயல் வியாக்கியானங்களிலே அவலம்பிப்பதுண்டென்பதைப் பெரியவாச்சான் பிள்ளையே ஸுஸ்பஷ்டமாகக் காட்டியருளுகிறார். எங்கேயென்னில், திருமாலை முதற்பாட்டில் "காவலில் புலனை வைத்து" என்றவிடத்தில், புலனை — இந்திரியங்களை, காவலில் வைத்து — காவலில்லாதபடி வைத்து — என்று வியாக்கியானம் செய்தருளின பெரியவாச்சான் பிள்ளை — "காவலில்லாதபடியென்றால் சப்தம் வழிக்குமோவென்னில், மீமாம்ஸகர் சப்தத்தை நியமித்தாகிலும் அர்த்தத்தை முக்யமாகக் கொள்ளுமாபோலே இங்கும் அர்த்த கௌரவத்தாலே சப்தத்தை நியமித்துச் சொல்லுகிறோம்" என்றருளிச்செய்திருக்கக் காண்கிறோம். மீமாம்ஸா சாஸ்த்ரத்திலிருந்து ப்ரக்ருதோபயோகியாக ஒரு த்ருஷ்டாந்தம் காட்டியருள வேணுமென்று கேட்கிறோம் அவர்களை. எவர்களை யென்னில்;

> "நம் ஆசார்யர்கள் அருளிச்செயல் வியாக்கியானங்களில் இன்ன இடத்தில் யோகவிபாகப்ரக்ரியையையே ஆதாரமாய்க்கொண்டு பொருளை இவ்வாறு அறுதியிட்டிருக்கிறார்கள் என இரண்டொரு இடமாவது உதாரணமாக எடுத்துக் காட்டுதல் அன்னாருக்கு அவசியமாகும்" என்று எழுதியுள்ளவர்களை.

9. பூர்வாசார்ய வ்யாக்யான ஸ்ரீஸூக்திகளை அன்னவர்களும் நிஷ்களங்கமாகவும் நிஸ்ஸந்தேஹமாகவும் உபபத்திகளையும் உதாஹரணங்களையும் காட்டியும் நிர்வஹிக்கக் கடமைப் பட்டவர்களாகையாலே "காவலில் புலனை வைத்து" என்றவிடத்துச் செய்தருளப்பட்ட விவரணத்திற்கு ஸமசீலமாக மீமாம்ஸகர்கள் அர்த்த கௌரவ த்ருஷ்டியாலே சப்தத்தை நியமித்திருக்குமிடம் இன்னதென்று காட்டவேண்டியது ஆவச்யகமல்லவா? நாம் எழுதியிருந்ததற்கு உதாஹரணமாக இரண்டோரிடமாவது காட்டவேணுமென்று இவர்கள் எழுதினார்கள். ஓரிடம் காட்டினோம். மற்றோரிடமும் காட்டுகிறோம். மற்றோரிடமென்பது * காசும் பிறப்பும் கலகலப்ப * என்னுமிடமேதான், இச்சொல் தொடரால் பூஷணத்வனி அடையாளமாகக் கூறப்படுகின்றதென்பது நிர்விவாதம். வ்யாக்யாதாக்களான பூர்வாசாரியர்களும் இங்ஙனே அருளிச்செய்திருக்கிறார்களென்பது உபயவாதி ஸம்மதம். இதற்கு உபபத்தி சொல்லவேணுமானால் யோகவிபாகப்ரக்ரியையினால் தான் சொல்லித்தீரவேணும். அதனை விவரிக்கிறோம் காண்மின்;

10. கலகலப்ப என்பது வாக்ய ஸமாப்தியன்று. தயிரரவம் கேட்டிலையோ வென்பதே வாக்ய ஸமாப்தியாகையாலே அதனால் ஒரு த்வநி தெரிவிக்கப்படுகிறதென்பது விவாதமற்றது. கலகலப்ப என்பது வினையெச்சமாகையாலே மேலோடே அந்வயித்தே தீரவேண்டியிருப்பதானது அபலபிக்க முடியாதது. ஆகவே, கலகலப்ப எனுமளவில் பூஷணத்வநி அடையாளமாகத் தெரிவிக்கப்படுவதாகச் சொல்லுவதற்கு ஔசித்யலேசமும் கிடையாது. ஆசார்யர்கள் சொல்லியிருக்கிறார்களே; அது எங்ஙனே பொருந்துவதென்றால், அவர்கள் அப்படியருளிச் செய்தது யோகவிபாக ப்ரக்ரியையினாலாகையாலே பொருந்தக் குறையில்லை.

11. அதாவதென்னென்னில்; கலகலப்ப என்பது மேலோடே அந்வயித்துப் போரா நிற்கச் செய்தேயும், அந்த அந்வயக்ரமத்திற்கும் குறையில்லாதபடி இடையிலேயொடித்து ஒரு அந்வயக்ரமம் விவக்ஷிதம். காசும்பிறப்பும் கலகலப்ப அரவம் கேட்டிலையோ? (அன்றியே) காசும்பிறப்பும் கலகலப்பக் கேட்டிலையோ? என்று அந்வயம் திருவுள்ளம் பற்றினார்கள்

ஆசார்யர்கள். இதுதான் யோகவிபாகப்ரக்ரியை. இங்கு பூஷணத்வனி அடையாளமாகக் கூறப்படுகிறதென்று ஒப்புக்கொள்ள வேண்டுமானால் இங்ஙனே நிர்வஹிப்பது தவிர வேறு வழி இல்லையாது.

12. இனி 'வாசநறுங்குழலாய்ச்சியர்' என்றவிடத்தும் யோகவிபாகப்ரக்ரியையை உபபாதிக்கிறோம். ஆய்ச்சியர் என்பது மேலே அந்வயித்துப் பொருள் தரவேண்டியதாயிருக்கச் செய்தேயும் அந்த அந்வயத்திற்கும் குறையில்லாமே இடையிலே யொடித்து 'வாச நறுங்குழலாய்ச்சியரரவம் கேட்டிலையோ?' என்பதாகக் கொண்டு கோபிகைகளின் கீதத்வனி அடையாளமாகக் கூறப்பட்டதாயிற்று. ஆய்ச்சியர் செய்யுமரவம் அதுதானே. ஆக, காசும்பிறப்பு மென்ற சொல் தொடரில் தயிரரவமொன்றுதான் க்ரமிகாந்வயஸித்தம். மற்றையிரண்டு அரவங்களும் யோகவிபாகப்ரக்ரியாஸித்தமே யென்பதில் ஐயமில்லை.

13. வையாகரணர்கள் கொள்ளுகின்ற யோகவிபாகத்திற்கு இன்னது பொருள், இன்னவிதமான உபயோகம் என்பதை நாம் நன்கு அறிவோம். பல வருஷங்களுக்கு முன்பு மஞ்ஜூபாஷிணீ பத்ரிகையில் * ஸர்வதர்மாந்த்யாதி சரமச்லோகத்திலுள்ள (மாசுச:) என்பது இரண்டு பதமா? ஒரே பதமா? என்பதைப்பற்றி நீண்ட விசாரம் செய்து ஒரு பெரிய க்ரந்தமெழுதி வெளியிட்டிருக்கிறேன். அதில் ப்ராஸங்கிகமாக * सह सुपा — ஸஹ ஸுபா.* என்கிற பாணினிஸூத்ரத்தையெடுத்து, அதில் வையாகரணர்கள் காட்டியிருக்கிற யோகவிபாகத்தை விவரிக்குமிடத்தில் பல மருமங்களை விளக்கியிருக்கிறேன். இப்போதாக பிறரிடம் கேட்டுத் தெளிவின்றித் தெரிந்து கொண்டிருப்பார் பக்கலிலே நாம் தெரிந்து கொள்ள வேண்டியதொன்றில்லை. நாம் எழுதியுள்ளதைச் செவ்வனே பாராமல் வீணாக ஏடுகளை வளர்த்தியிருப்பதற்கு வருந்துகிறோம். 'யோகவிபாக ஸித்தம் இது' என்று நாம் எழுதியிருக்கவில்லை. யோகவிபாகப்ரக்ரியயா என்றே எழுதியிருக்கிறோம். வையாகரணர்கள் செய்யும் யோகவிபாகத்தை யொத்ததானவொரு ப்ரக்ரியையினாலே யென்பது விவக்ஷிதம்.

14. திருப்பாவையில் நோற்கப்படுகிற நோன்பு ஹோளாதிகரண ஸித்தம் என்று பூருவர்கள் அருளிச்செய்துள்ளார்கள். திருப்பாவை நோன்பைப்பற்றி ஹோளாதிகரணத்தில் என்ன சொல்லியிருக்கிறதென்று இவரையே கேட்கலாம். இது அந்வயிக்கவில்லையென்று ஹோளாதிகரணந்யாய ஸித்தமென்று சிலர் திருத்துகிறார்கள். * வீடுமின் முற்றத்தினிட்டு ப்ரவேசத்தில் "அவருத்ராதிகரணந்யாயம் ப்ரஸங்கிக்கும்" என்ற ஸ்ரீஸூக்தியையுங் காண்பது. இங்கும் திருத்துகிறார்கள். திருத்தவேண்டிய அவசியமில்லை. அது நிற்க. வையாகரணர்களின் யோகவிபாகத்தை நாமெடுத்துக்காட்டியது, இடையில் ஒடித்து அந்வயிப்பதானது ஸம்ஸ்க்ருத சாஸ்த்ர ஸம்மதமான ஒரு ரீதிக்கு ஒத்தது என்று காட்டுதற்கேயென்க. ஏகாந்வயமாயிருக்கிற ஒரு ஸூத்ரத்தை இரு பகுதிகளாகப் பிரித்து இரு வாக்யங்களாக அமைத்து இரு கருத்துக்களைக்கொண்டு இஷ்டமான சொல் வடிவத்தை ஸாதித்துக்கொள்ளுதல் யோகவிபாகப்ரக்ரியை என்பதைப் பூர்வபக்ஷியும் ஒப்புக்கொள்ளுகிறார். ஸூத்ரமாகவேயிருக்க வேணும், இஷ்டமானவொரு சொல் வடிவத்தை ஸாதித்துக்கொள்வதற்காகவேயிருக்க வேண்டுமென்கிற நிர்ப்பந்தங்கள் கூறுதலானது, "முகத்திற்கு சந்திரனை ஒப்புச் சொல்வதானால் சந்திரனுக்குப் போலே முகத்திற்கும் க்ரஹணம் பிடிக்கவேண்டும்; திருவடிக்குத் தாமரையை ஒப்புச்சொல்வதானால் சுற்றிலும் வேலம்பாசி யிருந்து தீரவேண்டும்" என்று சொல்லுவதோடொக்குமத்தனை

15. இவ்விஷயத்தில் முக்கியமான வார்த்தை கேண்மின். ஏகாந்வயமான ஒரு வாக்கியத்தை இடையில் ஒடித்து வாக்யபேதம் பண்ணிப் பொருள் கொள்ளும் முறை திவ்ய ப்ரபந்தங்களிலுண்டென்பதை மறுக்கவொண்ணாதபடி * பையுடை நாகப்பகைக்கொடியானுக் கென்னுமிடத்தை யெடுத்துக்காட்டினோம். அதனை யோகவிபாகப்ரக்ரியா ஸித்தமாக நாம



வழங்கிவருகிறோம். இப்பெயரால் வழங்கக்கூடாதென்றால், இவர்கள் வேறு பெயர் வைக்கட்டும்; அப்பெயரைக் கொண்டே வழங்குவோம். இதுவொரு ஸாங்கேதிகவ்யபதேசமத்தனை. பெரிய திருமொழியில் (8–10–1.) * நால்வேதங்கண்டானே என்றவிடத்தில். நான்கு வேதங்களையுங்கண்டவனே! என்று ஒரு ஆசிரியர் பொருள் கூறினார்; நான்கு வேதங்களாலும் காணப்பட்டவனே! என்று பொருள் கொள்வது சிறக்குமென்று கொண்ட மற்றோராசிரியர் 'कर्तरि யன்று, कर्मणि யிடாய்' என்றுரென்று வியாக்கியானத்தில் காண்கிறது. இது வழக்கன்று என்று சில தமிழர்கள் ஆக்ஷேபிக்கிறார்கள். அப்படி இப்பூர்வபக்ஷியும் ஆக்ஷேபித்துக் கொண்டிருக்கட்டுமே. சப்தப்ரயோகத்தில் என்ன இருக்கிறது. விஷயமன்றோ ப்ரதானம். பூஷணத்வனியும் அடையாளமாகச் சொல்லப்பட்டதாய் ஆண்டாள் பாசுரத்திலிருந்தே கொள்ளப் படுவதற்கு நாம் கூறும் உபபத்திக்குக் கண்ணழிவுண்டோ? எம்பெருமான் நரநாராயணரூபேண திருமந்திரத்தை வெளியிட்டது பதரிகாச்ரமத்திலே யென்று சொல்ல வேண்டிய வொருவர் ப்ருந்தாவனத்திலேயென்று சொல்லிவிட்டாரென்று வைத்துக் கொள்வோம்; இந்த விபர்யயத்தினால் வரலாறு பொய்யாய் விடுமோ? 'ப்ருந்தாவனத்திலே யென்று சொல்லாதே, பதரிகாச்ரமத்திலென்று சொல்லு' என்று திருத்தலாமே யொழிய வரலாற்றை இல்லை செய்ய முடியாதன்றோ.

16. இப்படி நாமெழுதுவதைக் கொண்டு, யோகவிபாகப்ரக்ரியயா என்று முன்பு நாமெழுதியது பிசகென்று நாமே இசைந்து விட்டதாகப் பறை சாற்றுவர் பிறர். * துஷ்யது ந்யாயேந இது எழுதினபடி. ஹோமம் செய்யாநின்ற ஒரு வைதிகர் दधिकरणकहोमம் செய்யும் போது दध्ना जुहोमि என்று சொல்லுவதா? दधिना जुहोमि என்று சொல்லுவதா? என்று ஐயங்கொண்டார். நிர்ணயிக்க வழியில்லையாயிற்று. யஜ்ஞத்தில் அபசப்த ப்ரயோகம் பண்ணினால் ப்ரத்யவாயம் வருமேயென்றஞ்சி "दधि शब्दस्य तृतीयान्तेन जुहोमि" என்றாராம். * वपुरादिपु योऽपि कोऽपि वा गुणतोऽसानि यथातथाविधः * என்று ஆளவந்தார் தாமுமருளிச் செய்தார். ப்ரதாந விஷயத்திற்கு ப்ரச்யுதியில்லை யென்பதற்காக இத்தனை காட்டிற்று.

17. இந்த யோகவிபாகப்ரக்ரியா ப்ரஸ்தாவத்தையே விட்டிடுவோம். மூவாயிரப்படிகாரரும் ஆறாயிரப்படிகாரரும் * உத்காயதீநாம் அரவிந்தலோசநம் * என்கிறபடி ஸ்ரீபாகவதச்லோகத்தை யெடுத்து வியாக்கியானிக்குமவஸரத்தில் கோபிகைகளின் கீதத்வனியை ப்ரஸ்தாவித்திருக்கிறார்களேயல்லது வேறில்லை. கண்ணனுடைய கண்ணழகிலேயீடுபட்டுப் பாடுகிறவர்களென்கிற ஸ்ரீஸூக்தியானது இது திருப்பாவை ஸ்ரீஸூக்தி விவரணபரமன்று என்பதை ஸ்பஷ்டமாகக் காட்டித் தரும். ஆகவே தயிரரவம் என்கிற திருத்தம் ஸர்வாத்மநா நிஷ்ப்பலம்.

18. அரவும் என்கிற சொல்வடிவமே கிடையாதென்பது தலையான வாதம். நீல், கோல், மால், வால் இத்யாதிகளான மெய்யீற்றுச் சொற்கள் போல அரவ் என்கிற மெய்யீற்றுச் சொல்லுமிருக்கலாம் என்கிற வாதம் வாய் கொண்டு சிரிக்கத் தக்கதன்று. நீல், கோல் முதலியவை ப்ரஸித்த ப்ரயோகங்கள். * நீலாழிச்சோதியாய் * என்கிறார் நம்மாழ்வார். அரவ் கறவ், குரவ் என்பன எங்கும் கேட்டதில்லை. * கேட்டறியாதன கேட்கின்றேனென்றாரே பெரியாழ்வார்.

19. அரவ் என்றில்லை; அரவு என்கிறேன். அதன் மேல் உம்மையேறி அரவும் என்றாகிறதென்கிறேன் என்னில்; எப்படிச் சொன்னாலும் ஒலியென்கிற பொருள் கிடைக்காது கிடைக்காது கிடைக்காது. ஸர்ப்பமென்கிற பொருள்தான் கிடைக்குமையா! உண்மையில் நமக்குக் கிடைக்கமாட்டாத பொருள்களையும் நீதிமன்றங்களில் வழக்காடிப் படாதன பட்டுக்

இடைக்கும்படி செய்து கொள்ள முடியும். எப்பாடு பட்டாலும் அரவென்னுஞ்சொல்லில் ஓசையென்னும் பொருளைப் பெற முடியாதென்பது திண்ணம். வீணான சில நிகண்டுகளைக் கண்டு எதிரம்பு கோக்கப் புறப்படவேண்டா. அரவு என்பதற்கு ஓசையென்னும் பொருள் உண்டென்று * துஷ்யதுர்யாயேந கொண்டாலும் அதன் மேலேற்றப்படுகிற உம்மை காசுக்கு முதலாதையா ! உம்மை அஸமஞ்ஜஸபாஷியென்று ஸ்தாபிக்கத்தானுதவும்.

20. திருப்பாவை (6) * புள்ளும் சிலம்பினகாணில் புள்ளுமென்றவிடத்து உள்ள உம்மை இவ்விடத்திறகு ஒருகாலும் த்ருஷ்டாந்தமாக மாட்டாது. அது பாசுரத்தின் தொடக்கத்திலேயுள்ள உம்மை. அது அநுக்த ஸமுச்சயத்தைக் காட்டியே தீரவேண்டிய நிர்ப்பந்தமுடையது. ஒருவன் பேசத் தொடங்கும்போதே 'தேவதத்தனும் வந்து விட்டான்' என்றால் அந்த உம்மை ஸந்தர்ப்பம் நோக்கி அநுக்தமான தொன்றை ஸமுச்சயித்தே தீருமல்லவா ? அது போலவே தான் புள்ளுமென்ற இவ்விடத்தும். (திருப்பாவை) * புள்ளின் வாய்கீண்டானிலுள்ள (புள்ளும்) என்ற சொல்லின் மேலேறியுள்ள உம்மை எப்படி உக்த ஸமுச்சயமே காட்டி அநுக்த ஸமுச்சயத்தைக் காட்டாதோ, அப்படியே (அரவும்) என்ற சசவிஷாணோத்தர சகாரமும் ஆனைச்சாத்தம் கலந்து பேசின பேச்சரவமாகிற உக்தத்தின் ஸமுச்சயத்தைக் காட்டுமே யொழிய அநுக்தமான கோபிகாகீதத்வனியைக் காட்டவே காட்டாது.

21. முன்பு நாமெழுதியிருந்த வியாஸத்தில் — "வடமொழியில் சகாரம் போல் தென்மொழியில் உம்மை. சகாரத்திற்கு உக்தஸமுச்சயம்போல் அநுக்த ஸமுச்சயமும் பொருளாவதுண்டு..........." இத்தியாதியாக எழுதப்பட்டிருப்பதை ஸ்வமதாநுகூலமாக இவர்கள் காட்டியிருப்பதைக் காணும் போது *விலைநச் சிரித்திட்டேனே* என்ன வேண்டியதாகிறது. "உக்தஸமுச்சயம் எவ்விடத்தில் இடம் பெறாதோ அவ்விடத்தில் தான் அநுக்த ஸமுச்சயம் இடம் பெறும்" என்று நாம் ஸ்பஷ்டமாக எழுதியிருப்பதையும் எடுத்துக் காட்டிவிட்டு, இதனால் ஸ்வமதம் தேறிவிட்டதாகக் காட்டுவது விலக்ஷணபாண்டித்யமே. * உத்காயதீநாம் * என்கிற ஸ்ரீபாகவதச்லோகம் ஆண்டாளுடைய அநுஸந்தானத்திலிருந்ததென்பதை நாம் எழுதியிருப்பது வாஸ்தவம். அநுஸந்திக்கப்படும் சுலோகத்திலுள்ளதையெல்லாம் பாட்டில் சொல்ல வேணுமென்கிற நிர்ப்பந்தமுமில்லை. சொல்லுகிற வழக்கமுமில்லை. * பர்வதாஇவ நிஷ்க்ராம ஸிம்ஹா கிரிகுஹாசயா: * என்ற ஸ்ரீராமாயண ச்லோகத்தை யநுஸந்தித்து அருளிச் செய்த பாசுரத்தில் பர்வத குகை சொல்லப்பட்டதேயொழிய பர்வதம் மட்டும் சொல்லப் படவில்லையே. அரவு என்று இல்லாத சொல்லொன்றை யுண்டாக்கி அதன்மேல் உம்மையை யேற்றினாலும் அது ஆய்ச்சியர் பாட்டொலியைக் காட்டமாட்டாதென்பது எப்படி கல்வெட்டோ, அப்படியே ஆண்டாளுடைய அநுஸந்தானத்திலிருக்கிற ச்லோகத்திலுள்ள கீதத்வனியானது திருப்பாவையில் வந்துபுகமாட்டாதென்பதும் கல்வெட்டு. வந்து புகுமெனினும் அதனைப் பெறுவிக்கவல்லது உம்மையன்று என்பதைத் திண்ணமாக வெண்ணுக.

22. "அரவம் என்னுஞ் சொல் தமிழ்மொழிக்கே உரியது" என்கிற வாதம் மிகத் தவறு. பல்லாயிரக்கணக்கான ஸம்ஸ்க்ருதபதங்கள் திரிந்தும் சிதைந்தும் தத்பவதத்



ஸமங்களாகியும் தென்மொழியில் சேர்ந்துள்ளன. சப்பாணியென்கிற சொல் தென்மொழியே யென்று மயங்கியிருந்தவர்கள் ஒருஸமயம் நம்மிடம் உண்மையுணர்ந்து வியந்தனர். கையோடு கை சேர்த்துக் கொட்டுதல் சப்பாணி கொட்டுதலெனப் படுகிறது. (ஸஹபாணி) என்கிற வடசொல்லே சப்பாணியாயிற்று ரவ: என்னும் வடசொல்லே அரவமாயிற்று என்பதை மறுக்க இவர்களிடம் என்ன சரக்குள்ளது. "அரவப்பொருள்" என்னும் தொல்காப்பியச் சூத்திரம் 'அரவமென்னுஞ்சொல் தமிழ்மொழிக்கே உரியதென்பதைக் காட்டுகிறது' என்கை ஆடவர் பேச்சன்று, பெண்டிர் பேச்சு. காவ்யமென்னும் வடசொல்லே காப்பிய மென்றாயிற்றென்பதை யுணராது, காப்பியமென்பது சிறந்த தமிழ்ச் சொல் என்றொருவனெழுதினால் அது எடுத்துக்கழிக்கவும் தகுதியற்றதன்றோ. இது வடமொழியன்று. தென்மொழியேயென்று நிர்ணயிப்பதற்கு அதிகாரி யார்கொல் ? ' வடமொழியோடு ஒரு வகையான தொடர்புமில்லாத அச்சத் தமிழிலேயே நான் ஒரு கட்டுரை யெழுதுகிறேனென்று ப்ரதிஜ்ஞை செய்து எழுதத் தொடங்கின வொருவன் "உலகில் தமிழ்ப் பாடையானது" என்று ஆரம்பித்தானாம லோகமென்னும் வடசொல்லே தமிழில் உலகென்றாயிற்றென்றும், த்ரமிடமென்கிற ஸம்ஸ்க்ருதபதமே தமிழென்றாயிற்றென்றும் பாஷையே பாடையாயிற்றென்று முணராத அவனைப்போல் பல்லாயிரவருளர். 'அரவமென்னுஞ் சொல் வடமொழித் திரிபன்று' என்று ஒரு மஹாபுருஷனே யெழுதியிருந்தாலும் "தென்னுரையில் கேட்டறிவதுண்டு அதனை யாம் தெளியோம்" என்ற திருமங்கையாழ்வார் ஸ்ரீஸூக்திப்படியே அது உதறித்தள்ளத் தகுந்ததேயாம். உயிரியலில் அரவம் என்கிற சொல் எடுத்தாளப் பட்டிருக்கவுமில்லை. "அரவப் பொருள்" என்றதைக் கொண்டு இப்படி மயங்குவாருமுண்டோ? இருள் துயக்கு மயக்குகள் உருக்கொண்டவாறு என்னே ! * வநப்ரிய: பரப்ருத: பிக: கோகில இத்யபி * என்று அமரம் வாசித்தவன் (இத்யபி: கூஜதி) என்றானென்று கேட்டிருந்தோம். तस्यैप तु सहोदरः ॥

23. உலகம் உலகு, கதவம் கதவு, இலவம் இலவு, அரவம் அரவு என்றடுக்குவது, மண் சுவரின்மேல் மாடமாளிகை யடுக்கு நிருமிப்பதொக்கும். புருஷரத்னங்களான பண்டிதமணிகளை யணுகிக் கேட்கப் பெறறால் இத்தகைய அபஹாஸ்ய ப்ரஸங்கங்கள் இடம் பெற்றிருக்கமாட்டா. विधिस्तु दुरतिक्रमः । * கும்பகர்ணோ ஹகாரோஸ்தி ஹகாரோஸ்தி விபீஷணே; அயஞ்ச ராக்ஷஸ ச்ரேஷ்டோ ஹாஹணோ ந து ராவண: *

24. "(5) இனி ஐந்தாம் பிரிவில் கூறப்பெற்றிருக்கும் விஷயத்தை ஆராய்ந்து அறுதியிடுவோம்" என்று தொடங்கி யெழுதியுள்ளவை மிகவும் அஸாரமானவை. மேலே நிகழ்ந்த நிரூபணங்களினால் அவை நிச்சேஷமாகத் தொலைந்தொழிந்தவை. ஒரு விஷயத்தைப் பலவழிகளில் நிரூபணம் செய்வது எங்குமுள்ளது, யாவர்க்குமுள்ளது.

25. * சக்ஷுர் தேவாநாம் உத மர்த்யாநாம் * என்கிற ச்ருதியை யுதாஹரித்து நாமெழுதியிருந்ததற்குப் பிறர் எழுதியுள்ள ஸமாதானம் சிறிதுமேலாது. எதிலும் விசேஷ்ய வாசகமான சொல் மிக முக்யமானது. மேற்கோளாகக் காட்டப்படும் ப்ரமாணம் உத்தேச்யமான விசேஷ்யத்தோடு ஸங்கதமாயிருக்க வேணும். * கண்ணாவானென்றும் மண்ணோர் விண்ணோர்க்கு * என்றருளிச் செய்த ஆழ்வார் திருவேங்கடமுடையானை விசேஷ்ய வஸ்துவாகக் காட்டியுள்ளார். உபாத்தச்ருதி வாக்யத்தில் அது இல்லை, மேற்கோளாகக்

காட்டப்படுகிற வசனம் பாசுரத்தின் ஏகதேசத்திற்கேயொழிய ஸம்பூர்ணமான பாசுரத்திற்கு அன்று தான். இவ்விஷயம் விவாதாஸ்பதமான திருப்பாவைப்பாவுக்கு மொக்கும். ஆகவே நாமிட்ட தூஷணம் வெற்றி பெற்றே நிற்பதாம்.

## உ ப ஸ ம் ஹ ா ர ம்.

வ்யர்த்தமான இந்த விசாரத்தை வீணாக வளர்த்திக் கொண்டு போகின்றவர்கள் எந்த விஷயத்திலும் விபரீதமேயெழுதி நிற்பதை அஞ்ஜலியுடன் ஏற்கும் படியான வொரு விஷயத்தையெடுத்துக்காட்டி இக்கட்டுரையை முடிப்போமாக. விவாதபாசுரத்தின் ஆருயிரப் படியில் "விக்ரேதுகாமா கில கோபகந்யா" என்கிற ச்லோகம் அழுதமாக உதாஹரிக்கப் பட்டுளது. அதை யெடுத்துக் காட்டுகின்றவிவர்கள் (கோபகந்யகா) என்று அஸக்ருத் எழுதுகிறார்கள். இப்பாடம் ஒரு பதிப்பிலும் கண்டதன்று. சந்தஸ்ஸுக்கும் சேராதது. எதிலும் விபர்யயம் தவிர வேறில்லை யென்பதைத் தெய்வமன்றோ காட்டி வைக்கின்றது. சொல்லோடு பொருளோடு வாசியற எல்லாம் விபரீதமான விவர்களோடு விவாதம் அஸ்மாகம் கிம் நு சோபதே,

उत्तरपवित्रयात्रामार्गे मङ्गलगिरौ नृसिंहहरेः ।
पुरतो निपद्य लिखितं तदिदं नरहरिनखाग्रवज्जयतु ॥

தமிழ்நா... 
2082338
சென்னை 600 013

கிடைக்குமிடங்கள்:—

(1) க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.
(2) கராலபாடி ராதாகிருஷ்ணய்யா,
229, கோவிந்தப்ப நாயகன் தெரு, மதராஸ்—1.
(3) G. ரங்கைய நாயுடு,
26, குருவப்ப செட்டி தெரு, சிந்தாத்ரிபேட்டை, மதராஸ்—2

(இவர் சென்னையில் ப்ரசாரம் செய்ய நியமிக்கப்பட்டவர்.)

If un-delivered please return to:
P. B. ANNANGARACHARYA,
L. KANCHEEPURAM.

Edited and Published by P. B. Annangaracharya Swami
for Madras Sathgrantha Prakasana Sabha.
Printed by T. A. P. Srinivasavaradan at Sri Venkateswar Press,
Sannidhi Street, Chinna Kancheepuram.